## உள்ளே...

பெரியாரியம்: வேர்களைத் தேடி 4
*- தலையங்கம்*

பெரியாரின் ‘வளர்ச்சி நோக்கிய மனிதாபிமானம்’ 5
*- கொளத்தூர் மணி*

பெரியார் பேசிய சுயமரியாதையின் உள்ளடக்கம் 7
*- செந்தில், இளந்தமிழகம்*

பெரியார் பார்வையில் ‘காதல்’ 15
*- தோழர் கனல்மதி*

பெரியாரும் இந்தியப் பொதுவுடைமையாளர்களும்: முரணும் உறவும் 19
*- க. காமராசன்*

பெரியார் கருத்தியலின் அய்ந்து முக்கியக் கூறுகள் 25
*- பேராசிரியர் ந. முத்துமோகன்*

கற்பின் பெயரால் ... 30
*- ஓவியா அன்புமொழி*

பெரியார் பார்வையில் சமயமும் பெண்ணும் 33
*- முனைவர் இந்திரா*

சுற்றுச் சூழலில் ஜாதியம் - பார்ப்பனியம் 36
*- நக்கீரன்*

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்... 42
*- மனுஷ்யபுத்திரன்*

நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

**திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்**
**நவம்பர் 2019 / ரூ.20**
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
**கொளத்தூர் மணி**
**விடுதலை இராசேந்திரன்**

வினியோகப் பொறுப்பு
**சூலூர் பன்னீர்செல்வம்**

இதழ் வடிவமைப்பு
**வெல்கின் கணினி**

அலுவலக முகவரி
**95, டாக்டர் நடேசன் சாலை**
**அம்பேத்கர் பாலம்**
**மயிலாப்பூர், சென்னை 600 004**
**தொலைபேசி எண்:**
**044-24980745**

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**இரா. உமாபதி**
**72992 30363**
**வெ. மனோஜ்**
**7373684049**

# பெரியாரியம் : வேர்களைத் தேடி...

இந்த இதழில் – பெரியாரியலின் பன்முகப் பார்வைகளை அலசும் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 2019 ஆகஸ்ட் 22 முதல் 25 வரை தஞ்சையில் ‘‘வேளாங்கன்னி கலை அறிவியல் கல்லூரி’’ காட்சி ஊடகத் துறை மற்றும் ‘ரிவோல்ட்’ அமைப்பு இணைந்து ‘ஊடகங்களில் பகுத்தறிவு மற்றும் சமூக நீதியின் வேர்களைத் தேடி’ எனும் தலைப்பில் ஆய்வரங்கம் ஒன்றை நடத்தின. அதில் பங்கேற்று ஆய்வாளர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், பெண்ணியவாதிகள், பெரியாரியம் குறித்து விரிவான ஆய்வுக் கருத்துகளை முன் வைத்தனர். பெரியாரியம் பற்றிய பல தொகுப்பு நூல்களை உருவாக்கிய பசு. கவுதமன் முயற்சியில் இந்த ஆய்வரங்கம் நடந்தது. அரங்கில் உரையாற்றிய தோழர்கள், எழுத்து வடிவில் வழங்கிய கட்டுரைகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. இனி வரும் இதழ்களிலும் ஆய்வுக் கட்டுரைகள் தொடர்ந்து வெளி வரும்.

கடவுள் – மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு என்ற எல்லையோடு பெரியாரியம் சுருக்கப்பட்டு விடுகிறது. மாறாக பெரியார் ஏன் இந்த எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்து மக்களுடன் உரையாடினார்; போராடினார் என்பதற்கான அவரது சமத்துவ மனித நேயப் பார்வை முற்றாக இருட்டடிக்கப்பட்டு விடுகிறது.

இந்தியாவை இந்துக்களின் தேசம் என்று அறிவித்து அதற்கான குறியீட்டு நாயகன் ‘ஸ்ரீராமபிரான்’ என்ற சேதியை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பார்ப்பனியம் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இந்தியா பெரும்பான்மை இந்துக்களின் தேசம் என்ற புனைவு, மக்கள் பொதுப் புத்தியில் திணிக்கப்படுகிறது. அதற்காக வரலாறுகளைத் திரிக்கிறார்கள். புனைவுகளை வரலாறு என்று நிலைநாட்டத் துடிக்கிறார்கள். வேதகாலம் தொடங்கி ‘மோடி’ காலம் வரை பார்ப்பனியம் தனது மேலாதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்த புதிய புதிய உருமாற்றங்களை எடுத்து வருவதை நாம் புரிவதற்கும் உணர்வதற்கும் ‘பெரியாரியம்’ தந்த வெளிச்சம் தான் நமக்கு இன்று வழிகாட்டுகிறது. சமூக அரசியல் விடுதலைக்காக முன்மொழியப்பட்ட வேறு பல தத்துவங்களும்கூட பெரியாரியலை ஏற்க வேண்டிய கட்டாயத்தை சமூக எதார்த்தம் உருவாக்கியிருக்கிறது.

இந்த நிலையில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சும் வகையில் ஏராளமான புதிய இளைஞர்கள் இன்று பெரியாரியலை நோக்கி வருகிறார்கள். குறிப்பாக பெண்ணுரிமையையும் பெண் விடுதலையையும் ஏற்றுக் கொண்ட பெண்கள், பெரியாரியத்தை உயர்த்திப் பிடிக்கிறார்கள். தங்கள் விடுதலைக்கும் சுயமரியாதைக்குமான சிந்தனைகளை பெரியாரிடமே தேடுகிறார்கள். வரலாற்றில் நிகழ்ந்துள்ள முக்கியமான இத்திருப்பம் பெரியாரியலுக்கு வலிமையான அடித்தளத்தை உருவாக்கியிருக்கிறது என்று உறுதியாகக் கூறுகிறார்கள்.

பெரியாரியம் – மதம் அல்ல; அது ‘‘கெட்டித் தட்டிப்போன’’ மாற்றத்துக்கே உள்ளாக்க முடியாத பழமைவாதமல்ல. காலத்தின் தேவைக்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ‘நெகிழ்ச்சி’ப் போக்குகளை உள்ளடக்கியது. மனித ‘சமத்துவம் – சுயமரியாதை’ மட்டுமே அதன் இலக்கு; அந்த இலட்சியப் பாதையை மடைமாற்றிட புதிய முகமூடிகளை அணிந்து வரும் சக்திகளை எதிர்கொள்ளவும், அதன் புனைவுகளை தோலுரித்து முன்னேறிச் செல்லவும் பெரியாரியல் குறித்த ஆய்வுகளும் மக்கள் உரையாடல்களுமே நமக்கான கருத்தாயுதங்கள்.

அந்தப் புரிதலில், இந்த இதழிலும் அடுத்து வெளிவரப்போகும் இதழ்களிலும் இடம் பெறும் ஆய்வுகள் பெரியாரியல் நோக்கிய பயணத்துக்கு புதிய வெளிச்சங்களை பாய்ச்சும் என்று நம்புகிறோம்.

# பெரியாரின் 'வளர்ச்சி நோக்கிய மனிதாபிமானம்'

- கொளத்தூர் மணி

பெரியாரை மூலத்தில் படிப்போம் என்பது தான் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிற செய்தி, எனவேதான், குடிஅரசு என்ற இதழை தொகுத்துத் தர வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டோம். பெரியாரைப் பற்றி விளக்க வருபவர்கள், அவர்கள் விருப்பத்திற்கு விளக்கிக் கொண்டிருந்தார்கள். ஒரே பிரம்மச் சூத்திரத்திற்கு வெவ்வேறு உரையெழுதினார்கள். உரை எழுதப்பட்டதெல்லாம் தனித்தனி மதமாக மாறியது. சங்கரர் எழுதிய உரை, இராமானுஜர் எழுதிய உரை போன்றவை தனித்தனி மதங்களாகிப் போனது அது போன்று ஆகிவிடக் கூடாது. பெரியார் தன் நீண்ட வாழ்நாளில் அறிஞர்களை நோக்கி பார்த்து எழுதியவராக இருந்தது இல்லை. பாமரர்களைத் தேடிச் சென்று, அவர்களுடைய மொழியில், அவர்களின் அளவுக்கு இறங்கிச் சென்று, பேசிய உரைகள் தான் அவர்களுடையச் சிந்தனைகளாக அதிகம் நாம் பெறுகிறோம்.எழுதியதை விட பேசியது தான் அதிகம். பெரியார், கோட்பாட்டு ரீதியாக, கோட்பாடு களுக்கு உள்ளடக்கி தனியாக எதையும் எழுதவில்லை. எனவே அதைப் புரிந்து கொள்பவர்கள் அதற்கு ஆளுக்கொரு விளக்கும் கொடுத்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள்.

பெரியாரை முழுமையாக புரிந்து கொண்டிருக்கிற அறிஞர்களைத் தான் பேச வைத்து அதை நூலாக்கி அதை நிரந்தர பதிவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் தோழர் பசு. கவுதமன் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். ஏற்கெனவே அவர் பெரியாரை பல தொகுதிகளாக நமக்கு கொடுத்திருக்கிறார். 'ஈ.வெ.இராமசாமியாகிய நான்' என்ற இரண்டு தொகுதிகளை கொடுத்துள்ளார். அடுத்து 'நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?' என்ற அய்ந்து தொகுதிகளாக கொடுத்து இருக்கிறார். இப்படிப்பட்ட முயற்சிகள் பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. பெரியாரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்காகத்தான் இந்த கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சுருக்கமாக தன் கொள்கையைப் பற்றி பெரியாரிடம் கேட்டபோது அவர் சொன்னார், 'மனிதாபிமானம், வளர்ச்சிப் போக்கில் மனிதாபிமானம்' அவ்வளவு தான் என் கொள்கை என்று சொன்னார். மிகச் சுருக்கமான உரையாக அவர் அதை வைத்தார். அவர் மனிதாபிமானத்தைப் பற்றி சொல்லும்போது, மனித சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்பினார். கையிலோ, காலிலோ, நாசியிலோ, கண்ணிலோ வலி வந்தால் எப்படி எனக்கு வலிக்கிறது என்று சொல்கிறோமோ அதைப் போல, உலகில் உள்ள மானுட சமுதாயத்தில், ஒரு பிரிவில் பாதிப்பு வந்தாலும் நமக்கே வந்ததைப் போல உணர்ந்து கொள்ள வேண்டும்' என்பது அவருடைய விருப்பமாக இருந்தது. அதில், ஜாதி ஒழிப்பைத் தான் முதன்மை நோக்கமாகக் கொண்டார். அடுத்து ஜாதிக்கு இணையாக பாதுகாக்கப்பட்ட பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராக பெண்ணுரிமைக்கு வந்தார். அடுத்தது பொதுவுடமை, தனித்தமிழ்நாடு. ஆகியவை சேர்த்த பகுத்தறிவு. இப்படித்தான் நாம் அவரை அடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆனால், அதை இந்த சமுதாயத்திலிருந்து, இந்தச் சமுதாயத்திற்கு தேவையான, ஏற்கெனவே உருவாக்கி வைத்துள்ள தத்துவங்களிலிருந்து உள்ள பிழைகளை நீக்கிவிட்டு, காலத்திற்கு ஏற்ப முன்வைக்கிற ஒரு தத்துவ ஆசிரியராக பெரியார் இருக்கவில்லை. உலகத்தைப் பார்த்து புரிந்து, அதில் பாதிக்கப்படுகிற மக்கள் அவர்களுக்கான தீர்வாக எதை முன்வைப்பது, அதை உருவாக்குபவர்களுக்கு எதிரான இயக்கமாக எப்படி முன்னெடுப்பது என்பதே அவருடைய வாழ்நாள் முழுவதுமான பணியாக இருந்திருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் பல கட்டங்களாக தாண்டியிருக்கிறார். இசையைப் பற்றி நாம் சொன்னோம், நோகாமல் விரலசைத்து இசைக்கிற

இசைக்கும், உழைப்பை செலுத்தி ஆவேசமும் அதிர்வும் அதிகம் கொடுக்கும் பறையிசைக்கும் எவ்வளவு வேறுபாடு. இசை என்று வரும்போது கூட அவர் பார்ப்பனரல்லாத இசைக் கலைஞர்களை வைத்து இசை நிகழ்ச்சிகளை நடத்த முன்வருகிறார். 1930 இல் தன்னுடைய மாநாட்டில் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்துகிறார். அடுத்து நாற்பதுகளில் தமிழிசை இயக்கம்.

பெரியார் சொன்னார், தெலுங்கில், சமஸ்கிருதத்தில் பாடினால் கூட புரியாது, இவன் தமிழில் பாடி மூட நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறான் என்று சொன்னார். அதற்குத் தான், தமிழில் பாடு, தமிழனுக்கானதைப் பாடு என்று; வெறும் தமிழில் மட்டும் பாடுவது மட்டும் போதாது தமிழனுக்கானதைப் பாடு என்றார். அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டே இருந்தார். ஒவ்வொரு முன்னெடுப்புகளிலும் சமுதாயத்தோடு சேர்ந்து தான் பயணித்தார். முன்னே சென்று இலக்கை காட்டி விட்டு அங்கே நின்று கொண்டிருக்கவில்லை. சமுதாயத்தையும் சேர்த்து அழைத்துக் கொண்டுச் செல்லவேண்டும் என்று தான் அவர் முயற்சித்தார். அதில் பல முறை அவர் வெற்றியும் கண்டிருக்கிறார். இன்றைக்கு இருக்கிற சூழலில், இந்த மனித சமுதாயத்திற்கு, அவர் சொல்லுவார், 'உலகில் உள்ள எந்தெந்த ஸ்தாபனங்களால், எந்தெந்த வகுப்புக் கூட்டங் களால் மனித சமூகத்திற்கு இடைஞ்சல்களும், முற்போக்குக்கும் சமத்துவத்திற்கும் தடைகளும், சாந்திக்கும் சமாதானத்திற்கும் முட்டுக் கட்டை களும் ஏற்படுகின்றனவோ, அவைகளையெல்லாம் அழித்து ஒழித்து அவை தலைதூக்காமலும், இல்லாமல் போகும்படியாக செய்வதுதான் சுயமரியாதை இயக்கத்தினுடைய வேலை'.

எந்தெந்த ஸ்தாபனங்களால் (நிறுவனம்/ அமைப்புகள்) பாதிப்பு வருகிறது மானுட சமூகத் திற்கு, பாதுகாப்பிற்கு, அமைதிக்கு, எந்தெந்த வகுப்புக் கூட்டத்தால் தடை வருகிறது. இவர்களை எதிர்க்கிற போது அவர்களை அடையாளம் காட்டி தனிமைப்படுத்தும்போது பெரியாரை 'வகுப்புதுவேஷி' என்றார்கள். புரட்சியாளர் அம்பேத்கர் அரசியல் சட்டத்தை அறிமுகப்படுத்தியபோது சொன்னார், அரசியல் சட்டத்தின் தொடக்கச் சொல்லாக இந்திய மக்களாகிய நாம் என்று தொடங்கினேன், என்னுடைய அரசியல் உணர்வுடைய நண்பர் களெல்லாம் சொன்னார்கள் ஏன் இந்திய தேசத் தாராகிய நாம் என்று தொடங்கியிருக்கக்கூடாது என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு சமாதானம் சொன்னேன் நாம் எங்கு தேசமாக இருக்கிறோம்? இனிமேல்தான் தேசமாக வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஜாதிகளாக பிரிந்திருக்கும் நாம் எப்படி ஒரு தேசமாக முடியும்? என்று சொல்லிவிட்டு சொன்னார்: ஜாதிதான் 'தேச விரோத சக்தி' என்றார். அந்த தேச விரோத சக்திகளை விட்டு விட்டு ஏதோதோ 'தேச விரோதம்' என்று பேசிக் கொண்டிருக்கிற இந்த சூழலில், சமுதாயத்திற்கு, தேசத்திற்கு எதிரான சக்திகளை அறியச் செய்வதும், அவர்களை பலமிழக்கச் செய்வதும் அவசியம். அதற்காக எந்த முன்னெடுப்புகளை எடுத்துச் செல்வது? அதை நோக்கிய கருத்தரங்கமாகத்தான் தோழர்கள் இதை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதை நீங்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எப்போதும் இருந்ததைவிட இப்போது சூழல் மிக அவசியமாக இருக்கிறது. சுயமரியாதை என்பது பல துறைகளில் நமக்கு வேண்டும். பெரியார் ஒரு மாநாட்டு நிறைவுரையில் கூறுகிறார், 'இந்த உலகத்திலுள்ள எல்லா அகராதிகளையும் கொண்டு வந்து போட்டு ஏடு ஏடாய் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் அழகும், பொருளும் சக்தியும் நிறைந்த வார்த்தை யாகிய சுயமரியாதை என்கிற வார்த்தைக்கு மேலானதாகவோ ஈடானதாகவோ வேறு ஒரு வார்த்தையை யாராலும் கண்டுபிடிக்க முடியாது.

புரட்டிப் போட்டாலும் சுயமரியாதை என்ற சொல்லுக்கு உரிய அழகும், பொருளும், சக்தியும் உள்ள வேறு சொல்லில் காண முடியாது' என்று சொன்னார்.

இந்த சுயமரியாதை என்கிற இயந்திரத்தை சரியாக இயக்கத் தொடங்கிவிட்டால், ஒரு தோள் பட்டை (belt) மாட்டிவிட்டால் எந்த இயந்திரத்தையும் இயக்கலாம். நமக்குத் தேவை சுயமரியாதை. நானும் மனிதன் அவனும் மனிதன், அவனுக்குள்ள உரிமை எனக்கேன் இல்லை? நானும் மானுடப் பிறவி தான் நீயும் மானுடப் பிறவி தான். ஆணுக்குள்ள உரிமை எனக்கு ஏன் இல்லை? நீ மூலதனத்தைப் போட்டாய் நான் உழைப்பைப் போட்டேன் உனக்குள்ள பங்கு எனக்கு ஏன் இல்லை? இந்த மூன்றும் தான் சுயமரியாதை என்று சொன்னார். இந்த மூன்று பேதங்களை ஒழிப்பதற்கு தான் அவர் பாடுபட்டார். அது குறித்த விளக்கங்களை முன் வைப்பதற்கு வந்திருக்கின்ற பேராசிரியர்களுக்கு நன்றி சொல்லி இந்த அளவிற்கு என்னுடைய தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

**(கருத்தரங்கில் தலைமை உரை)**

# பெரியார் பேசிய சுயமரியாதையின் உள்ளடக்கம்

– செந்தில், இளந்தமிழகம்

*ஒவ்வொரு சிந்தனையாளருக்கும் ஓர் அற அடிப்படை என்று உண்டு. வள்ளுவரைப் பொருத்தவரை அவரது அற அடிப்படை என்பது வாய்மை, பொய்யாமை ஆகும். மார்க்சைப் பொருத்தவரை உழைப்பு, அறம். சுரண்டல் அறமற்றது. பெரியாரைப் பொருத்தவரை மாந்த நிகர்மை என்பதே அறம்.*

தமிழர்களின் புதுமைக் கால வரலாற்றில் இருந்து பிரித்தெடுக்க முடியாத பெரியார் மீது குற்றாய்வுகள் மட்டுமின்றி அவதூறுகளும், வெறுப்புரைகளும் அதிகம் பரப்பப்படும் ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்திய, தமிழக வரலாற்றுப் போக்கில் பெரியாரை நாம் புரிந்து கொள்வது எப்படி? இதனை உள்ளூர் வரலாறு மட்டுமின்றி உலகளாவிய வரலாற்றுப் போக்கின் ஊடாகப் பார்க்க வேண்டி இருக்கிறது.

**வரலாற்றுத் திருப்பம்:**

பெரியார் என்றால் அவரால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் என்பதில் இருந்து ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. அன்றைய தமிழக அரசியல் வெளி, இந்திய அரசியல் வெளி எப்படி இருந்தது? ஆங்கிலேயக் குடியேற்றத்திற்கு எதிரான இந்திய தேசிய இயக்கமே இந்தியா முழுவதும் மைய நீரோட்ட அரசியலாக இருந்தது. அதன் அரசியல் இயக்கமாகக் காங்கிரசு கட்சி இருந்தது. அந்தக் காங்கிரசு

> **எச்.ராஜா போன்றவர்கள் இன்றைக்குப் பெரியாரின் மீது கக்கும் வெறுப்பும், பரப்பும் அவதூறும் திட்டவட்டமான இலக்குக் கொண்டது. அவரது இலக்கு பார்ப்பனச் சமூகத்தை உசுப்பிவிட வேண்டும் என்ப தாகும்.**

கட்சியில் தான் பெரியாரும் இருந்தார். காங்கிரசு இந்திய விடுதலைக்குக் கொடுத்த முக்கியத்துவத்திற்கு இணையாக, சமூக மாற்றத்திற்கும், சாதி ஏற்றத் தாழ்வுக்கும் எதிரானப் போராட்டத்திற்குக் கொடுக்கவில்லை. இந்த இடத்தில் தான் பெரியார் காங்கிரசுடனான தனது பயணத்தை முறித்துக் கொண்டார். தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கு இந்தப் பாதையிலான பயணம் உதவாது என்று அறிவித்தார். வேறொரு பாதையைத் தெரிவு செய்தால் தான் இந்த சமூகம் உய்வு பெறும் என்று தீர்மானம் எடுத்தார். 1925 இல் குடிஅரசு இதழைத் தொடங்கினார். அதுவே அவரது சுயமரியாதை இயக்கத்தின் தோற்றமுமாகும். இந்தத் திருப்பம் பெரியார் தன் வாழ்வில் மேற்கொண்ட திருப்பமாக மட்டும் அமையவில்லை. எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகமே தனது வளர்ச்சிக்காகத் தெரிவு செய்து கொண்ட பாதையாக அமைந்தது. அதனால் தான், தமிழினம் தன்னை அடையாளம் கண்டு கொள்வதற்கான இயக்கமாக, சுயமரியாதை இயக்கத்தை விவரித்தார் மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் இ.எம்.எஸ். அவர் மட்டுமல்ல. நேரெதிர் முகாமில் இருக்கும் இன்னொருவர் பெரியாரின் காலத்தை எப்படிப் பார்க்கிறார் என்று குறிப்பிட்டால் மேற்படி கருத்து இன்னும் துல்லியப் பட்டுவிடும்.

அண்மையில் 'துக்ளக்' இதழில் வரும் கேள்வி பதில் பகுதியில் அதன் ஆசிரியர் குருமூர்த்தி, 'தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றை எப்படிப் பார்க்கிறீர்கள்?' என்ற கேள்விக்குப் பின்வரும் பொருளில் பதிலளித்தார். தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றைத் தாம் நான்கு கட்டமாகப் பார்ப்பதாகச் சொன்னார். முதல் கட்டம், இந்திய தேசியத்தோடு ஒன்றுபட்டு நின்று பயணித்த காலம். பின்னர் பெரியாரின் காலம். அவர் தேசியத்திற்கு எதிராக நாத்திகம், பிரிவினை, தேசவிரோதக் கருத்துகளின் மூலம் ஆபத்தான வழியில் கொண்டு சென்றார். அந்தத் திசைப் போக்கை மடைமாற்றி இந்திய தேசிய நீரோட்டத்தில் தமிழக அரசியலைக் கொண்டு வந்து இணைத்தார் அண்ணா. இது மூன்றாவது கட்டம். பின்னர், எம்.ஜி.ஆர். தமிழக அரசியலை இன்னும் முழுமையாக இந்திய தேசிய நீரோட்டத்தில் இணைத்து விட்டார். இது நான்காவது கால கட்டம். அதற்குப் பின்னான காலம் என்பது உப்புச் சப்பில்லாத கருணாநிதி, ஜெயலலிதா போட்டி அரசியல் காலமாக இருந்தது. பழையனவற்றை விட்டகன்று புதிய சிந்தனை கொண்டவர்கள் முன்னுக்கு வந்தால் தமிழ்நாட்டிற்கு நல்ல எதிர்காலம் உண்டு.

அதாவது, பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்ததிலிருந்து, அறிஞர் அண்ணா, திமுகவைத் தொடங்கிய 1949ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தைத் தான் மிகவும் ஆபத்தான காலமாக குருமூர்த்தி சொல்கிறார். உண்மையில், அவர்களே சொல்வது போல், "தமிழகம் ஓர் ஆன்மீகப் பூமிதான். பெரியாரின் நாத்திகத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தெருவுக்குத் தெரு கோயில்கள் உள்ளன, மாதந்தோறும் மக்கள் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள்." ஆனாலும், அவர்கள் பெரியாரின் நாத்திகத்தை ஏன் ஆபத்தாகப் பார்க்கிறார்கள்? காரணம், மத வழிப்பட்ட தேசியத்தைக் கட்டமைக்க வேண்டும் என்று உழைப்பவர்கள் நாத்திகம் என்பது வெறும் கடவுள் மறுப்பு என்பதோடு அவர்கள் கட்ட நினைக்கும் இந்து தேசிய மறுப்பாகவும் அமைந்து விடுகிறது. அதனால் தான், அவர்கள் பெரியாரின் காலத்தை ஆபத்தானதாக, தேசத்திற்கு எதிரானதாகப் பார்க்கிறார்கள். திமுக, அஇஅதிமுகவின் தோற்றத்தை அவர்கள் மடைமாற்றமாகக் காண்கிறார்கள். ஆகவே, பெரியார் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கம் என்பது தமிழ்ச் சமூகம் தன்னுடைய வளர்ச்சிக்காகத் தெரிவு செய்து கொண்ட வரலாற்றுப் பாதை ஆகும்.

**பெரியாரின் நோக்குநிலை:**

பெரியார் காங்கிரசு கட்சியை எதிர்த்துள்ளார், காங்கிரசை ஆதரித்துள்ளார். கம்யூனிஸ்ட்களை விமர்சித்துள்ளார், ஆதரித்துப் பரப்புரை செய்துள்ளார், திமுகவைக் கடுமையாக எதிர்த்துள்ளார், ஆதரித்தும் உள்ளார். பெரியாரின் அரசியல் தீர்மானங்கள், நிலைப்பாடுகள் சில நேரங்களில் முன்னுக்குப் பின் முரணாக இருந்திருக்கக் காண்கிறோம். இதைக் கொண்டு பெரியாரை விளங்கிக் கொள்வதில் குழம்பிப் போகிறவர்களும் உண்டு, அறிந்தே குழப்புபவர்களும் உண்டு.

வரலாற்றில் நிலைபெற்ற ஆளுமைகள் எந்த நோக்கு நிலையில் இருந்து நிலைப்பாடு எடுக்கின்றனர் என்று பார்க்க வேண்டியுள்ளது. லெனினின் சர்வதேசியக் கண்ணோட்ட மானாலும் சரி, தேசிய இனங் களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பார்வையானாலும் சரி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு, சனநாயக மத்தியத்துவம் ஆகிய கோட்பாடுகளானாலும் சரி, சோசலிசம் குறித்தக் கருத்து களானாலும் சரி அவையாவும் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலை என்ற நோக்கு நிலை யில் இருந்து வந்தடையப் பெற்றவையாகும். அண்ணல் அம்பேத்கர் என்று எடுத்துக் கொண்டால் அவர் நடத்தியப் போராட்டங்கள், அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவுக்குத் தலைமையேற்றமை, இந்தியா வின் முதல் சட்ட அமைச்சராக இருந்தது, அதில் இருந்து விலகிச் சென்றது, இந்தியக் குடியரசு கட்சியைத் தோற்று வித்தது, பௌத்தத்திற்கு மதம் மாறியது என யாவும் தாழ்த்தப் பட்ட மக்களின் விடுதலை என்ற நோக்கு நிலையில் இருந்து பெறப்பட்ட வையாகும். அது போல் பெரியாரின் அளவு கோல் சாதி ஒழிப்பு இலட்சிய மாகும். அதன் நோக்கு நிலையில் இருந்து அவர் தனது அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொண் டுள்ளார். அவர் தனித்தமிழ்நாடு என்ற அரசியல் இலட்சியத்தைக் கூட சாதி ஒழிப்பின் பொருட்டே முன்வைக்கிறார்.

**பெரியாரின் அற அடிப்படை: (Ethical Foundation)**

அதாவது, ஒவ்வொரு மாந்தரும் பிறப்பால் நிகர், சமம் என்பதே அவரது அடிப்படை நெறி. சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையும் இதுவே. இது

> **நாத்திகம் என்பது வெறும் கடவுள் மறுப்பு என்பதோடு அவர்கள் கட்ட நினைக்கும் இந்து தேசிய மறுப்பாகவும் அமைந்து விடு கிறது. அதனால் தான், அவர்கள் பெரியாரின் காலத்தை ஆபத்தானதாக, தேசத்திற்கு எதிரானதாகப் பார்க்கிறார்கள்.**

ஒவ்வொரு மாந்தரும் பிறப்பால் சமம் இல்லை என்ற கருத்தி யலுக்கு நேரெதிரானது.

எச்.ராஜா போன்றவர்கள் இன்றைக்குப் பெரியாரின் மீது கக்கும் வெறுப்பும், பரப்பும் அவதூறும் திட்டவட்டமான இலக்குக் கொண்டது. அவரது இலக்கு பார்ப்பனச் சமூகத்தை உசுப்பிவிட வேண்டும் என்ப தாகும். பார்ப்பன இளைஞர் களை அரசியல் களத்திற்கு இழுத்துவர வேண்டும் என்பதே அவரது பாடு. ஆண்டாள் பற்றிய கருத்துப் பூசல் எழுந்த போது நடந்த போராட்டங் களில் நிறைய பார்ப்பனர்கள் பங்கு கொண்டனர். ஒரு வழியாக அவர் மெல்ல மெல்ல பார்ப்பனர்களை ஓர் அரசியல் சக்தியாகக் களத்திற்குக் கொண்டு வருகிறார். ஆனால், ஒரு வகையில் அவர்கள் செயலூக்க மிக்க அரசியல் களத்திற்கு வருவது நமக்கும் சாதகமானதுதான். ஏனெனில், அப்போது அவர்கள் நம் தரப்பு கருத்துகளையும் உற்று நோக்க வேண்டிவரும். வெகுகாலத்திற்கு எச்.ராஜாக்களின் பொய்ப் புரட்டுகளுக்குள் அவர்களைக் கட்டிப் போட முடியாது. அன்றைக்கு இருந்ததைவிட இன்றைய சமூகப் பொருளாதார வாழ்வில் சாதியமைப்பின் இறுக்கம் தளர்த்தப்பட் டுள்ளது; தொழில்நுட்ப வளர்ச்சி கற்பனை செய்திராத அளவுக்கு வளர்ந்துள்ளது. தொடர்பு சாதனங்கள் உலகைப் பெருமளவுக்கு நெருக்கமாக்கி யுள்ளது. உலகளாவிய செய்தி களைத் தெரிந்து கொள்வதற் கான வாய்ப்பு பன்னூறு மடங் காகியுள்ளது. செய்தி ஊடகத் தின் வளர்ச்சியும் அதிகமாகி விட்டது. கலை இலக்கியப் பண்பாட்டுத் தளங்களில் குறிப்பாக, சாதியமைப்பின் காலப்பொருத்தமின்மை பற்றி ஏராளமான திரைப்படங்கள் வந்த வண்ணம் உள்ளன. இட ஒதுக்கீடு காரணமாகப் பல் வேறு துறைகளிலும் பார்ப்பனர் களோடு, பார்ப்பனரல்லாதோர் சேர்ந்து இயங்கக் கூடிய வாய்ப்பு பெருகி இருக்கிறது.

பெரியாரின் இயக்கம் சுயமரியாதைக்கான, மாந்த நிகர்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதால் அவர்கள் வெட்டவெளிச்சமாக எல்லா இடங்களிலும் எதிர்த்துப் பேசிவிட முடியாது. எடுத்துக்காட்டாக, போபால் என்ற அமெரிக்க நிறுவனத்தின் சென்னை கிளையில் சாதிப் பெயர்களைக் கொண்ட போட்டி ஒன்றை நடத்த முற்பட்ட பொழுது ஒரு சாதாரண எதிர்ப்பியக்கம் நடந்தது. அது அமெரிக்காவில் உள்ள அதன் தலைமைக்கு இச் செய்தியை உடனே கொண்டு சேர்த்தது. சாதிப் பாகுபாடு என்பது மேற்குலகில் இருக்கும் நிறப் பாகுபாட்டுக்கு ஒப்பானது என்று எடுத்துச் சொன்ன பொழுது உடனே அவர்கள் பின்வாங்க நேர்ந்தது. எனவே, நாம் ஒவ்வொரு மாந்தரும் பிறப்பால் நிகர் என்பதை நமது சொல்லிலும், எழுத்திலும், செயலிலும் வழுவாதிருந்து வெளிப்படுத்துவோமாயின் எச்.ராஜாக்கள் போன்ற கடும் போக்காளர்களைப் பார்ப்பனர் களிடமிருந்துகூட தனிமைப் படுத்த முடியும்.

**பெரியாரின் பொருத்தப்பாடு:**

தோழர் கொளத்தூர் மணி தன்னுடைய உரையில் சொன்னது போல் 'பெரியார் இன்றும் என்றும்' என்று சொல்வதைவிட கால ஓட்டத்தில் பெரியாரே தன்னுடைய கருத்துகளைவிட முற்போக்கான கருத்துகள் வரும் என்று சொல்லியிருந்தார் என்ற பொருள்பட பேசினார். எவரது கருத்துகளும் காலத்திற்கும் இடத்திற்கும் உரியவை தான். வள்ளுவரின் கருத்துகள் முக்காலத்திற்கும் உரியது என்றும், உலகப் பொதுமறை என்றும் மிகைப்படுத்தும் பழக்கம் நமக்கு உண்டு. வள்ளுவரின் கருத்து அவர் வாழ்ந்த காலத்தில் நிலவிய தமிழ்ச் சமூகச் சூழலில் வெளிப்பட்ட ஒன்றே ஆகும். அது அன்றைய தமிழ்ச் சமூகத்திற்கான வழி நெறி கொண்டிருந்தது, அதுவும் ஒரு நில மானிய காலத்தின் நிலைமையில் தோன்றிய நூலாகும். அடவி தழுவிய உண்மைகள் (Universal Truth) என்று சொல்லப்படும் சிலவற்றைத் தவிர மற்றவை தமிழ்ச் சமூக நிலைமைகளுக்கு உட்பட்டவையே. அது போல், பெரியாரின் கருத்துகளும் வாழ்நாள் தொண்டும் தமிழ்ச் சமூகத்தை உய்விப்பதற்கானவை. வட இந்தியாவிற்குக் கூட எந்தளவுக்குப் பொருத்தப்பாடு உடையது என்பது கேள்விக்குரியதே ஆகும்.

பெரியாரை நோக்கி அவதூறுகளை ஒருபுறம் இந்துத்துவ ஆற்றல்களும், இன்னொருபுறம் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இனவாத ஆற்றல்களும் அள்ளிவீசி வருகின்றனர். இதனால் இன்றைக்கு நம்மிடையே ஒருவித பதட்டம் தொற்றிக் கொண்டுள்ளது. ஆனால், அத்தகைய பதட்டம்

**சாதி நாயகம் கோலோச்சிக் கொண் டிருக்கிறது. சாதிநாயகத்திற்கு எதிரான சனநாயகத்தை உயர்த்திப் பிடிப்பது தேசியப் போராட்டத்தின் அடிப்படையிலும் அடிப்படை ஆகும்.**

தேவையற்றது. ஏனெனில், இன்றைக்கும் பெண்கள் நம்முடைய சமூகத்தில் கட்டுண்டே உள்ளனர். வருங்காலத்தில் பெண்கள் தமக்கான ஆள்வகை உரிமை கோரி மாபெரும் எழுச்சிக் கொள்வர். அத்தகைய எழுச்சி கொள்ளும் பொழுது தமிழர்களின் புதுமக் கால அரசியலின் முதல் பெண்ணியவாதியாக அவர்கள் கையில் ஏந்தப் போவது பெரியாரின் படத்தையே. ஆயிரக்கணக்கில் வீதியில் இறங்கிப் போராடும் போது உணர்ச்சிப் பெருக்கோடு பெரியாரின் கருத்துகளைப் பேசுவார்கள், அவரை உயர்த்திப் பிடிப்பார்கள். இன்றைக்கு அவதூறுகளைப் பரப்புவோர் எல்லாம் வாயடைத்துப் போவர்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே சந்தை, ஒற்றையாட்சி என்ற திசையில் இந்திய அரசியலின் வரலாறு வேகமெடுத்திருக்கும் நிலையில் இதற்கு எதிரான தமிழ்த் தேசிய இயக்கமும் வளர்ச்சிப் பெறும். ஆங்கிலேயர்களின் கையில் இருந்த அதிகாரம் வடநாட்டாரிடமும் பார்ப்பனப் பனியாக்களிடம் மாறியிருக்கிறது. 'முதல் சுதந்திர நாளை கருப்பு நாளாகக் கடைபிடியுங்கள்' என்று எந்தத் தமிழறிஞரும் அன்றைக்குச் சொல்லவில்லை. தமிழ்நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தை யார் முதலில் சொன்னது என்று பட்டிமன்றம் நடத்துபவர்கள் பெரியாரிடம் இந்த முழக்கம் குறித்து இருக்கும் தொடர்ச்சியை மறந்து விடுகின்றனர். தன் வாழ்நாளின் இறுதி மூச்சு வரை இந்தியாவிற்குக் கீழே தமிழகம் அடிமைப்பட்டு கிடக்கின்றது என்ற கருத்தை மாற்றிக் கொள்ளாதவர் பெரியார். வருங்காலத்தில், தமிழ்நாட்டு உரிமைக்கான இயக்கம் எழுச்சிக் கொள்ளும் பொழுது 1947 ஆகஸ்ட் 15ஐ கருப்பு நாளென்று ஓங்கி ஒலித்தப் பெரியாரின் குரல் ஒவ்வொரு நாளும் நினைவு கூரப்படும். அந்தக் குரல் தமிழகத்தில் எழுந்த ஒற்றைக் குரல். எந்த தமிழ் அறிஞரும் அதற்கு உரிமை கொண்டாட முடியாத குரல். அவதூறுகளின் கூக்குரல்களால் பெரியார் ஓங்கி ஒலித்ததை இருட்டடிப்பு செய்துவிட முடியாது.

**சுயமரியாதை இயக்கம் உள்ளடக்கத்தில் தமிழ்த்தேசிய இயக்கம்:**

தமிழ்த் தேசியத்தின் பெயரால் இனவாத ஆற்றல்கள் பெரியாரின் வரலாற்றுப் பாத்திரத்தையும், பங்களிப்பையும் குறைத்துக் காட்ட முயல்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியலுக்குப் பெரியாரோ, பெரியாரைப் பின்பற்றுவோரோ எதிரானவர்கள் என்று சித்திரிக்க முயல்கின்றனர்.

தேசியம் என்ற வரலாற்று விளைபொருளின் சாரத்தை அறியாமல் அரசியல் இலக்கணம் பேசுகின்றனர். மதம், மொழி, இனம் எல்லாம் பன்னெடுங்காலமாக இருக்கின்றன. ஆனால், தேசியம் என்பது வெறும் முன்னூறு ஆண்டுகள் வரலாறு கொண்டது. முதல் தேசிய விடுதலை இயக்கம் அமெரிக்க தேசிய

இயக்கமாகும். அது மன்னராட்சிக்கு எதிரான போராட்டமாகும். பிறப்பால் ஆளும் உரிமை பெற்றவன் எனச் சொல்லிக் கொள்ளும் மன்னனுக்கு எதிராக பிறப்பால் எல்லோரும் சமம் என்ற அடிப்படையுடன் மக்கள் கிளர்ந்தெழுந்த போராட்டம் அது. அதுவரை புழக்கத்தில் இருந்த மேதகு, மாண்புமிகு (his excellency, his majesty) என்ற முன்னொட்டுகள் தூக்கி எறியப்பட்டு Mr. President திரு அதிபர் என்று நிலைநாட்டப்பட்டது. பிரித்தானியாவில் இருந்து ஆட்சி செய்த ஆங்கில மன்னனுக்கு எதிராக அமெரிக்காவில் உள்ள ஆங்கிலம் பேசும் மக்கள் போராடினார். அடக்குமுறையாளர்களுக்கும், போராடியவர்களுக்கும் மொழி ஒன்று தான், போராட்டம் சனநாயகத்திற்கானது. அதே போல, 1789 இல் நடந்தேறிய பிரெஞ்சு புரட்சியும், பிரெஞ்சு மன்னுக்கு எதிராக பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் நடத்திய தேசியப் போராட்டம். எனவே, இங்கு ஆள்பவரும் ஆளப்படுவோரும் வெவ்வேறு மொழி பேசுகிறவர்களா? என்பதல்ல கேள்வி, தேசியப் போராட்டம் என்பது சாரத்தில் மக்களாட்சி பற்றியது, பிறப்பால் எவரும் மன்னன் என்ற காரணத்தின் பெயரால் மக்களை அடக்கியாள முடியாது என்பது பற்றியது. முடிவெடுப்பதில் மக்களுக்கு இருக்கும் பங்கை நிலைநாட்டுவது பற்றியது. இப்படியாகத் தான் தேசியம் வரலாற்றில் உருப்பெறுகிறது. இதுவே ஐரோப்பா முழுவதுமான தேச அரசுகள் உருவாக்கத்திற்கான அடிப்படையாகவும் அமைகின்றது.

பின்னர் ஆசியாவில் உருப்பெற்றத் தேசியங்கள் ஆங்கிலக் குடியேற்றத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டமாக எழுந்தன. இந்திய தேசியம் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரானப் போராட்டத்திற்குப் புராணங்களைத் தேடிப் போனது, வேத காலத்தைப் பொற்காலம் என போற்றியது, கடந்த கால தப்பெண்ணங்களை, காப்பியச் சிந்தனைச் சேற்றை அள்ளிப் பூசிக் கொண்டது.

**தன் வாழ்நாளின் இறுதி மூச்சு வரை இந்தியாவிற்குக் கீழே தமிழகம் அடிமைப்பட்டு கிடக்கின்றது என்ற கருத்தை மாற்றிக் கொள்ளாதவர் பெரியார்.**

இன்னொருபுறம் ஆங்கிலேயருக்கு எதிரான இலங்கை தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிங்களத் தேசியம் மகாவம்சத்தில் இருந்து தனது கட்டமைவுகளை எடுத்துக் கொள்கிறது. ஆங்கிலக் குடியேற்றத்திற்கு எதிரானப் போராட்டத்தை கிறித்தவ மிஷினரிகளுக்கு எதிரான பௌத்தர்களின் போராட்டமாக நடத்துகின்றனர். இந்திய தேசியமும் சிங்கள தேசியமும் காப்பியச் சிந்தனை மரபைக் கட்டி அழுதன. தேசியத்தின் சாரம் வெளிநாட்டு, உள்நாட்டு ஆதிக்கத்தை நிராகரித்து மக்களை முடிவு எடுக்கும் சக்தியாக முதன்மைப்படுத்துவதும், நிறுவுவதுமாகும். அது உள்ளுக்குள் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை, ஆண்டான் - அடிமை உணர்ச்சியை எதிர்க்கிறது. தேசியத்தின் சாரம் சனநாயகம். மொழி, மதம், இனம் போன்றவை எல்லாம் குறியீட்டு முக்கியத்துவம் உடையவையே ஆகும்.

தேசியம் என்பது முதலில் சுயம் பற்றியது. அத்தகைய சுயம் முதலில் தனிமனித உரிமையில் ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு தனிநபருக்கும் சுயகௌரவம் உண்டு. சுயமான உரிமைகள் உண்டு. இதனைத் தனிமனித உரிமை (individual rights) என்பர். ஒரு மக்கள் கூட்டம் சார்ந்த உரிமை சம்பந்தப்படும் போது அதனைக் கூட்டுரிமை (collective rights) என்பர். தனிமனித உரிமையும் கூட்டு உரிமையும் சரிவர இணைந்த ஒன்றுதான் தேசியம் என்பதாகும். இந்த வகையில் தேசியம் எல்லாவிடத்திலும் சுயம் (self) பற்றிக் கூறும். சுயகௌரவம் (self-respect), சுயாட்சி (self-government), சுயநிர்ணய உரிமை (self-determination) என, அது ஒரு தனி நபரில் இருந்து, அதாவது ஒரு குழந்தையின் உரிமையில் இருந்து வளர்ந்தோர், இளையோர், முதியோர் வரையான அனைத்துத் தனிநபர்களினது சுய உரிமையில் தொடங்கி, இனம், நாடு என்ற கூட்டுச் சுயம் வரை, அது விரிந்து பரந்த ஒன்றாகின்றது' எனத் தேசியத்திற்கும், சுயத்திற்குமான உறவு பற்றித் தேசியமும் ஜனநாயகமும் என்ற குறுநூலில் ஈழத்து வரலாற்றாய்வாளர் மு.திருநாவுக்கரசு விளக்குகிறார்.

இந்தியச் சமூக அமைப்பில் சனநாயகத்திற்குப் பதிலாக பிறப்பின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வைச் சொல்லி சாதி நாயகம் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. சாதிநாயகத்திற்கு எதிரான சனநாயகத்தை உயர்த்திப் பிடிப்பது தேசியப் போராட்டத்தின் அடிப்படையிலும் அடிப்படை ஆகும். இந்தப் பின்புலத்தில் பெரியார் 1925இல் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கம் என்பது

தமிழ்ச் சமூகத்தில் நிலவிய சாதி நாயகத்திற்கு எதிரானது ஆகும். மேல்-கீழ் என்ற சாதியுணர்ச் சிக்குப் பதிலாக சுயமரியாதை உணர்வை உயர்த்திப் பிடித்த இயக்கமாகும். ஒவ்வொரு மாந்தரும் பிறப்பால் நிகர் என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். அதனால் தான் சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் புறப்பட்ட இயக்கம் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வுக்கு எதிராகப் பயணிக்க முடிந்தது. அத்துடன் நிற்கவில்லை, தனி மனித உரிமைப் பாதுகாக்கப் பட வேண்டுமென்றால் அந்த மக்கள் கூட்டத்தினது கூட்டுரிமைப் பாதுகாக்கப்பட வேண்டும். கூட்டுரிமை என்ற வகையில் தமிழ்நாடு தமிழருக்கே என்று சுயமரியாதை இயக்கம் முழங்கியது. தனிமனித சுய மரியாதையில் தொடங்கி, தமிழ்ச் சமூகத்தினது சுயநிர்ணய உரிமையில் வந்து நின்றது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய தேசியங்க ளோடு ஒப்பிடும் போது, பழமை வாதச் சேற்றை அள்ளிப் பூசிக் கொள்ளாமல், உள்ளுக்குள் ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான சனநாயகத்தை உயர்த்திப் பிடித்து, ஆக அதிகபட்ச தேசியத் தன்மை வாய்ந்த இயக்கமாக, சுயமரியாதை இயக்கம் காணப்படுகின்றது.

சுயமரியாதை இயக்கம் என்ற சிறந்த பெயரில் உலகில் எந்தவொரு சனநாயக இயக்க மும் தோற்றுவிக்கப்படவில்லை. மன்னராட்சிக் கலாச்சாரம், காப்பியச் சிந்தனை, பழம் பெருமைவாதம் என அழுக்கு மூட்டைகள் நிரம்பிய, கீழைத் தேசப் பண்பாட்டுப் பின்னணி யில் 'சுயமரியாதை' என்ற பெயர் மிகவும் பொருள்பொதிந்த உணர்வு கலந்த பெயராகும்.

ஒருவர் தன் மதிப்பைத் தானே உணர்வது, தன்னைத் தான் மதிப்பது, தன்மதிப்பை, தன்மானத்தை நிலைநாட்டுவது, தன்னிடமிருக்கும் எஜமானத் துவ விசுவாசத்திற்குக் கொள்ளி வைப்பது, கூனிக் குறுகி நிற்கும் கூஜா தூக்கி மனப்பான்மையை அடித்து நொறுக்குவது, பிறப்பால் அனைவரும் சமம் என்ற மனநிமிர்வைப் பெறுவது, எல்லாவிதமான அடிமைத் தனத் திற்கும் எதிராகப் போராடுவது எனச் சுயமரியாதை தனது சிறகை விரிக்கின்றது. பெரியா ரால் தோற்றுவிக்கப்பட்ட சுய மரியாதை இயக்கமும் அப்படிச் சிறகு விரித்தது. சுருங்கச் சொன்னால் சுயமரியாதை என்ற சொல்லுக்குள்ளே சனநாயகம் பற்றியும், தேசியம் பற்றியுமான சாரங்கள் உறைந்து கிடக் கின்றன.

இட்லரும், முசோலினி யும் சோசலிஸ்ட்கள் என்று தம்மை அழைத்துக்கொண்டு பாசிஸ்ட்களாக இருந்தார்கள் என்பதற்காக நாம் சோசலி சத்தை வெறுத்துவிடுவதில்லை அல்லது சோசலிசத்தில் இருந்து விலகி நிற்பதுமில்லை. அது போலவே, தமிழ்த்தேசியத்தின் பெயரால் இனவாத ஆற்றல்கள் பெரியாரின் இயக்கத்தையும் வாழ்நாள் தொண்டையும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தென்றோ அல்லது அந்நியமான தென்றோ சொல்கிறார்கள் என்ற காரணத்திற்காகப் பெரி யார் சிந்தனை மரபினர் எவரும் தமிழ்த்தேசியத்தில் இருந்து விலகி நிற்க வேண்டிய தில்லை.

தமிழ்ச் சமூகம் சாதியச் சமூக அமைப்பில் இருந்து மாறி தேசியச் சமூகமாகப் பரிண மிக்கும் நிகழ்ச்சிப் போக்கில் இருந்தும், தேசிய அரசு உரிமைக்கான உணர்வை வளர்த்ததில் இருந்தும் பெரி யாரின் பணியைப் பெயர்த் தெடுத்துவிட முடியாது. பெரியார் வழிவந்து செயல் பட்டுக் கொண்டிருப்போர் தமிழ்த்தேசிய இயக்கத்தினர் என்று தம்மை உரிமையோடு அழைத்துக் கொள்வதற்கான வரலாற்று வேர்கள் இருக் கின்றன.

**பெரியார் – தமிழ்நாட்டின் சன் யாட் சென்**

பெரியாரை, சாக்ரடீ சோடு ஒப்பிடுவதைவிட சன் யாட் சென்னோடு ஒப்பிடுவது பொருத்தமுடையது. சாக்ரடீஸ் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அடிமைச் சமூகத்தில் வாழ்ந்தவர், அவரே அறிவியல் சிந்தனை மரபின் தந்தை என்று போற்றப்படுகிறார். ஆனால், பெரியாரோ தமிழ்ச் சமூகத்தின் புதுமக் கால அரசியல் கட்டத் தில் வாழ்ந்தவர். சீனாவின் புதுமக் கால அரசியல் கட்டத் தில் சீனத் தேசியத்திற்கான கோட்பாட்டை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தி சீன விடுதலைக்காக மூன்று பெருங் கோட்பாடுகளை வகுத்தளித் தார். அவருக்குப் பின்னான 30 ஆண்டுகளுக்குள் அவர் வகுத்து தந்த இலட்சியங்கள் காலப் பொருத்தத்துடன் சீனாவில் நிறைவேற்றப்படுகின்றன. அவரே சீன தேசத்தின் தந்தை யும் ஆவர். அது போல் பெரியார் சாதி ஒழிப்பையும் சுதந்திர தமிழ்நாட்டையும் இருபெரும் இலட்சியங்களாக வகுத்தளித் துப் போயுள்ளார். இதற்காக தம் வாழ்நாளெல்லாம் உழைத் துள்ளார். அந்த இலட்சியங் களை நிறைவேற்ற வேண்டிய இடத்தில் நாம் இருக்கிறோம். பெரியாரை தமிழ்நாட்டின் சன் யாட் சென் என அழைப்பது பொருத்தமுடையதாக இருக்கும்.

**பெரியாரின் சுயமரியாதை சமதர்மக் கழகம்:**

1930இல் இருந்து 1935 வரையான காலகட்டத்தில் பெரியார் சுயமரியாதை சமதர்மப் பரப்புரையை மேற்கொண்டு வந்தார். ரஷ்யப் பயணம் மேற்கொண்டார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையைத் தமிழில் கொண்டு வந்தார். பகத்சிங் எழுதிய 'நான் ஏன் நாத்திகன்' நூலைத் தமிழில் கொண்டு வந்தார். நேற்றுவரை பார்ப்பானுக்கு அடிமையாய் இருந்துவிட்டு இனி பணக்காரனுக்கு அடிமையாக இருக்கப் போகிறோமா? எல்லாவித அடிமைத்தனத்திற்கும் எதிராகப் போராடுவது சுயமரியாதைக்காரனின் கடமையல்லவா? எனக் கேட்டார். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரும், தோழர் ஜீவானந்தமும் குடிஅரசில் பொதுவுடைமைச் சிந்தனையை வளர்க்கக் கூடிய கட்டுரைகளை எழுதினர். இக்காலகட்டத்தில் ஆங்கில அரசு கடுமையான நெருக்கடி தந்த நிலையில் சமதர்மத்திற்கான நிகழ்ச்சி நிரலைப் பிற்போடுவதாகப் பெரியார் அறிவித்தார். அதே நேரத்தில் மே தினத்தை அனுசரித்தார், கம்யூனிஸ்ட்கள் மீது நேரு-படேல் தலைமையிலான இந்திய அரசு அடக்குமுறையை ஏவியபோது தோழமை பாராட்டினார். 1952 இல் கம்யூனிஸ்ட்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இப்படி, பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்கும் கம்யூனிச இயக்கத்திற்குமான உறவைக் காண்கிறோம்.

இன்றைக்கோ உலகமய, தாராளமய, தனியார்மயப் பொருளியல் கொள்கையின் கீழ் தமிழ்நாடு பன்னாட்டுக் கார்ப்பரேட்டுகளின் வேட்டைக் காடாக மாறியுள்ளது. பெரியார் இன்றைக்கு இருந்திருப்பாரேயானால், தமிழ்நாட்டின் உழைப்பைச் சுரண்டுவதோடு அல்லாமல் தமிழ்நாட்டு ஆறு, கடல், மலை, காடுகள் என இயற்கை வளங்களை இந்தக் கார்ப்பரேட் முதலாளிகள் சூறையாடுவது கண்டு பொங்கி எழுந்திருக்க மாட்டாரா? கடுமையாக எதிர்த்து இருப்பார். எனவே, பெரியாரின் சுயமரியாதை சமதர்மக் கழகப் பணியை முன்னகர்த்த வேண்டிய கடமை நமக்கு உள்ளது.

> **லெனினின் சர்வ தேசியக் கண்ணோட்டமானாலும் சரி, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பார்வையானாலும் சரி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு, சனநாயக மத்தியத்துவம்.**

**சாவர்க்கரும் பெரியாரும்**

சுயமரியாதை இயக்கம், பொதுவுடைமை இயக்கம், ஆர்.எஸ்.எஸ். ஆகிய மூன்றும் 1920களில் சமகாலத்தில் தோற்றுவிக்கப்பட்டவை. முன்னது இரண்டின் இலட்சியங்களும் உன்னதமானவை என்றாலும் ஆர்.எஸ்.எஸ். தான் இன்றைக்கு ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துள்ளது. கற்பனைக் கெட்டாத வகையில் வெகுசன இயக்கங்கள், இரகசிய தாக்குதல் குழுக்கள், அரசியல் முன்னணி என நச்சு மரம் போல் வளர்ந்து நிற்கிறது. சாவர்க்கர் கனவு கண்ட இந்து இராஷ்டிரத்தை அவரது வாரிசுகள் நனவாக்குவது நோக்கி பீடு நடை போட்டு வருகின்றனர். பெரியார் மறைவுக்குப் பின்னான இந்த 46 ஆண்டுகளில் பெரியாரின் இலட்சியங்கள் நோக்கி எந்தளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம் என்ற கேள்வியை நமக்கு நாமே எழுப்பிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1957இல் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் போராட்டத்தை அவர் நடத்தினார். அப்போது அவருக்கு வயது 79. அப்போது அவர் சிறைக்குப் போவதற்கு முன் 15.12.1957 அன்று 'விடுதலை'யில் எழுதிய தலையங்கத்தில் இருந்து

"என் பிறவி காரணமாக என் இன இழிவுக்குக் காரணமாக இருக்கும் சாதியை ஒழிப்பதும் என் இன மக்களாகிய தமிழர்களுடையவும், என்னுடையவும் தாய்நாடான தமிழ்நாட்டைப் பனியா-பார்ப்பனர்களின் அடிமைத் தளையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் மீட்டுச் சுதந்திரமாக வாழவைக்க வழி செய்வதுமான தனித் தமிழ்நாடு பெறுவதும் என் உயிரினும் இனிய கொள்கைகளாகும்.

அந்த இலட்சியங்களை அடையத் தகுந்த விலையாக என் உடல், பொருள், ஆவி ஆகிய எதையும் கொடுப்பதற்கு உடன்பட்டே நான் இப்போது சிறை செல்லுகிறேன், சென்று வருகிறேன்."

எவ்வளவு சீரழிந்துப் போயிருக்கின்றது தமிழ்நாட்டின் நிலை. இரண்டு பூனைகளை வைத்துக்கொண்டு கூட தில்லி ஆட்சி நடத்திவிடும் என்று பெரியார் சொன்னது போல் இன்று எடப்பாடியையும், பன்னீர் செல்வத்தையும் கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"இது கண் போன்ற பிரச்சினை எவ்வளவு மோசமாக நடத்துகிறான்?

நம் நாட்டில் வசூல் செய்யும் பணத்தில் 60 கோடி ரூபாய் எடுத்துக்கொண்டு 8 கோடி நமக்குக் கொடுக்கிறான் - பிச்சை கொடுப்பது போல! யார் கேட்பது? ஏன் என்றால் - 'அதிகப்பிரசங்கி' என்பானே என்று இவன் பயப்படுகிறான்! இங்கு சுரண்டிக் கொண்டு போய் வடநாட்டுக்குத் தருகிறான்.

எலக்ஷனுக்கு ஒரு தடவைக்கு 25 கோடி வசூல் செய்கிறான். முதலிலே சொன்னான். டாட்டா கம்பெனிக்காரன் என்னும் ஒரு கம்பெனி 10 இலட்சம் கொடுத்தான். ஒரு டைரக்டர் அதைக் கேட்டான். ஒரு கூட்டாளி, 'அரசியல் கட்சிக்கு எதற்குப் பணம் கொடுப்பது?' என்றான். 'அடப் பைத்தியமே, நான் கம்பெனி நலனை உத்தேசித்துத்தான் கொடுத்தேன்; இதை கொடுத்தால்தானே கோடி கோடியாகக் கொள்ளையடிக்கலாம்' என்று பதில் சொல்லியிருக்கிறானே வடநாட்டான்.

வடநாட்டான் 2 பூனையை வைத்துக்கொண்டு கூட ஆண்டுவிடுவானே! இந்த காமராசர் போனால் வேறொரு ராசர் அவனுக்குக் கிடைக்கக் கூடும். இந்தக் கொடுமை ஒழிய வேண்டும்.

நம் நாடு தனியாகப் பிரிந்தே ஆக வேண்டும். ஒரு சுண்டைக்காய் 'எகிப்து' உலகத்தையே கலக்கிவிட்டதே! நம்மால் ஆள முடியாதா?" .

ஆகவே, நாம் பெரிய இயக்கம் நடத்த வேண்டும்; ஆதரவு கட்டாயம் இருக்கும். எனக்குப் பிறகு என்ன நடக்குமோ என்ற கவலையாகத்தான் உள்ளது; பாதியிலாவது விட்டுவிட்டுப் போனால் கொள்கையை விற்றுத் தின்னத்தான் ஆள்வரும்.

ஆகவே, தயவுசெய்து சிந்தியுங்கள். காரியம் நடந்தே தீரவேண்டும். இந்தியா படம் கொளுத்த தயாராக வேண்டும்." (விடுதலை 1-12-1957)

இன்றைக்கு ஆட்சியில் இருந்தபடி அதிகாரத்தைத் தம்மிடம் குவித்துக் கொண்டிருக்கும் மோடி-அமித்ஷா கும்பலின் முதல் பெரும் பலமாக அறியப்படுவது கார்ப்பரேட்கள். இவர்களுக்கு அள்ளி அள்ளி கொடுத்திருக்கும் பன்னூறு கோடிகளாகும். இந்த முதலாளிகள் தான் நாட்டை ஆளுகின்றார்கள் என்பதைப் பெரியார் அப்போதே சுட்டிக் காட்டுகின்றார்.

பெரியார் மறைந்து மூன்று ஆண்டுகளில் கல்வியை மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றிக் கொண்டது மத்திய அரசு. இன்று ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு, ஒரே வரி, ஒரே சந்தை, ஒரே சட்டம், ஒரே தேர்தல் என பெரும் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது இந்திய அரசு. இட ஒதுக்கீட்டு கோட்பாட்டின் மீதே தாக்குதல் நடத்தி விட்டனர். பெரியார் விட்டுச் சென்ற இலட்சியங்களை நோக்கித் தீவிரமான வேலைத் திட்டத்தை முன்னெடுக்காவிடில் தமிழ்நாட்டின் நூறாண்டு உழைப்பையும் அதனால் விளைந்த நன்மைகளையும் நாசம் செய்து விடுவார்கள்.

என்னுடைய உரையைப் பெரியாரின் பின்வரும் வரிகளோடு முடிக்கிறேன்.

"உதைக்கும் காலுக்கு முத்தமிட்டுப் பூசை செய்கிறோம்; மலத்தை மனமார முகருகிறோம்; மானமிழந்தோம்; பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியை இழந்தோம்; மாற்றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம். இதற்குதானா தமிழன் உயிர்வாழ வேண்டும் ? எழுங்கள்! நம்மை ஏய்த்து அழுத்தி, நம் தலைமேல் கால் வைத்து ஏறி மேலே போக - வடநாட்டானுக்கும், தமிழரல்லாதவர்களுக்கும் நாம் படிக்கட்டு ஆகிவிட்டோம்.

இனியாவது 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்று ஆரவாரம் செய்யுங்கள்.

உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று பச்சை குத்திக் கொள்ளுங்கள்.

நம் வீட்டுக்குள் அன்னியன் புகுந்து கொண்டதோடல்லாது, அவன் நம் எஜமான் என்றால் நமக்கு இதைவிட மானமற்ற தன்மை, இழிதன்மை வேறு என்ன சிந்தியுங்கள்!

புறப்படுங்கள்! தமிழ்நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைத்துச் சின்னாபின்னமாக்குங்கள்!

தமிழ்நாடு தமிழருக்கே! ('விடுதலை' - 3-12-1957)

**கட்டுரையாளர் :**
**தமிழ்த் தேச மக்கள் முன்னணி**
**'இளம்தமிழகம்' செயல்பாட்டாளர்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகை யாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

# பெரியார் பார்வையில் 'காதல்'

– கனல்மதி

*"அன்பு நட்பு ஆசை ஆகியவற்றைத் தாண்டி காதல் என்பது புனிதமானது என்று உலகில் நிலவும் கருத்து ஆண் பெண் கூட்டு வாழ்க்கையின் பயனை மங்கச் செய்கிறது."*

பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனை மற்ற சீர்திருத்தவாதிகள் கொண்டிருந்த பெண்ணுரிமை மீதான பார்வையை விட மிக ஆழமானதாகவும் நுணுக்கமானதாகவும் இருக்கிறது. அன்றைய பார்ப்பனிய ஆதிக்கம் நிறைந்த சமூகத்தில் பார்ப்பனர்களின் வேத சட்டங்களின்படி பெண்களை இச்சமூகம் வீட்டுப் பிராணிகளாய், அதை விடவும் அடிமைத் தன்மையுடன் தங்கள் தேவைகளுக்குப் பயன்படுத்தி இருக்கிறது.

இன்றும் மனுநூல் கூறும் விதிகள் வரிகள் மாறாமல் நம் சமூகத்தில் மிகச் சாதாரணமாக நடைமுறையில் இருப்பதும் பல இடங்களில் தொடர்ந்து மனுநூல் வரிகளையே மக்கள் பேசிக்கொண்டு செல்வதையும் பார்க்க முடிகிறது.

காதல் என்பதைப் பற்றியோ, அல்லது ஆண்களும் பெண்களும் தங்கள் இணையைத் தேர்ந்தெடுப்பது பற்றியோ மனுதர்மம் சிந்திக்கக் கூட இடமளிக்கவில்லை. குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து வைத்து, பின் கணவன் உயிருடன் இல்லை எனில் காலம் முழுவதும் அக்குழந்தையையோ அல்லது இளம்பெண்ணையோ விதவை என்றும் உயிருடன் இருந்தால் வாழ்நாள் முழுவதும் அந்த ஆணுக்குப் பணிவிடை செய்யவும் வேண்டுமென எழுதி வைத்திருக்கிறது மனுதர்மம்.

காதல் பற்றிய பெரியாரின் பார்வை முற்றிலும் வேறுபட்ட எவராலும் வழங்கப்படாத சிந்தனை. காதல் என்பது ஆண்களோ பெண்களோ தனக்கான இணையை அவர்களே தேர்ந்தெடுக்கும் உரிமை என்பதைத் தாண்டி காதல் என்பதில் புகுத்தப்பட்டுள்ள

செயற்கையான கற்பிதங்களை எதிர்த்துப் பேசுகிறார்.

காதலுக்காக என்று இன்பமும் திருப்தியும் இல்லாமல் தொல்லைப்படுத்தபட்டு வருவதை ஒழிக்க வேண்டும். காதலின் தன்மை பற்றி கூறப்படும் கற்பிதங்களான காதலுக்கு இணையாக உலகில் வேறு எதுவும் இல்லை, காதல் ஒரு முறை மட்டுமே வரும், வேறு ஒருவரிடம் காதல் வந்தால் அது காதல் அல்ல; அது விபச்சாரம் என்று சொல்பவர்கள் உலக நிகழ்வுகளையும் மக்கள் மற்றும் இயற்கையின் இயல்பையும் உண்மையையும் அறியாதவர்கள், அல்லது வேண்டுமென்றே மறைக்கிறார்கள் என்கிறார்.

காதல் என்பது எப்படி ஒரு பொருளின் மீது அந்தப் பொருள் பற்றி அறியும் போது அது தனக்கு வேண்டும் என ஆவல் கொள்கிறோமோ அது போலவே ஒரு மனிதர் பற்றி எந்த வகையிலாவது அறியும்போது ஏற்படுகிறது என்கிறார். தற்போதைய இளைய சமுதாயத்தில் காதலில் சிக்கல் ஏற்படும் போது இருவரும் பேசிப் பிரிந்து விடுவதும் வேறு சரியான நபரை தேர்ந்தெடுத்துக் கொள்வதும் நிகழ்கிறது.

பெரியார் காதல் என்ற தலைப்பை 1931இல் எழுதுகிறார் தற்போதைய சமூகம் எந்த மாற்றத்தை நோக்கி நகர்ந்து இருக்கிறதோ அதை 88 ஆண்டுகளுக்கு முன் நமது சமூகத்திற்கு அறிவுறுத்துகிறார்.

காதலைப் பற்றிய கற்பிதங்களால் ஆண்களும் பெண்களும் தாங்கள் உண்மையான காதலர்கள் என காட்டிக் கொள்வது போல நடந்து கொள்கிறார்கள் எனச் சொல்லும்போது அதை பற்றி அவர் கூறும் ஒவ்வொரு உதாரணமும் நமக்கு ஒரு சமூகப் புரிதலை ஏற்படுத்தி செல்கிறது. பக்திமானாகத் தன்னைக் காட்டிக் கொள்ள நினைப்பவர்கள் செய்யும் காரியங்களும், குழந்தைகள் தூங்குவது போல் நடிக்கும்போது கண்களை மூடியிருந்தால், தூங்கினால் கால் ஆடுமே என்று பெரியவர்கள் சொன்னால் குழந்தைகள் தூங்குவதாகக் காட்டிக்கொள்ள கால்களை ஆட்டுவது போலவும், கால் விரல்களைப் பார்த்து நடப்பவள்தான் கற்புள்ள பெண் என்று சமூகம் கூறுவதால் கால் விரல்களைப் பார்த்து நடப்பது போல பெண்கள் நடிப்பார்களே அது போலவும் உண்மையான காதலர்கள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்று சொல்லி இருப்பதைப் போல நடந்து தங்கள் காதலைக் காட்டிக் கொள்கின்றனர் என்று எழுதுகிறார்.

காதல் என்பது அஃறிணை, பிற உயர்திணைப் பொருள்கள் மீது ஏற்படும் அன்பு, ஆசை, நட்பு போன்றவைதான். அதற்கு வேறு சிறப்பான தெய்வத்தன்மை ஒன்றுமில்லை மற்றும் ஆசையும், தேவையும், இலட்சியமும் மாறும்போது அன்பும், நட்பும் மாறுவது இயல்பு என்கிறார்.

இயற்கைக்கு மாறான சமூகத்தின் அனைத்துக் கற்பிதங்களையும் உடைத்துப் பேசியவர் பெரியார். அதுபோலவே காதல் என்பதன் மீது இருக்கும் இயல்பிற்கு மாறான கற்பிதங்கள் பற்றியும் அது மக்கள் வாழ்வில் ஏற்படும் மிக நுணுக்கமான அடிமைத்தனம் பற்றியும் எழுதுகிறார்.

காதல் என்பது ஒருமுறைதான் வரும் என்பதுபோன்ற கற்பனைகளால் ஒரு ஆண் ஒரே பெண்ணுடன் ஒரு பெண் ஒரே ஆணுடனும் இருக்க வேண்டி வருகிறது. எனவே கணவனோ மனைவியோ எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொண்டோ அல்லது லட்சியமோ, எண்ணமோ மாறும்போது அதற்குத் தடையாக அந்த உறவு இருந்தாலும் அவ்வாறே வாழ வேண்டி இருக்கிறது.

பெரியார் இக்கட்டுரையில் காதல் பற்றிய கற்பிதங்கள் ஆண்-பெண் கூட்டு வாழ்க்கையின் பயனை மங்கச் செய்கிறது என்று எழுதுகிறார். திருமணம் என்ற வார்த்தையைக் குறிப்பிடாமல் அவர் பயன்படுத்தும் ஆண் பெண் கூட்டு வாழ்க்கை, ஆண் பெண் கூட்டுத் துறை என்ற சொல்லாடல்களில் சமத்துவத்தையும் அந்த வாழ்க்கை முறையின் தன்மையையும் உணர்த்துகிறார்

காதல் பற்றிய பெரியாரின் பார்வை எப்படி ஒரு நுணுக்கமான வகையில் சமூகத்தில் அடிமைத் தன்மையைக் களைய முனைகிறதோ அதுபோலவே மறுமணம் தவறல்ல என்னும் கட்டுரையில் தலைப்பைக் கொண்டு நம்மால் கணிக்க முடியாத கருத்துக்களை எழுதுகிறார்.

ஒரு கருத்தை எழுதுவதற்கு முன் மணம், காதல் போன்ற சொற்களின் பொருளானது அது எந்த மொழியைச் சார்ந்தது, மற்ற மொழிகளில் அதன் பொருள் என்ன என்பதைப் பற்றி அடிப்படை ஆய்வைச் செய்கிறார். பின் மக்கள் வாழ்க்கையில் அது என்னவாக இருக்கிறது

மணமோ, காதலோ பற்றிய மனிதனின் இயல்பு என்ன என்பதையும் எழுதுகிறார். மனிதனின் இயற்கை இயல்புகளையும் தேவைகளையும் அடிப்படையாக வைத்தே கருத்துக்களைச் சிந்திக்கிறார்.

ஒரு மனைவி இருக்க ஆண் மறுமணம் செய்யலாமா என்ற நிலையிலிருந்து கட்டுரையைத் தொடங்குகிறார். ஒரு ஆண் மறுமணம் செய்துகொள்வது என்பது எந்தக் கொள்கையிலும் மதத்திலும் எந்த வகையிலும் தவறு எனச் சொல்லப்படவில்லை இந்து மதமும் மறுமணத்தை தவறு என்று சொல்ல முடியாது. இந்து மதத்தைச் சார்ந்த மக்கள் பல மணங்கள் செய்து கொண்ட கடவுளர்களை வணங்கி பூஜை செய்கின்றனர்.

ஒரு மனிதனுக்கு முதல் மனைவி இறந்து விட்டாலும், மனைவி மற்றொருவரிடம் ஆசைகொண்டு அது வெளிப்பட்டு விட்டாலும், தீராத நோய் உடையவராக இருந்தாலும், மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்தாலும் ஆண் மறுமணம் செய்வதை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் கணவன் மீது அன்பு இல்லாமல் அவனை இலட்சியம் செய்யாமல் மேலும் இவை எவ்வாறு இருந்தாலும் வாழ்க்கை திருப்திக்கும் இயற்கை என்பதற்கும் பயன்படவில்லை என ஆண் நினைத்தாலும் அப்போது அந்த ஆணின் கடமை என்ன என்ற மதக் கட்டுப்பாட்டுக்காரரும், அனுபவக் கொள்கைக்காரரும், பொதுமக்களும் கவனிக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு எழுதும்போது மத கட்டுப்பாட்டுக்காரர், அனுபவக் கொள்கைக்காரர், பொதுமக்கள் என்று தனித்தனியே குறிப்பிடுவதால் அவர்களின் கவனத்தை ஈர்த்து கருத்தைப் பற்றிச் சிந்திக்க வைக்கிறார்

பெரியார் இதே கட்டுரையில் மறுமணம் குறித்து மாறுபட்ட கருத்துள்ள சுயமரியாதை இயக்கத் தோழர்களுக்கு விளக்கமும் எழுதுகிறார் கல்யாண ரத்து குறித்து திட்டம் செங்கல்பட்டு மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எனவே சட்டத்தைப் பற்றி கவனிக்காமல் நியாயமென்று தோன்றியபடி நடந்துகொள்ள வேண்டுமென தனது தோழர்களுக்கு அறிவுறுத்துகிறார். ஒரு இயக்கத்தின் தலைவர் தன் இயக்கத் தோழர்களுக்கு இருக்கும் முரண்பாடுகளுக்கு விளக்கத்தை பொதுவெளியில் மக்களுக்கு எழுதும் கட்டுரையில் எழுதியதுடன் சட்டம் பற்றி கவனிக்க வேண்டாம் என்றும் எழுதுகிறார். இது அவரது வலிமையையும் கம்பீரத்தையும் உணர்த்துகிறது மேலும் பெருந்திரளான மக்களைக் கொண்டது பெரியார் இயக்கம் என்பதால் ஒரு அரசைப் போல அரசு வெளியிடும் ஆணையை போல தோழர்களுக்கும் செய்திகளை பொதுவெளியில் எழுதித்தான் சேர்த்திருக்க முடியும் என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம்.

ஒருவன் தன் மனதுக்குப் பிடிக்காத வாழ்க்கைக்கும் இயற்கை இன்பத்திற்கும் பயன்படாத மணமகளை அடைந்து விட்டதாகக் கருதினால் அந்த திருமண வாழ்க்கையை ஏன் தொடரவேண்டும். மணம் செய்து கொண்டோம் என்பதற்காக அன்பையும், ஆசையையும், இன்பத்தையும் தியாகம் செய்ய வேண்டுமா? வெளியிலிருந்து பேசுபவர்கள் உண்மை அறியாமல், நிலை அறியாமல் சிறிதும் பொறுப்பற்ற முறையில் பாமர மக்களின் ஞானமற்ற தன்மையை தனக்கு சாதகமாகக் கொண்டு பேசிவிடுகிறார்கள் மனித சுதந்திரத்திற்கும், இன்பத்திற்கும், திருப்திக்கும் விரோதமான விஷயங்களை எதற்காக காப்பாற்ற வேண்டும் என்னும் விஷயங்களை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்கிறார். அவ்வாறு சிந்தித்து பார்த்தால் அவர் கூறுவதைப் போல வாழ்வின் பெரும்பாலான பகுதியை மக்கள் அனைவரும் எதற்காக இந்த வழக்கத்தை பின்பற்றுகிறோம் எனத் தெரியாமல் அதை மிகுந்த கடமை உணர்ச்சியுடன் வழுவாமல் கடைபிடித்து வருகிறார்கள் என்பதை அறியலாம்

பெரியார் இந்தக் கட்டுரையில் முழுக்க ஆணின் மறுமணம் மனைவி இருக்க ஆண் மறுமணம் செய்து கொள்வது என்பது குறித்த செய்திகளையே திரும்பத்திரும்ப பேசுகிறார். ஒரு ஆண் மறுமணம் செய்துகொள்ளும் சூழ்நிலைகளை வரிசையாகக் கூறிவிட்டு இறுதியில் அந்த சூழ்நிலைகளைத் தாண்டி ஆணுக்குப் பெண்ணை பிடிக்கவில்லை என்றால் என்ன செய்வது மறுமணம் செய்து கொள்வது தவறா என்ற கேள்வியை எழுப்புகிறார் இவ்வாறு கட்டுரை முழுக்க ஆண் மறுமணம் பற்றியே பேசி விட்டு இறுதியாகப் பெண் மறுமணம் குறித்துப் பேசுகிறார்.

ஆண் மறுமணம் செய்து கொள்வதில் உள்ள சிக்கல் மறுமணம் செய்துகொண்ட பிறகு தற்போது இருக்கும் மனைவியின் நிலை என்ன

என்பதுதான். எனவே ஆணுக்கு வழங்கும் மறுமண உரிமையை பெண்ணுக்கும் வழங்கி விட்டால் அந்த கவலை இல்லாமல் போய்விடும். இவ்வாறு கட்டுரை முழுக்க ஆண் மறுமணம் குறித்து பேசும்போது வாசிப்பவர்களை ஒவ்வொரு கட்டத்திலும் கருத்தை ஏற்றுக்கொள்ளுமாறு உளவியல் ரீதியில் வழிநடத்துகிறார்.

.இறுதியில் பெண்களின் உரிமை குறித்து பேசும்போது இதுவரை சொன்ன ஆண் மறுமணம் குறித்த கருத்துக்களை ஏற்க முடிந்தால் பெண்ணுக்கான மறுமண உரிமை என வரும்போது ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறபடி அக்கருத்தை ஏற்றுக் கொள்ளும் மன நிலையை உருவாக்குகிறார்.

பெண்கள் அடிப்படையில் மனிதர்கள் என்ற நிலையிலிருந்து கருத்துக்களை எழுதுகிறார். எந்தெந்த காரணங்களால் புருஷனுக்குப் பெண் பிடிக்கவில்லையோ ஒத்துவரவில்லையோ அந்தக் காரணங்களால் பெண்ணுக்குப் புருஷன் பிடிக்காத போது இப்போது புருஷனுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லப்படும் சுதந்திரமும் சௌகரியமும் போல பெண்களுக்கும் ஏற்படுமானால் பிறகு இந்த மாதிரியான அனுதாபமும் கவலையும் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட இடமே இருக்காது என்பதுதான்.

நம்மைப் பொருத்தவரை ஆண்களுக்கு சொன்ன விஷயங்களெல்லாம் பெண்களுக்கும் பொருந்தும் என்றும் அவர்களுக்கும் ஆண்களைப் போலவே ஏற்படவேண்டும் என்றும் அம்மாதிரியே அவர்களும் நடந்து கொள்ளவேண்டும் என்றும் உலக வாழ்விலும் சமுதாயத்திலும் சட்டத்திலும் மதத்திலும் ஆண்களுக்கு உள்ள சௌகரியங்களும், உரிமைகளும் பெண்களுக்கும் இருக்கவேண்டும் என்றும் அப்பொழுதுதான் பெண்களுக்கு திருப்திகரமான இன்பத்தையும் ஆசையையும் அடைய முடியும் என்றும் கருதுகிறோம் என்கிறார்.

பெரியாருக்கு முன் சமூக விடுதலை பேசியவர்கள் பெண் விடுதலையை ஒரு வரையறைக்குள் நின்று பேசினார்கள். ஆனால் பெரியார் அதன் உச்சம் வரை சிந்தித்தார்.

பெரியாரின் பெண்ணியத்தைப் படிக்கும் போது தந்தை பெரியார் என்ற வார்த்தையின் பாரம் அதிகரிக்கிறது. ●

# பெரியாரும் இந்தியப் பொதுவுடைமையாளர்களும்: உறவும் முரணும்

**– க. காமராசன்**

*பெரியார் கம்யூனிஸ்டுகளுடனான முரணுறவைப் பெரும்பாலும் நட்பானதாகப் பார்த்தார். எண்ணற்ற கம்யூனிஸ்ட்களுடன் மிக நெருக்கமான தனிப்பட்ட உறவைப் பேணினார் என்பதற்கு அக்கம்யூனிஸ்ட்கள் எழுதிய நினைவுக்குறிப்புகள் சான்றுகளாக உள்ளன.*

தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி (1879-1973) நீண்ட நெடுவாழ்வு வாழ்ந்து மறைந்த தமிழகச் சிந்தனையாளர்; தத்துவவாதி; அரசியல் வாணர்; சாதிமுறை ஒழிப்புப் போராளி. அவர் இந்தியத் தேசிய காங்கிரசில் அரசியல் பொது வாழ்வைத் தொடங்கினார்; சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றை உருவாக்கி தமிழக அரசியல் உலகில் சுமார் அய்ம்பது ஆண்டுகள் (1925-1973) ஒளி குன்றா நட்சத்திரமாகத் திகழ்ந் தார். பெரியார் எப்போதும் தன்னை 'சமதர்மி' என்றே அழைத்துக் கொண்டார். பெரியாருடைய 'சமதர்ம'த்தை 'சுயமரியாதை சமதர்மம்' என்று ஆய்வாளர் எஸ்.வி.ராஜதுரை சுட்டுவார்.

பெரியார் அரசியல் வானில் உலாவிய காலத்தில் தான் தமிழகத்தில் பொது வுடைமை இயக்கமும் உரு பெற்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி, வளர்ந்து, பிளவுபட்டது.1938ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு உருவாக் கப்பட்டது. இதற்கு முன்னர் தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சிங்கார வேலர் தொடங்கிய லேபர் கிசான் கட்சி (1923); சிங்கார வேலர், பெரியார் முதலானோர் இணைந்து உருவாக்க முனைந்த சுயமரியாதை சமதருமக் கட்சி (1930-36); அமிர் ஹைதர் கான் உருவாக்கிய இளந்தொழிலாளர் சங்கம், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி முதலானவை முன்னோடி யாக அமைந்தன.

பெரியார் தன்னைத் தானே சமதர்மக் கொள்கைக் காரர் என்று கூறிக் கொண் டார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவுக்கு முன்னோடியான தமிழகப் பொதுவுடைமை இயக்கங்களில் ஒன்றாகச் சுயமரியாதை சம தர்மக் கட்சி உருவாக்கி வழி நடத்த முயன்றவர். இவற்றால் பெரியாருக்கும் தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்களுக்கும் இடையே பெரியாரின் வாழ்நாள் முழுவ தும் மிக நெருக்கமான தொடர்பு நிலவியது. இந்தத் தொடர்பு பெரும் பகுதி பரஸ்பரம் விமர்சித்து கொள்ளும் முரணுற வாகவே அமைந்திருந்தது. ஆயினும் இரு சந்தர்பங்களில் கூட்டுறவாக மலர்ந்தது.

**முரணுறவும் கூட்டுறவும்**

பெரியாருக்கும் பொது வுடைமையாளர்களுக்கும் கூட்டுறவு இரு சந்தர்ப்பங்களில் நிலவின. முதலாவது சந்தர்ப்பம், சுயமரியாதை சமதர்மக் கட்சி காலம் (1930-36). இந்தக் காலம் தான் தமிழகத்தில் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் உருவாக்க காலமும் ஆகும். சுயமரியாதை சமதர்மக் கட்சி சுயமரியாதை இயக்கத்திற்குள் ஒரு பிரிவாகத் தோன்றி வளர்ந்தது. இந்தப் பிரிவைத் தோற்றுவித்து வளர்த்தவர்கள் இந்தியப் பொதுவுடைமை யாளர்கள் ம. சிங்காரவேலு, ப. ஜீவானந்தம் என நம்பப்படு கிறது (கோ. கேசவன், 1990). ஆனால் இதை மறுத்து சுயமரி யாதை சமதர்மக் கட்சியை உருவாக்குவதில் பெரியாரும் பெரும் ஈடுபாடு கொண்டிருந் தார் என வாதிடப்பட்டுள்ளது (எஸ்.வி. ராஜதுரை - வ.கீதா, 1996). இது எவ்வாறாயினும் ம. சிங்காரவேலு, ப. ஜீவானந்தம் ஆகியோரின் கூட்டுறவால்தான் பெரியாருக்குச் சமதர்ம உணர்ச்சி ஏற்பட்டது என்ற வாதம் சரியாகப் படவில்லை. பெரியார் அவரே சொல்லிக் கொண்டது, ஜீவகாருணிய சன் மார்க்க மரபிலிருந்து சமதர்ம உணர்ச்சியைப் பெற்றார். இந்த உணர்ச்சித்தான் பெரியாரை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் முதலானோரிடம் கொண்டு சேர்த்தது. அதனால் இவர் களுடைய எழுத்துகளையும் இவர்கள் பற்றியும் நூல்கள் கொண்டுவந்தார். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை (மார்க்ஸ்-எங்கெல்ஸ்), பொதுவுடைமைத் தத்துவங்கள் (எங்கெல்ஸ்), மதமும் லெனினும் (லெனின் கட்டுரைகள்) முதலானவை அவர் கொண்டுவந்த மிகமிக முக்கியமான நூல்கள் ஆகும். குடிஅரசு இதழில் பொது வுடைமை பற்றி எண்ணற்ற மொழி பெயர்ப்புக் கட்டுரை களையும் சொந்தமாக எழுதப்பட்ட கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். இந்த எழுத்துகளின் சிறப்புத்தன்மை, இங்குள்ள சூழ்நிலைமைக்கு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் சிந்தனைகளை கையாளும் நோக்கத்தைத் தெள்ளத் தெளி வாக வெளிப்படுத்துவது ஆகும்.

பெரியாருக்கும் இந்தியப் பொதுவுடைமையாளர்களும் நிலவிய இந்த முதல் காலகட்ட கூட்டுறவு சுயமரியாதை சம தர்மக் கட்சியின் வேலைத் திட்டத்தை வரைவதில் பெரி யாருக்கும் ம.சிங்காரவேலு-ப.ஜீவானந்தம் ஆகியோருக்கும் ஏற்பட்ட முரண்பாடுகளால் முடிவுக்கு வந்தது. ப.ஜீவானந்தம் சுயமரியாதை சமதர்மக் கட்சியைக் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி கொண்டு கரைத்துவிட்டார்.

கூட்டுறவு நிலவிய இரண் டாவது சந்தர்ப்பம்1948-54. இந்தக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது; காங்கிரஸ் கட்சிக்கு விரோதி ஆனது. ஆகவே, விரோதிக்கு விரோதி நண்பன் என்ற வகை யில் கூட்டுறவு தோன்றியது. ஆயினும் மீண்டும் கம்யூனிஸ்ட் கட்சி கொள்கை அளவிலும் நடைமுறை அளவிலும் காங் கிரஸ் விரோதத்தைக் கைவிட்டு, இந்தியத் தேசிய மைய நீரோட்டத்தில் கலந்து, தேர்தல் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு, காங்கிரசுடன் நெருக்கம் காட்டத் தொடங்கி யவுடன் இந்தக் கூட்டுறவு முடிவுக்கு வந்தது.

மீதமுள்ள காலம் முழுவதும் பெரியார் இந்தியக் கம்யூனிஸ்ட்களுடன் முரணுறவு கொண்டிருந்தார். இந்தியத் தேசியவாதச் சொல்லாடல், வகுப்புவாரி பிரதிநிதித்துவ எதிர்ப்பு முதலானவற்றுக்காக

'பார்ப்பன கம்யூனிஸ்ட்கள்' எனக் கம்யூனிஸ்ட்களைப் பெரியார் கடுமையாக விமர்சித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சி, கூட்டுறவு நிலவிய காலங்களில் மட்டுமே பெரியாரை ஜனநாயக வாதியாக அதிகாரபூர்வமாக வருணித்தது; பிற காலங்களில் பிற்போக்குவாதி, வகுப்புவாதிய வாதி, ஏகாதிபத்திய ஆதர வாளர், முதலாளி-நிலவுடைமை நலன் பேணுநர் முதலான குற்றச் சாட்டுகளை முன்வைத்தது.

சிங்காரவேலர், ஜீவானந்தம், ப. ராமமூர்த்தி ஆகிய பொதுவுடைமையாளர்கள் பெரியாருடன் கூட்டுறவும் முரணுறவும் கொண்டிருந்தனர். ஏ.எஸ்.கே. மிக வித்தியாசமாக எப்போதும் பெரியாருடன் கூட்டுறவை வலியுறுத்தி வந்தார்.

இந்தக் கூட்டுறவு, முரணுறவு ஆகியவை குறித்து வரலாற்று விவரங்களுக்குள் யார் சரி, யார் தவறு என வாதிப்பது முடிவற்ற வாத பிரதிவாதம். இப்படிச் செய்வதைவிட பெரியார்-கம்யூனிஸ்ட்களிடையே நடைபெற்ற உரையாடல்களில் இருந்த சிக்கல் மையங்களைக் கவனிப்பதும், அவை பற்றிய வாத எடுத்துரைப்புகளைத் தொகுத்து ஆராய்வது பயன் தருவதாக அமையும் எனக் கருதுகிறேன்.

**சாதி ஒழிப்பு**

சாதி ஒழிப்பில் பெரியாரின் வாதங்கள் பண்பாட்டுத் தளத்தில் ஆனவை; கம்யூனிஸ்ட்களின் வாதங்கள் பொருளாதாரத் தளத்தில் ஆனவை என்கிற வாதம் முதல் தலைமுறை கம்யூனிஸ்ட்களில் பெரும்பான்மையோருடைய வாதம். இதன் தொடர்ச்சியாக, பொருளாதாரத் தளத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்த வுடனேயே பண்பாட்டுத் தளத்தில் மாற்றம், அதாவது சாதி ஒழிப்பு நிகழ்ந்துவிடும் என வாதிட்டனர். பொருளாதாரத் தளத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு 'இந்திய தேசிய' விடுதலையை சாதிக்க வேண்டும், முழுமைபடுத்த வேண்டும்; இதற்கு தேசிய / மக்கள் / புதிய ஜனநாயகப் புரட்சியைச் செய்ய வேண்டும் என வாதிடுகின்றனர். இறுதியாகத் தங்களது தேசிய ஜனநாயக / மக்கள் ஜனநாயக / புதிய ஜனநாயக முதலான சோசலிச வகை 'புரட்சி' ஒன்று மட்டுமே 'சாதிமுறை'யை ஒழிக்க முடியும் என வாதிடுகின்றனர். ஆகவே எப்போதும் 'ஏகாதிபத்திய எதிர்ப்பு'க்காக 'இந்து / இந்திய தேசியவாதி' களுடன் கூட்டுறவு கொண்டிருந்தனர். சாதி ஒழிப்பு, சமூகச் சீர்திருத்தப் போராட்டங்களை முன்னெடுத்த இயக்க மரபு வழியில் வந்தவர்கள் என்பதைவிட, தேசிய விடுதலை போராட்ட இயக்க மரபில் அடையாளப் படுத்திக் கொள்வதில் கம்யூனிஸ்டுகளின் முனைப்பு பிரசித்தம். இந்தப் போக்கில் தேசியவாதச் சொல்லாடல்களைத் தம்முடையதாகச் சுவிகரித்துக் கொண்டனர்.

சாதி ஒழிப்பு பற்றிய பெரியாரின் வாதம் பொருளாதாரம், பண்பாடு, அரசியல், சமயம், அன்றாட வாழ்க்கை முதலான எல்லாத் தளங்களையும் தழுவியது; எல்லாத் தளங்களையும் ஊடுருவிச் செல்வது. பெரியாரின் சாதி ஒழிப்பு வாதத்தில் மையம், பார்ப்பனர் என்னும் சமூக வகைமையை ஒழித்துக் கட்டுவது. எப்படி பொதுவுடைமை சமூக அமைப்புக்கு, முதலாளி என்னும் சமூக வகைமை ஒழிக்கப்படுவது அவசியமோ, அப்படி சாதி ஒழிப்புக்கு பார்ப்பன சமூக வகைமை ஒழிக்கப்படுவதும் அவசியம் என்பது பெரியாரின் வாதம்.

பார்ப்பன சமூக வகைமையின் இருப்பு இந்து மதம், இந்திய தேசியம், இவற்றின் தொடர்ச்சியாக அமைந்த இந்திய அரசு ஆகியவற்றால் ஆதாரப்பட்டிருப்பதால், இவற்றை ஒழித்தால்தான் பார்ப்பன சமூக வகைமையை ஒழிக்க முடியும் என்றார். காலனிய காலத்தில் பார்ப்பனரல்லாதவர் அல்லது சூத்திரர் அல்லது திராவிடர், இந்து மதம் - தேசியம் முதலான பார்ப்பனச் சூழ்ச்சிக்குப் பலியாகாமல், தங்கள் சமூக முன்னேற்றம் குறித்து அக்கறை கொள்ள வேண்டும்; பார்ப்பனரல்லாதவர்-அல்லாதவர், அதாவது தாழ்த்தப்பட்டோர் சுயமாக அமைப்பாகத் திரட்டிக் கொண்டு தங்கள் சமூக முன்னேற்றத்தில் / சுயமாரியதை ஆக்கத்தில் அக்கறை கொள்ள வேண்டும் என்பது பெரியாரின் வாதம். பின் காலனிய காலத்தில் இந்து / இந்திய தேசியம் இந்திய ஒன்றிய அரசாக உருவெடுத்தப் பின்னர், இந்திய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதன் மூலமாகவே சாதியை ஒழிக்க முடியும்என்றார். ஆகவே சாதி ஒழிப்புக்கு தமிழ்நாட்டு விடுதலை அவசியம் என வலியுறுத்தினார்.இந்திய யூனியன் அரசின் உறுப்பான இந்திய ஜனநாயகத்தைப் பித்தலாட்டம் என்றார். இப்படியான இலட்சியவாத இலக்கை, அவர் சமகால அரசியல் நிலைமைகளுக்கேற்ப முன்வைத்து அவரது போராட்ட இயக்கங்களை வழிநடத்திச் சென்றார்.

சாதி ஒழிப்பு குறித்து

கம்யூனிஸ்ட்கள் தங்களது வாதத்தை இப்போதும் அப்படியே தொடர்கின்றனர் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் சாதி ஒழிப்பில் அம்பேத்கர், பெரியார் ஆகியோரை ஏற்றுக்கொண்டு விட்டதற்கு அடையாளமாக இந்த வாதங்களை இணைத்து, சாதி ஒழிப்பிற்குப் பண்பாட்டு, பொருளாதாரத் தளங்களில் இணையாக வேலை செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். மற்றபடிக்கு, பெரியாரின் வாதம் பற்றிய தோழர்களின் புரிதலில் ஒரு முன்னேற்றமும் இல்லை.

பெரியார் பார்ப்பனச் சூழ்ச்சியான இந்து / இந்திய தேசியத்தைக் கம்யூனிஸ்ட்கள் ஏற்றுக் கொண்டதைக் கடுமையாக விமர்சித்தார். சாதி ஒழிப்பு குறித்து கம்யூனிஸ்ட்கள் அக்கறை கொள்ளவில்லை எனக் குறைப்பட்டுக் கொண்டார். பார்ப்பன எதிர்ப்பையும் இடஒதுக்கீட்டுக் கோரிக்கையும் வகுப்புவாதம் என்று முத்திரை குத்திய மார்க்சிஸ்ட் கட்சியை 'பார்ப்பனக் கட்சிகளில் ஒன்று' எனக் கடுமையாக விமர்சித்தார்.

**பார்ப்பன வகுப்பு எதிர்ப்பும் பார்ப்பனிய எதிர்ப்பும்**

கம்யூனிஸ்ட்கள் எப்போதும் பெரியாரின் பர்ப்பன எதிர்ப்பு தவறு; அது கூடாது; பார்ப்பனிய எதிர்ப்புதான் சரி என வாதிட்டு வருகின்றனர். இதுபற்றிய ஒரு உரையாடல்.

தோழர் 1 : பார்ப்பனியத்தைத்தான் எதிர்க்க வேண்டுமே ஒழிய, பார்ப்பனர்களை எதிர்க்கக் கூடாது.

தோழர் 2 : ஏன் தோழர் ...?

தோழர் 1 : பார்ப்பனியம் வேறு; பார்ப்பனர் வேறு. பார்ப்பனியச் சிந்தனைக்குப் பார்ப்பனர் பொறுப்பு அல்ல; இந்திய நிலவுடைமை சமூக அமைப்பு அல்லது அதன் மிச்ச சொச்சங்கள்தான் காரணம். ஆகவே பார்ப்பனிய எதிர்ப்புதான் சரி.

தோழர் 2 : ஓ அப்படியா தோழர். அப்படியானால் இது போலவே, நிலப் பிரபுத்துவத்தைத் தான் எதிர்க்கனும் நிலப் பிரபுகளை எதிர்க்கக் கூடாது; முதலாளியத்தைத்தான் எதிர்க்கனும், முதலாளிகளை எதிர்க்கக் கூடாது; ஏகாதிபத்தியவாதத்தைத் தான் எதிர்க்கனும் அமெரிக்காவை எதிர்க்கக் கூடாது; இல்லையா தோழர்...?

தோழர் 1 : இல்லை... இல்லை... நீங்கள் விதண்டா வாதம் பண்றீங்க... சரியில்லை.

'வகுப்பு' பற்றிய பெரியாரின் கருத்தாக்கம் மிகவும் சிரத்தையானது; மிக எதார்த்தமானது. இதில் ஏழை-பணக்காரன், தொழிலாளி-முதலாளி, உழைப்பாளி-சோம்பேறி ஆகிய எல்லா சமூக முரண்களையும் உள்ளடக்கி நோக்குவார். பார்ப்பனத் தன்மைக்கும் பணக்காரத் தன்மைக்கும் உள்ள உறவை வலியுறுத்துவார். பெரியார் 'Social Class' என்ற சொல்லுக்கு ஈடாக 'வகுப்பு' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார்/ திராவிடர், பார்ப்பனரல்லாதார்-அல்லாதார்/ தாழ்த்தப்பட்டோர் ஆகிய மூன்று வகுப்புகள் சமகால இந்திய/தமிழகச் சமுதாய அமைப்பில் இருக்கின்றன; நடப்பில் பார்ப்பன வகுப்பு சமுதாயத்தின் அனைத்து வளங்களையும் அபகரித்துக் கொண்டு, மீதமுள்ள இரண்டு வகுப்புகளை மிகுந்த சூழ்ச்சித் திறத்தோடு எல்லா நிலைகளிலும் ஒடுக்கி வருகின்றது. இந்தப் பார்ப்பன வகுப்பு கொடுங்கோன்மையிலிருந்து விடுபட பார்ப்பனரல்லாதாருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் உரிமை உண்டு.

தாழ்த்தப்பட்ட வகுப்பை அடிமைப்படுத்துவதில் பார்ப்பனரல்லாத வகுப்பு பெருமிதம் கொள்வதைக் கைவிட்டு, தாம் பார்ப்பன வகுப்புக்கு அடிமையாய் இருப்பதை உணர்ந்து, தாழ்த்தப்பட்ட வகுப்புடன் ஒன்றுபட்டுப் போராடி, வகுப்புரிமை பெறுவதின் வழி 'சூத்திர' இழிவைப் போக்கிக் கொள்ள வேண்டும். இதுதான் 'சூத்திர' இழிவைப் போக்கிக் கொள்வதற்கு ஒரே வழி.

பார்ப்பன வகுப்புக்கும் மற்ற இரண்டு வகுப்புகளுக்கும் உள்ள அசமத்துவம் கண்கூடு. இந்த அசமத்துவத்தை ஒழிக்க வகுப்புரிமை சகல மட்டங்களிலும் நிலைநிறுத்தப்பட வேண்டும். கல்வி, அரசுப் பணிகள் முதல் சமூக நிறுவனங்களான கோயில் வரை வகுப்புரிமை/ வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேவை. இது சமத்துவத்தைக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளில் ஒன்று. ஆகவேதான், வகுப்புரிமை சமதர்மக் கொள்கை வகைப்பட்டது என்றார் பெரியார்.

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் 'வகுப்பு', 'வகுப்புரிமை' என்ற பெரியாரின் கருத்தாக்கங்களை 'வகுப்புவாதம்', 'சாதிவாதம்' என்ற விமர்சித்துள்ளனர்; விமர்சனம் செய்து வருகின்றனர். 'வகுப்பு' என்பது வெறும் சாதிகள் தொகுப்பு என்று வாதிட்டனர். 'வர்க்கம்'தான் மெய்யானது. அசமத்துவம் முற்று முழுக்க பொருளாதார ரீதியானது மட்டுமே. மற்றவையெல்லாம் இரண்டாம்

தரமானது. இதுவும் தோழர்களின் வாதம். தொழிலாளி, ஏழை விவசாயி, பணக்கார விவசாயி, விவசாயத் தொழிலாளர், நிலப்பிரபு, சிறு முதலாளி, பெரு முதலாளி, தரகு முதலாளி என தோழர்களின் வர்க்கப் பகுப்பாய்வு முடிவுக்கு வராமல் போய்க்கொண்டே இருக்கின்றது. இதில் சாதிக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான உறவையும் தோழர்களால் தீர்மானிக்க முடியவில்லை. ஒரு சாதியில் பல வர்க்கங்களும் பல சாதிகளுக்குள் ஒரு வர்க்கமும் இருக்கின்றது என்ற வெற்றிகரமான சூத்திரத்தை இறுதியில் உருவாக்கிக் கொண்டுள்ளனர். ஆயினும் சமூக எதார்த்தம் இந்தக் கலைச் சொற்களில் அடங்காமல் திமிறிக்கொண்டு நிற்கிறது.

பொதுவாக, கம்யூனிஸ்ட்கள் பார்ப்பனரை ஒரு சமூக வகுப்பாகக் கொள்ளாமல், பிற சாதிக் குழுமங்களைப் போன்ற ஒரு சாதிக் குழுமமாகக் கருதுகின்றனர். அதனால் அப்பார்ப்பன சாதிக் குழுமத்தில் தொழிலாளி முதல் முதலாளி வரை சகல வர்க்கங்களும் நிலவுகின்றன என்றும், பார்ப்பன எதிர்ப்பு பேசி அக்குழுமத்தில் உள்ள தொழிலாளி வர்க்க ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றனர். எவ்வாறாயினும் நடப்பு இந்திய சமுதாய அமைப்பில் 'பார்ப்பன மேலாண்மை'யை / அசமத்துவத்தைப் பேணும் பார்ப்பனியத்தை எல்லா வகை கம்யூனிஸ்ட்கள் அரைகுறை மனதோடோ/முழு மனதோடோ ஏற்றுக் கொள்கின்றனர் (ஏற்றுக் கொள்ளாத அரிய வகை கம்யூனிஸ்ட்களும் உண்டு). ஆயினும் பார்ப்பன எதிர்ப்பு கூடாது, பார்ப்பனியத்தை / பிராமணிய எதிர்ப்பு தான் சரி. மேலும் இந்து மதம், இந்து / இந்திய தேசிய வாதம் ஆகியவை 'வரலாற்று'ப் பூர்வமானவை. இவை பற்றிய பெரியாரின் வாதம் தவறானவை என்பவை கம்யூனிஸ்ட் வாதங்கள்.

இந்திய வரலாறு முழுவதும், புத்தர் முதல் பெரியார் வரை பார்ப்பன எதிர்ப்பு பேசப்பட்டுள்ளது. ஆயினும் இந்திய வரலாற்றில் பார்ப்பன எதிர்ப்பை 'வகுப்புவாதம்'/ 'சாதிவாதம்' / 'இனவாதம்' / 'ஜனநாயக விரோதம்' என முதன்முறையாக மார்க்சியம் என்னும் தலைசிறந்த அறிவியலைக் கைகொண்டு கம்யூனிஸ்ட்கள்தாம் 'விஞ்ஞானப் பூர்வமாக' வரையறை செய்தனர். இதுதான் உலகிலே சிறந்த அறிவியலைக் கைகொண்ட பெறுபேறு.

தோழர்களின் இந்த வாதம்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் தொண்ணூறு சதம் உழைப்பாளி மக்களாக இருக்கும் பிற்படுத்தப்பட்டோர் / தாழ்த்தப்பட்டோர் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்புகளின் பொறுப்புகளில் உள்ள பிரதிநிதித்துவம் என்ன? 'பத்து' சதம் உள்ள பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதி உழைப்பாளிகளின் பிரதிநிதித்துவம் என்ன? இந்தக் கேள்வி தோழர்களிடம் அளவில்லாத சீற்றத்தை மட்டுமே உற்பத்தி செய்கிறது. தலைமைப் பொறுப்புகளுக்கு மார்க்சிய அறிவு, தகுதி, அனுபவம் உள்ள ஊழியர்கள், பிற்படுத்தப்பட்டோர் / தாழ்த்தப்பட்டோர் உழைப்பாளி மக்களிடமிருந்து இன்னும் உருவாகவில்லை; உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த சமதானத்தை நூறு ஆண்டுகள் கழித்தும் தோழர்கள் கூறுகின்றனர். என்னதான் இருந்தாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பார்ப்பன மேலாண்மையை ஒழிக்காது; புரட்சி தானே ஒழிக்கும். அதுவரையிலும் உழைக்கும் 'பார்ப்பன'வர்க்க மேலாண்மை நிலவத்தானே செய்யும்.

**இந்து மத / தேசிய எதிர்ப்பு**

கம்யூனிஸ்ட்கள் இன்றும் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விசயம் பெரியாரின் இந்து மத / இந்திய தேசிய எதிர்ப்பு. இந்து மதத்தையும் இந்தியத் தேசியத்தையும் பார்ப்பன வகுப்பின் நலன் பேணும் சூழ்ச்சியாகப் பெரியார் நோக்கினார். ஆனால் கம்யூனிஸ்ட்கள் இந்து மதம், இந்திய தேசியம் வரலாற்றுப் பூர்வமானவை என வாதிட்டனர்.

இந்து மதம், இந்து / இந்திய தேசியவாதம் பார்ப்பன நலன் பேணும் சூழ்ச்சி. இவற்றுக்கு எந்த வரலாற்றுப் பூர்வமும் இல்லை. இவை ஏமாற்று என்பது பெரியாரின் வாதம்.

இந்து மதத்தையும் இந்தியத் தேசியத்தையும் எதிர்த்ததற்கு மிக முக்கியமான காரணம் சுயமரியாதை என்னும் கருத்தாக்கமும் நடைமுறையும் ஆகும்.பெரியாருடைய இலட்சிய சமுதாயம் சுயமரியாதை சமதர்ம சமுதாயம் ஆகும். இதுதொடர்பான சிந்திப்பின் மீது முதலில் எனது கவனத்தை ஈர்த்தவர் வீ.எம்.எஸ். சுப குணராஜன் என்ற பெரியார் ஆய்வாளர்.பெரியாரின் "குடி"அரசு என்னும் கருத்தாக்கம் மிக முக்கியத்துவம் மிக்கது. ஆழமாகப் புரிந்துகொள்ளப்பட

வேண்டியது. நவீன தேச அரசுகளின் இறையாண்மை, குடியுரிமை என்னும் முரணில் பெரியார் ‘குடி’யை மையப் படுத்தினார். தேசியம், தேசம் என்பதிலிருந்து சுயமாக இறையாண்மையைப் பெறும் நவீன அரசுகளை நிராகரித்து, குடிமையை மையப்படுத்தி, அதிலிருந்து மட்டுமே இறைமை (அதிகாரத்தை) பெறும் அரசைப் பற்றி பேசினார். அதே போல அரசு என்பதையும் அரசாங்கம் (கவர்ன்மெண்ட்) என்பதையும் பெரியார் வேறு படுத்தி நோக்கினார். அரசு நிரந்தரமானது, அரசாங்கம் தற்காலிகமானது. இந்திய தேச அரசை பெரியார் நிராகரித்தார். ஆனால் கர்வன்மெண்ட்களை / கவர்னன்ஸை முக்கியப்படுத் தினார். ஆயினும் அவர் குடிமை மையப்படுத்திய/ கவர்னன்ஸை மையப்படுத்திய தமிழ்நாடு ‘குடிஅரசை’ முன்மொழிந்தார்.

தேர்தல் ஜனநாயக மைய நீரோட்டத்தில் பங்கேற்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள், கொஞ் சம் கொஞ்சமாக இந்தியத் தேசியவாத நீரோட்டத்தில் கரைந்துபோய் விட்டனர். அதே நேரத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்திய தேசிய வாதத்தையும் தேச/நாட்டுப் பற்றையும் கைவிடமுடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலையி லிருந்தே இந்திய-இந்து தேசிய வாதம் நடப்பு சமூக அமைப்பைப் பேணும் இந்தியத் தேசிய அரசுப் பொறிமுறையின் கருத்துநிலைக் கருவி என்னும் உண்மையை மறுதலிக்கும் நிலை வருகின்றது. அதனால் அவர்களால் கடும்போக்கு இந்திய-இந்து தேசியவாதத்தை மதவாதமாகப் பார்க்க முடி கின்றதே தவிர, பாசிசப் போக் காகக் காணமுடியவில்லை. பார்ப்பனிய இந்து பாசிசம் என அடையாளம் கண்டாலும் தங்களது சோசலிச வகைப் பட்ட ‘தேசிய / மக்கள் / புதிய ஜனநாயகப் புரட்சி’யே அதற்கு தீர்வு என வாதிடவும் செயல் படவும் முடிகின்றது. ஆனால் இந்து தேசியவாதத்தால் ஆதாரப்பட்டிருக்கும் இந்திய அரசு பொறிமுறை வீழ்த்தி இந்தப் புரட்சியை நிகழ்த்த கம்யூனிஸ்ட்களிடம் வலு இல்லை என்பது மட்டுமில்லை. அவர்கள் ‘இந்திய அரசு’ போன்ற ஒரு புரட்சி அல்லது ஜன்தன் ‘இந்திய’ சர்காரை அமைக்க கனவு காண்கின்றனர்.

பெரியார் பொறுத்தவரை பார்ப்பன வகுப்பையும் அதன் நலன் பேணும் இந்து மதம், இந்திய தேசியவாதம் ஆகிய வற்றைப் பார்ப்பன வகுப்பு கொடுங்கோன்மை என எடுத் துரைத்தார். பார்ப்பன வகுப் பின் கொடுங்கோன்மையை எதிர்ப்பதிலும் முறியடிப்பதி லும் பார்ப்பனரல்லாத வகுப்புகள் ‘வகுப்பு உணர்ச்சி’ பெறுவதும் ஒற்றுமையுமே முன்தேவை என வாதிட்டார். இதுகுறித்த பெரியாரின் வாதங்கள் எவ்வளவுதூரம் மெய்யானவை என நமது சமகால இந்துத்துவ அரசியலின் ‘திக்விஜயம்’ உணர்த்துகிறது.

மேற்கண்டவைதாம் பெரியாரும் இந்தியக் கம்யூனிஸ்ட்களும் விவாதிக்கும் தத்துவச் சிக்கல்கள் என நினைக் கிறேன். இது தொடர்பான தத்துவ விசாரணைகள் மேலும் மேலும் ஆழமாக நடக்கும் போதுதான் பெரியார் சிந்தனையும் இந்தியக் கம்யூனிஸ்ட்களின் சிந்தனையும் மெய்யாகவே நெருக்கமான கூட்டுறவைச் சாதிக்க இயலும்.

கட்டுரையாளர் : பத்திரிகையாளர்

# பெரியார் கருத்தியலின் அய்ந்து முக்கியக் கூறுகள்

- பேராசிரியர் ந. முத்துமோகன்

*வரலாறு என்றால் என்ன? என்ற கேள்விக்கு, கார்ல் மார்க்ஸ், வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என்று பதில் கூறினார். வரலாறெங்கும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு, மோதல் தொழில்படுகிறது என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். பெரியார் வருணங்கள், சாதிகள், இனங்கள் ஆகியவற்றுக்கிடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் போராட்டங்களும் தான் வரலாறு என்றார்.*

பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் இருபதாம் நூற்றாண்டு முழுவதையும் தழுவி நிற்கும் அரசியல் செயல்பாட்டுப் பரப்பைக் கொண்டவர். இருபதாம் நூற்றாண்டில் மேற்கிலும் கிழக்கிலும் அறியப்பட்ட கொள்கைப் போக்குகளை சராசரித் தேவைகளுக்கு மேலான அளவுக்கு அவர் அறிந்திருந்தார். சனநாயகம், குடியரசுக் கொள்கை, சோசலிசம், மார்க்சியம், அராஜகம் போன்ற அரசியல் கொள்கைகளை அவர் அறிந்திருந்தார். மேற்கில் பிரஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி போன்ற மிகப் பெரும் சம்பவங்களின் கொள்கைப் பின்புலங்களை அவர் அறிந்திருந்தார். மேற்கு நாடுகளில் விஞ்ஞானத் தொழில் புரட்சி ஒன்று நடந்து கொண்டிருக்கிறது, அவற்றை

அடிப்படையாகக் கொண்டு தத்துவங்களிலும் உலகப்பார்வைகளிலும் புரட்சி நடக்கத் தொடங்கி விட்டது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். மதங்களை ஓரங்கட்டி பகுத்தறிவுச் சிந்தனை முன்னுக்கு வருகிறது என்பதை அவர் தெரிந்திருந்தார். அறிவுக்கு ஒவ்வாதவை அனைத்தையும் தீக்கு இரையாக்குங்கள் என்ற குரல் ஓங்கி ஒலித்தது. ஒரு கல்வியாளர் போல அல்லது ஆராய்ச்சியாளர் போல அவர் அக்கோட்பாடுகளில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக, மிக மிக அடிப் படையான அர்த்தத்தில் அவர் ஓர் நடை முறையாளராக ஐரோப்பாவில் நடப்பவற்றை அறிவதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

மேற்கத்தியக் கொள்கைகளையெல்லாம் படித்துப் புலமை பெறவேண்டும் என்பது அவரது நோக்கமாக இருக்கவில்லை. அந்தக் கொள்கைகளை அச்சுக்கு அச்சு மாறாமல் இந்தியாவில், தமிழகத்தில் பரப்ப வேண்டும் என்பதும் அவரது நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, மேற்கத்தியச் சூழல்களில் முற்போக்கான முகம் காட்டும் கொள்கைகளை இந்தியச் சூழலுக்கு ஏற்பத் தகவமைக்க வேண்டும் என்பது அவரது அறிவிக்கப்படாத வேலைத்திட்டமாக இருந்தது. இது ஒரு சாதாரண விஷயம் அல்ல. இந்தியமயப்படுத்தல் அல்லது தமிழ்மயப்படுத்தல் அல்லது தன்வயப்படுத்தல் (Indigenization) என்று இதனைக் குறிப்பிடலாம்.

ஒரு மேற்கத்தியக் கருத்தை இந்திய மயப் படுத்தும் போது அல்லது தமிழ் மயப்படுத்தும் போது, முதலில் மிக முக்கியமாக, இந்தியச் சூழல், தமிழ்ச் சூழல், இந்திய சமூக அமைப்பு, பழக்க வழக்கங்கள், இந்தியத் தமிழ்ச் சமூக வரலாறு போன்ற விபரங்கள் சம்மந்தப்பட்டவருக்கு அத்துப்படியாகத் தெரிந்திருக்க வேண்டும். மிகப் பெரிய உயர் கல்வியை அவர் பெற்றிருக்க வேண்டும் என்று இதற்குப் பொருளல்ல, மாறாக, வாழ்வின் அனுபவத்தளங்களை அறிந்தவராக அவர் இருக்க வேண்டும். ஒரு மேற்கத்தியக் கொள்கையைக், கோட்பாட்டைத் தமிழாக்கம் செய்யும் போது, அந்தச் சொல் உச்சரிக்கப்பட்ட வுடன் தமிழருக்கு அது முழு அர்த்தத்தையும் அள்ளி வழங்குவதாக இருக்க வேண்டும். பெரியார், மேற்கத்தியக் கொள்கைகள் பலவற்றை, பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து ரஷ்யப் புரட்சி வரையில், தமிழாக்கம் செய்தார். அவற்றில் பலவற்றை அவர் விலக்கினார், சிலவற்றை ஏற்றுக் கொண்டார். வேண்டுதல் வேண்டாமை அவரிடம் இருந்தது. பெரியாரியத்தின் வெற்றிக்கு இவ்வகைத் தமிழாக்கமே மிக முக்கியமான காரணமாக அமைந்தது.

பெரியார் மேற்கில் பேசப்பட்ட சனநாயகம், குடியரசுக் கொள்கை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டார். ஆனால் பாராளுமன்ற சனநாயகம் அவரால் பாராட்டப்படவில்லை. அதுபோலவே, மேற்கில் பெரிதும் சிலாகிக்கப்பட்ட தனிமனித சுதந்திரத்தை பெரியார் பாராட்டவில்லை. இந்தியத் தமிழ்ச் சூழல்களுக்கு முதன்மை யானதாக அவருக்கு மக்கள் கூட்டங்களின் சுதந்திரம், அவர்களின் உரிமைகள் காட்சி யளித்தன. அவை சட்டபூர்வமாக நிறுவப்பட வேண்டும் என அவருக்குத் தோன்றியது. சனநாயகத்தை அவர் வலியுறுத்தியபோது தேர்தல் அரசியலை அவர் விலக்கினார். எமது கட்சி தேர்தலில் பங்கேற்காது என்று அவர் வெளிப் படையாக அறிவித்தார். அராஜகம் என்ற கோட்பாடு வரலாற்றில் காத்திரமாகத் தொழில்பட்ட இரண்டுவித அதிகாரங்களை மறுதலிக்கிறது. ஒன்று மத அதிகாரம், மற்றொன்று அரசியல் அதிகாரம். பெரியாரும் கிட்டத்தட்ட அது போலத்தான்.

பெரியார் ஆளும் வர்க்கம், ஒடுக்கப்பட்ட வர்க்கம் என்ற சொற்களை அதிகம் பயன்படுத்த வில்லை. அவை அவருக்கு மிக அருவமாகத் தென்பட்டன. இந்திய சமூகத்தில் கண்ணுக்கு நேராக இருந்த சாதி அமைப்பை பெரியார் கைநீட்டி அடையாளம் காட்டினார். சாதி அமைப்பின் உச்சத்தில் இருந்த "ஆளும் வர்க்கத்தையும்" அடிமட்டத்தில் கிடந்த ஒடுக்கப்பட்ட மக்களையும் பெயர் சொல்லி அவரால் "பளிச்" சென்று சுட்டிக்காட்ட முடிந்தது.

மோதல், முரண்பாடு ஆகியவற்றை அளவுகோலாகக் கொண்டு வரலாற்றை அளக்கும் முறையியலை அய்ரோப்பாவில் ஹெகல், மார்க்ஸ் போன்றோர் வழங்கினர். இந்தியாவில் பெரியாரும் அம்பேத்கரும் இந்த முறையியலை ஏற்றுக் கொண்டனர். சாதிகளும் இனங்களும் தத்தமக்கிடையே முட்டி மோதிப் போராடிக் கொண்ட வரலாறே இந்திய வரலாறு என்று பெரியார் கூறினார். ராமாயணம் வடக்கு, தெற்கு என்ற மோதலைக் குறித்தது. ஆரிய இனம் திராவிட இனத்தை அடிமை கொண்ட மோதல் அது என்று சித்தரித்துக் காட்டினார். காலனி ஆட்சி பற்றிப் பேசும்போது, உள்நாட்டிற்குள்

வழக்கிலிருக்கும் சாதி அமைப்பு காலனி ஆதிக்கம் இல்லையா? என்று கேள்வி கேட்டார்.

**வேர்களைத் தேடி..**

மேலே குறிப்பிட்ட தமிழ்மயமாக்குதல் அல்லது தன்வயப்படுத்தல் என்ற முறையியலைப் பெரியார் பயன்படுத்தும்போது, அவர் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக நின்று பேசுகிறார். இந்திய வரலாறு முழுவதிலுமே மேட்டுக்குடிகளுக்கும் அடித்தள மக்களுக்கும் இடையில் இடையறாத போராட்டங்கள் நடந்து வந்தன என்பதற்கு அவர் அடுத்தடுத்து பல எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்டுகிறார். அப்படி எடுத்துக்காட்டும்போது பெரியார் தன்னை அவ்வாறு போராடியவர்களுடன் இணைத்துக் காட்டுகிறார். நான் தனித்த மனிதனல்ல, எனக்கு ஒரு மரபு உண்டு, அது ஒரு போராட்ட மரபு என்று பெரியார் குறிப்பிடுகிறார். பண்டைய இந்தியாவில் சார்வாகர்கள், பௌத்தர்கள் ஆகியோரைச் சுட்டிக்காட்டுகிறார். பண்டைத் தமிழ் மரபில் திருவள்ளுவரை எடுத்துக் காட்டுகிறார், ஔவையை முன்னெடுத்துப் பேசுகிறார், கபிலரைப் பற்றிப் பேசுகிறார், சித்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இப்படி அவர் பேசும்போது நாம் அவரை அடையாளம் கண்டு கொள்ளுகிறோம். நான் மரபில் வேர் கொண்டுள்ளேன், அது ஓர் எதிர்ப்பு மரபு, போராடிய மரபு என்று பெரியார் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறார். தன்னை அவர் ஆண்ட பரம்பரையாக அடையாளப் படுத்தவில்லை. தெய்வீக அருள் பெற்ற பரம்பரையாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவற்றுக்கு எதிராகப் போராடிய ஒரு விமர்சன மரபாக முன்வைக்கிறார்.

தொடர்ந்து பெரியாரின் சித்தாந்தப் பயன்பாடுகள் என்று யோசிக்கும்போது, அல்லது பெரியாரின் வேர்களைத் தேடிப் பயணிக்கும் போது, குறைந்த பட்சம் ஐந்து முக்கியமான கூறுகள் (அம்சங்கள்) எனக்குக் கிடைக்கின்றன. அந்த ஐந்து விடயங்களைக் குறித்துப் பேசினால், பெரியாரிய சித்தாந்தத்தின் பயன்பாடுகளை, அவரது வேர்களைக் கண்டறியும் பணியில் நாம் மேலும் சில தெளிவுகளை அடைவோம் என்று கருதுகிறேன்.

**1. இந்து மதம் குறித்த பெரியாரின் கருத்துக்களை முன்வைத்து**

பெரியார் இந்து மதத்திற்கும் சாதி அமைப்புக்கும் இடையில் மிக இறுக்கமான உறவுகள் இருப்பதாகக் கண்டறிகிறார். இது மதங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளும் சமூகவியல் அறிஞர்களே சொல்லாத ஒரு கருத்தாகும். சமூகவியல் அறிஞர்கள் (எமிலி டர்க்கெய்ம், மாக்ஸ் வேபர் போன்றோர்) எல்லா மதங்களுக்கும் பொதுவான சமூகவியல் கோட்பாடுகளைக் கண்டறிந்து சொல்லு கிறார்கள். ஆயின் இந்து மதம் குறித்த மதிப்பீடுகளை வழங்கும்போது அவர்களிடம் ஒரு தடுமாற்றம் தென்படுகிறது. பெரியாரைப் பொறுத்தமட்டில் சாதியை உருவாக்கியதில் அதனைப் பாதுகாத்துப் பேணியதில் இந்து மதத்திற்கு பத்திரம் உள்ளது. சாதியை இந்து மதத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டால் அங்கு வேறு என்ன இருக்கிறது? என்றே அவர் கேட்பார்.

இந்து மதத்தை பிற மதங்களோடு பெரியார் ஒப்பிட்டுப் பேசுவார். கிறித்தவமும் இஸ்லாமும் அம்மதத்தின் பின்பற்றாளர்களை ஒன்றுபடுத்தும் நோக்கம் கொண்டவை. ஆயின் வர்ண வரிசையில் அல்லது சாதிப் படிநிலையில் மக்கள் கூட்டங்களைப் பிரித்துக் காட்டுவதையே இந்து மதம் அதன் பணியாகச் செய்கிறது. “இந்து சமூக ஒழுங்கு” என்ற சொல்லை அம்பேத்கர் பயன்படுத்துவார். சாதிகள், வர்ணங்கள் கலந்து விடக் கூடாது என்பதனை இந்து மதத்தின் பல புனித நூல்கள் உச்சக்கட்ட லட்சியமாக, தாண்டக்கூடாத எல்லைக்கோடாக (Categorical Imperative) அறிவிக்கின்றன. மகாபாரதப் போர் நடக்காவிட்டால் வர்ணக்கலப்பு நிகழ்ந்து விடும், உலக ஒழுங்கு அழிந்து விடும் என்று பகவத் கீதை கூறுகிறது. வர்ணக்கலப்பு எப்படி நிகழும், ஒழுங்கு எப்படி அழிந்து விடும் என்பது போன்ற கேள்விகளுக்கு பகவத் கீதையில் பதில் இல்லை. (Sampukan) ஆனால் அது ஒரு பேரழிவு குறித்த குறியீட்டு வாக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்திய வரலாறு முழுவதிலும் மேட்டுக் குடிச் சாதிகளுக்கும் அடித்தளச் சாதிகளுக்கும் இடையில் நிரந்தரமான போராட்டம் நடந்து வந்திருக்கிறது என்பதிலும் பெரியார் உறுதியாக உள்ளார். தேவர்கள்/அசுரர்கள் என்ற பெயரில், வைதீகம்/அவைதீகம் என்ற பெயரில், இந்துக்கள்/ பௌத்தர்கள் என்ற பெயரில், ஆரியர்/திராவிடர், சமஸ்கிருதம்/நீச மொழிகள் என்ற பெயரில், ராமன்/ராவணன் என்ற பெயரில் இன்னும் பல்வேறு பெயர்களில் நிரந்தரமாக அந்தப் போர்கள் நடந்து வந்திருக்கின்றன. வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என்று மார்க்ஸ் குறிப்பிட்டது போலவே இந்திய

வரலாறு என்பது வர்ணங்களுக்கு இடையில், சாதிகளுக்கு இடையிலான போராட்டம் என்பது பெரியாரின் (அம்பேத்கரின்) முடிவு. இன்றும் அதே போராட்டம் அதன் மிக உக்கிரமான வடிவத்தை எட்டியுள்ளது என்பதே அவரது கருத்து.

### 2. பெரியாரின் சுயமரியாதை எனும் கருத்தாக்கம்

காங்கிரஸ் இயக்கம் நாட்டு விடுதலையை முன்வைத்து சுயராஜ்யம் என்ற கோரிக்கையை முன்வைத்தபோது, பெரியார் சுயமரியாதை என்ற கருத்தாக்கத்தை உருவாக்கி அதனைத் தன் அடிப்படையான கோட்பாடுகளில் ஒன்றாக ஆக்கினார் என்பதனை ஆய்வாளர்கள் அறிவர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்களில் முதலாவதான சுதந்திரம் என்பதை சுயமரியாதை என்பதன் மூலம் மாற்றிப் பயன்படுத்தினார் என்றும் குறிப்பிடுவார்கள். எது எப்படியாயினும் சுயமரியாதை என்ற முழக்கத்தில் பெரியார் பிடிவாதமாக இருந்திருக்கிறார் என்பதை உணர முடிகிறது. சுயமரியாதை என்ற முழக்கத்திற்கு வேறு முன்னுதாரணம் எதையும் நம்மால் கண்டறிய முடியவில்லை. தமிழ்நாட்டிலோ, வெளிநாடுகளிலோ அம்முழக்கத்தை முன் வைத்தவர் எவரையும் நாம் கண்டடைய முடியவில்லை. இக்கருத்தாக்கம் பெரியாருக்கே தனித்துவமானது என்றே கொள்ள வேண்டி யுள்ளது. சுயமரியாதை என்பதன் மூலம் பெரியார் எதை விரும்பியிருக்கிறார்? அம்முழக்கத்தை அவர் வலியுறுத்துவதன் நோக்கம் என்ன?

உற்றுப் பார்த்தால், அடிமைத்தனம் என்ற கருத்தாக்கத்திற்கு எதிர்நிலையிலான ஓர் கருத்தாக சுயமரியாதை பெரியாரில் பயன்பட்டிருக்கிறது. இது ஒருவகையில் அகவயமான ஒரு கருத்து அல்லது ஒரு மனநிலை. சுயமரியாதை கொள்ளுதல் என்பது ஒரு விடுதலை பெற்ற மனநிலையை, அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று தன்னுணர்வினை அடைந்து விட்ட நிலையைக் குறிப்பதாக ஆகிறது. இது ஒரு தன்னுணர்வு என்றும் பொருள்படும். ஆங்கிலத்தில் Self Consciousness என்ற பொருளையும் இது குறிக்கலாம். பெரியாரின் சுயமரியாதை என்ற சொல் திடீரென ஒரு மிகப்பெரிய பொருண்மையை ஈட்டிவிட்டதாகத் தெரிகிறது. ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கம் அல்லது கூட்டம் விடுதலை பெற சுயமரியாதை என்ற தன்னுணர்வு மிக அடிப்படையானது. விடுதலைக்கான முன் நிபந்தனையாக பெரியார் சுயமரியாதை கொள்ளுதலைக் கருதியிருக்க வேண்டும். மார்க்சியர்களுக்கிடையில் ஜார்ஜ் லுக்காச் என்ற ஜெர்மானிய அறிஞர் வர்க்க உணர்வு என்ற கருத்தாக்கத்தின் முக்கியத்துவம் பற்றி ஏராளமாக எழுதினார். அதற்காக அவர் பாராட்டவும் படுகிறார்.

பொதுவாக, மேடையின் முன்னால் தலைவரின் பேச்சைக் கேட்கக் கூடியிருக்கும் மக்களை சந்தாஷப்படுத்துவது போல, அவர்களைப் பெரிதும் குளிரவைத்துப் பாராட்டிப் பேசுவதே பேச்சாளர்களின் வழக்கம். பெரியாரிடம் இதற்கு எதிர்மறையான அணுகுமுறையைக் காணமுடிகிறது. அவர் முன்னால் இருப்பவர்களைக் குளிரவைக்க மாட்டார். மாறாக, பெரியாருடைய பேச்சு முன்னால் இருப்பவர்களைத் தொந்தரவு செய்யும். அவர்களது மனதைத் தொட்டு குற்ற உணர்ச்சியைத் தூண்டி விடும். நீ ஏன் இப்படி அவனுக்கு அடிமையாக இருக்கிறாய்? என்ற கேள்வியை பெரியார் எழுப்புவார். அவன் உன் தாயை இழிவு படுத்துகிறான்! என்று சுட்டிக் காட்டுவார். பெரியாரின் இதுபோன்ற பேச்சுகள் தாம் என்னை தொந்தரவு செய்யும். என் சுயமரியாதையை உசுப்பி விடும். உன் சுயமரியாதை விழித்து விட்டால், உன் விடுதலை வசப்பட்டு விடும். பெரியார் உன்னைத் திட்டுவார், மனதைக் காயப்படுத்துவார், உன் வலியை அதிகப்படுத்து வார். தமிழ்நாட்டில் வேறு எந்தத் தலைவரும் எந்தப் பேச்சாளரும் கேட்பவர்களைக் காயப்படுத்த மாட்டார்கள். வர்க்க உணர்வு என்ற கருத்தை பிரக்ஞை, ஓர்மை போன்ற சொற்களின் வழியாக, காத்திரமான ஒரு கருத்தாக்கமாகப் பெரியார் செய்கிறார்.

### 3. பெரியார்: உள்ளிருந்து உருவாக்கும் சமத்துவம்

சமத்துவம் என்ற கருத்தைப் பெரியார் பிரெஞ்சுப் புரட்சியிலிருந்தோ ரஷ்யப் புரட்சி யிலிருந்தோ அறிந்திருக்கலாம். ஆயின் அதன் உள்ளடக்கத்தை அவர் தமிழ்ச் சூழல்களிலிருந்தே, இந்தியச் சூழல்களிலிருந்தே உருவாக்கினார். இங்குள்ள சூழல்களில் சமத்துவத்திற்குத் தடையாகவுள்ள சக்திகளை அவர் இங்கிருந்தே அடையாளப்படுத்தினார். சமத்துவமின்மையை பெரியார் இங்கிருந்தே கண்டடைந்தார். போராட்ட முறைகளையும் கூட இங்குள்ள சூழல்களிலிருந்தே தயாரித்தார். பெரியாரின் தனித்த முத்திரை இங்கு தான் உள்ளது.

சமத்துவமின்மைக்கு இந்திய வரலாறு

> **பெரியார் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறார். தன்னை அவர் ஆண்ட பரம்பரையாக அடையாளப் படுத்தவில்லை. தெய்வீக அருள் பெற்ற பரம்பரையாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவற்றுக்கு எதிராகப் போராடிய ஒரு விமர்சன மரபாக முன்வைக்கிறார்.**

எண்ணிலடங்கா எடுத்துக்காட்டுகளை பெரியாருக்கு வழங்கியது. அவற்றுக்கு இங்கே பஞ்சமேயில்லை. இவ்வாறாக, பெரியாரின் முறையியல், அணுகுமுறை உள்ளுக்குள்ளிருந்தே தொடங்குகிறது. பெரியாரைத் தூண்டிவிட்ட சக்திகள், கருத்துக்கள் வெளிநாட்டனவாக இருக்கலாம். ஆயின் பெரியார் வெளிநாட்டவர் அல்ல. அவரது சொந்த நாடே, சொந்தப் பிரச்சினைகளே அவரை வருத்தின. சொந்த வலிகளே அவரை இரவும் பகலுமாகச் சிந்திக்க வைத்தன. வலிக்காமல் பிள்ளை பெறமுடியாது என்று நம்மூரில் சொல்லுவார்கள் (நோகாமல் நொங்கு தின்னமுடியாது என்று இன்னொரு பழமொழியும் உண்டு). பெரியாருக்கு வலித்தது. அந்த வலிகளிலிருந்தே அவர் இந்த மக்களுக்குத் தேவையான சமத்துவத்தை முன்மொழிந்தார். பெரியார் முன்வைத்த சமத்துவத்தின் கூறுகள் உள்ளுக்குள்ளிருந்தே உருவாக்கப்பட்டவை.

**4. பார்ப்பனியம் என்ற பெரியாரின் கருத்தாக்கம்**

பெரியாரின் பார்ப்பனியம் என்ற கருத்தாக்கம் அவர் பார்ப்பனர்கள் மீது கொண்ட தனிப்பட்ட விரோதத்தினால் உண்டாக்கப்பட்ட தல்ல. அது இந்தியச் சமூக அமைப்பினை விளக்குவதற்கான ஒரு சமூகவியல் கருத்தாக்கம். இந்திய வரலாற்றின் மிகப்பழைய ஒரு சமூக நிறுவனத்தை அது சுட்டிக்காட்டுகிறது. அது ஒரு புரோகித நிறுவனம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சியான வரலாற்றை அது கொண்டது. தத்துவம், மதம், புனித நூல்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றை அது மிக முன்னதாகவே கைப்பற்றிக் கொண்டது. இந்திய வரலாற்றில், ஆதிக்கத்தின், அதிகாரத்தின் முதல் வடிவமாக அது உருவாகிற்று. தன்னளவில் அது அதிகாரத்தின் வடிவமாக ஆகியது மட்டுமல்ல, சமூகம் முழுவதிலும் அதிகாரத்தின் படிநிலை அமைப்பை அது கட்டமைத்தது. மிக விரைவில் அரசியலின் அதிகார வடிவங்களுக்கும் அது பழகிக் கொண்டது. புரோகிதச் சமயமும் அரசியலும் ஒன்றிணைந்த அதிகார வடிவங்களை அது சிறிதும் பெரிதுமாக நாடெங்கும் உண்டாக்கியது. குடும்பத்திலும் ஆண் பெண் உறவுகளிலும் கிராமீய அமைப்புகளிலும் தினசரி வாழ்விலும் அங்கிங்கெனாதபடி பார்ப்பனிய அதிகார வடிவங்கள் பரவின.

இந்திய சமூகத்தின் ஆளும் வர்க்கங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நுண்ணுணர்வு கொண்ட பெரியார் இந்திய சமூகத்தின் ஆகப்பெரிய, நீண்டநெடிய அதிகார வடிவம் பார்ப்பனியம் என்று கண்டறிந்தார். அது உள்நாட்டுக் காலனியத்தை உருவாக்கும் மாபெரும் ஏகாதிபத்தியச் சக்தி என்பதைப் புலப்படுத்தினார். படிநிலை நிர்வாக அதிகாரம் பார்ப்பனியத்தின் மிகப்பெரிய கருவி என்பது குறித்து அவர் நாள் தவறாமல் பேசினார்.

**5. பெரியாரின் எதிர்ப்பு-அடையாள (Resistance Identity) உருவாக்கம்**

பார்ப்பனியம், பார்ப்பனிய ஆணாதிக்கக் கூட்டணி, பார்ப்பனிய சத்திரியக் கூட்டணி, பார்ப்பனிய மூலதனக் கூட்டணி என்பவை இந்தியாவில் பார்ப்பனிய படிநிலை அமைப்பின் வரலாற்று வடிவங்கள். புரோகிதம், ஆணாதிக்கம், அரசியல், மூலதனம் ஆகியவை ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் அதனுடன் சேர்ந்து கொண்டன. இவை இந்தியாவை ஆட்சி செய்தன என்பது உண்மைதான். ஆயின் அவை தோற்றம் பெற்றக் காலம் தொட்டே அவற்றுக்கான எதிர்ப்புகளும் முளைத்தன. ஆரியம்/திராவிடம், வைதீகம்/அவைதீகம், லோகாயதம்/வேதாந்தம், சமஸ்கிருதம்/திராவிடம், வைதீகம்/பௌத்தம், வேதாந்தம்/தாந்திரிகம், சித்தாந்தம்/வேதாந்தம், செம்மொழிப் பண்பாடு/நாட்டார் பண்பாடு என்ற எத்தனையோ எதிர்வுகள் இந்திய மரபில் தோன்றின, போராடின, வென்றன, தோற்றன, நின்று நிலைத்தன. பெரியார் இவை அத்தனையின் ஊடாகவும் கொஞ்சமாகவும் அதிகமாகவும் தேடித்தேடிப் பயணித்தார். இவற்றின் ஊடாக விரிந்த ஓர் எதிர்ப்பு மரபை, எதிர்ப்பு அடையாளத்தை (Resistance Identity) பெரியாரால் கண்டறிய முடிந்தது. இந்த எதிர்ப்பு மரபின் தொடர்ச்சியாக, எதிர்ப்பு அடையாளத்தின் வளர்ச்சி நிலையாக அவர் இன்றைய தமிழ் மரபை உருவகித்தார். இதன் கூட்டாளிகள் இந்தியத் துணைக்கண்டத்தின் விரிந்த பரப்பெங்கும் உள்ளனர் என்பதை அவர் அறிந்திருந்தார்.

கட்டுரையாளர்:
மார்க்சிய ஆய்வாளர், முதுநிலை பேராசிரியர்

# கற்பின் பெயரால் ...

- ஓவியா அன்புமொழி

*பொதுதளத்தில் பெண் உரிமை பேசும் ஆண்கள் கூட அவர்கள் ஒருவரை இழிவு செய்யப் பயன்படுத்தும் கெட்ட வார்த்தைகள் எல்லாம் பெண்ணின் உடல் சார்ந்துதான் இருக்கும்.*

இன்றைக்கும் இந்த சமூகத்தில் பெண்களை அடிமைப்படுத்த இங்கு பயன்படுத்தும் வார்த்தை கற்பு. இந்த வார்த்தை ஒன்று தான் பெண்களின் உடல் மீதான வன்முறையை காலம் காலமாக நிகழ்த்தி கொண்டுவருகிறது. கற்பு என்ற ஒன்றை வைத்து சங்க கால இலக்கியம் முதல் இன்றுள்ள ஊடகம் வரை பெண்களை ஒரு புனித பிம்பமாக சித்தரித்து வருகிறது. இந்த புனித பிம்பத்தையும் , அடிமைத் தனத்தையும் முதலில் எதிர்த்து அதில் எந்த புனிதமும் இல்லை புடலங்காயும் இல்லை என்று போட்டு உடைத்த, உலகில் ஒரே தலைவர் தந்தை பெரியார் மட்டுமே.

இன்னும் ஒரு படி மேலே சென்று கற்பு என்ற வார்தையை பகுபதமா பகாபதமா என்று அதன் இலக்கணத்தையே ஆராய்ந்து கற்பு என்ற ஒன்று இருக்குமேயானால் அது ஒழுக்கம் சார்ந்தது என்றால் அது ஆணுக்கும் இருக்க வேண்டும் அல்லவா என்றார். மகளிர் நிறை என்ற வார்த்தை எப்படி வந்தது? கற்பு என்பது எப்படி பெண்ணுக்கு மட்டு மான சொல்லாய் மாறியது? இது பெண்ணை அடிமையாக்க ஆண்களால் கட்டமைக்கபட்ட

வார்த்தையே அன்றி வேறில்லை. இதை பெண்கள் தூக்கி எறியாதவரை இந்தத் திணிப்பு நீண்டு கொண்டுதான் இருக்கும். இந்த அடிமை விலங்கை உடைத்து எறியாவிடில் பெண் விடுதலையும் இல்லை சமூக விடுதலையுமில்லை.

பெண் சுதந்திரம் என்று பேசினாலே, இப்போது பெண்கள் எல்லாம் சுதந்திரமாகத் தானே இருக்கிறீர்கள். எல்லோரும் வேலைக்கு போறிங்க. படிக்குறிங்க. உயர்ந்த இடத்தில் இருக்குறிங்க. இன்னும் என்ன இல்லை என்று கேட்பவர்கள் அதிகம் உண்டு. உண்மை தான் எல்லா உரிமைகளும் பெற்றாலும் கற்பு என்ற கட்டமைப்பில் தான் இன்னும் சிக்குண்டு இருக்கிறோம். இதை வெறும் சாதி, மதம் மட்டும் புனிதமாக உயர்த்தி பிடிக்கவில்லை. பெண்களாகிய நாமும் இதனை புனிதமாக கருதி அதில் இருந்து வெளிவர யோசிக்கின்றோம்.

காரணம் நமக்கு சொல்லபட்ட கதைகள் எல்லாமே கற்பில் சிறந்தவள் கண்ணகி, நளாயினி, சீதை. இவர்கள் கதை சொல்வது எல்லாம் கணவன் என்ன கொடுமை செய்தாலும் அதனை பொருத்து கொள்ளும் பெண்தான் கற்பில் சிறந்தவள். மன்னனைக்கூட கேள்வி கேட்கும் துணிச்சல் உள்ள கண்ணகிக்கு தன் கணவனை கேள்வி கேட்க தைரியம் இல்லை. ஆனால் அவள் தான் “கற்புக்கு அரசி”. காட்டில் தவிக்க விட்டு சென்றாலும் அவன்தான் கண்கண்ட தெய்வம். கணவன் ஆசைப்பட்டால் கூடையில் வைத்து தாசி வீட்டிற்கு அழைத்து செல்ல வேண்டும். இவர்களை தான் இந்த சமூகம் கற்பின் இலக்கணமாய் வைத் துள்ளது. இப்பொழுது கற்பை அதன் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளும் பெண்கள் இதை செய்வோமா? ஏன் பெண்களுக்கு மட்டும் இவ்வளவு கட்டமைப்புகள் என்றால் இந்த கதைகள் அனைத்தும் ஆண்களால் எழுதப்பட்டது. இது ஆண்களின் மொழியாக உள்ளது. இதைத் தான் பெரியார் கேட்டார் இதையே ஒரு பெண் எழுதியிருந்தால் இந்த வார்த்தை வந்திருக்குமா என்று? இப்படியான ஒரு கருத்தியல் உருவாகியிருக்குமா என்று? இதில் வள்ளுவரின் குறளையும் விடவில்லை. கற்பு சார்ந்தும், வாழ்க்கை சார்ந்தும் வள்ளுவரின் குறளை ஆய்வுக்குட்படுத்தினார் பெரியார். ஒரு வேளை வள்ளுவர் பெண்ணாக இருந்திருந்தால் இப்படி எழுதியிருக்க மாட்டாரோ என்று கேட்டார்.

பெரியாரின் பெண் ஏன் அடிமையானாள்? நூலினை வாசிக்கும் பொழுதுதான் ஓல்கா அவர்கள் எழுதிய மீட்சி வாசித்தேன். அதில் புராணக் கதைகளில் வரும் அனைத்து பெண் கதாபாத்திரத்தையும் அவர்களின் குரலாய் எழுதியிருந்தார். ஒரு ஆணுக்கும் இன்னொரு ஆணுக்கும் நடக்கும் பிரச்சனையில் பெண்கள் எப்படி பாதிப்பு அடைகிறார்கள் என்றும், ஆண்களின் கொடுமைகள் பற்றியும் விரிவாக பேசிய புத்தகம் அது. அதில் அவர்களின் சுயமரியாதையும், உணர்வுகளையும் மிக தெளிவாக கூறியிருப்பார். பெரியாரின் பெண்ணிய பார்வையோடு மீட்சி எழுதப்பட்டிருக்கும். ஆண் சமூகத்தின் அடிமை விலங்கில் இருந்து மீண்டெழுந்து தனக்கான மாண்பை மீட்டுருவாக்கம் செய்ய செய்தது ஓல்காவின் மீட்சி.

குழந்தைப் பருவம் தொடங்கி காதல், திருமணம், பிள்ளைபேறு வரை அவர்களை ஒரு இயந்திர பொருளாகத்தான் இந்த சமூகம் பார்க்கிறது. தன் துணையைத் தேர்வு செய்வதில் தொடங்கி பிள்ளை பெறும் வரை ஆணாதிக்க சிந்தனை தான் தலை தூக்கி இருக்கிறது. வேண்டாம் என்று சொல்லும் உரிமை பெண்ணுக்கு இல்லை. ஆணின் காதலை ஒரு பெண் நிராகரிக்கவே முடியாது அதை மீறி நிராகரித்தால் அவளை பின் தொடர்வது, வற்புறுத்துவது, இறுதியில் வன்புணர்வு செய்யும் எல்லை வரை ஆண்கள் செல்கிறார்கள். பின் அந்த ஆணையே திருமணம் செய்து கொள்வார்கள் கேட்டால் இழக்க கூடாத ஒன்றை இழந்து விட்டேன் என்றும் தன் சுயமரியாதையை விட, உணர்வைவிட கலாச்சாரம், கௌரவம் தான் முக்கியம் என்று பெண்ணையே சொல்ல வைத்ததில் இந்த ஆண் சமூகம் வெற்றி அடைந்து விட்டது. இதை உடைத்து ஆண்மை ஒழியும் வரை பெண்கள் விடுதலை சாத்தியம் இல்லை என்றவர் தந்தை பெரியார். இதோடு இல்லாமல் ஆண்மையை நிலைநாட்டுவதில் சாதிக்கு மிக பெரிய பங்கு இருக்கிறது. புரட்சியாளர் அம்பேத்கர் இந்தியாவில் சாதிகள் என்ற புத்தகத்தில் பெண்ணடிமை குறித்து பேசும் போது சதி பழக்கம் குறித்து குறிப்பிடுகிறார். சதி பழக்கம் அதாவது உடன்கட்டை ஏறுதல்

நடைமுறைப்படுத்த மிக முக்கிய காரணம் ஆண் இறந்த பிறகு அந்த பெண் வேறு சாதி ஆணைத் திருமணம் செய்ய நேரிடும்; அப்படி செய்துவிட கூடாது என்பது தான் சதியின் சூழ்ச்சி. அந்த சதியை கற்போடு இணைத்துப் பார்த்தால் புரியும். கற்பு என்பதே ஒரு ஆணுடன் மட்டுமே உறவு வைத்து கொள்வதுதானே. வேறொரு ஆணுடன், வேறு சாதி என்றால் கற்பும் கலாச்சாரமும் என்ன ஆவது? கற்பும் சாதியும் பெண் களின் வாழ்வில் எவ்வளவு குரூரமான கட்டமைப்பை உரு வாக்கியுள்ளது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொலைநோக்கு சிந்தனை யாளர் பெரியார் இதை தான் மிக தெளிவாக சொன்னார் அந்தப் பெண்கள் உடன்கட்டை ஏறினால்கூட ஒருமுறைதான் சாவார்கள், ஆனால் உங்கள் கற்பிதத்தால் அதில் சிக்கி தினம்தினம் கொடுமைக்குள்ளா கிறார்கள் . உங்கள் கலாச்சார மும், கற்பிதமும் முதலில் ஒழிய வேண்டும் என்றார். இவர்கள் கலாச்சாரம் என்பது ஒரு பெண் ஒரு முறை தான் காதல் கொள்ள வேண்டும், அவனுடன்தான் உறவுவைத்து கொள்ள வேண்டும் காலத்திற்கும் அந்த ஆணுக்கு அடிமையாகவே இருக்க வேண்டும். ஆணுக்கு மறுமணம் என்பது மிக எளிது ஆனால் ஒரு பெண்னுக்கு மட்டும் அவ்வளவு விமர்சனங்கள், அறிவுரைகள், கட்டுப்பாடுகள். ஆண் என்றால் வீரம், கோபம், ஆண்மை யுடயவன். பெண் என்றால் பூ, புனிதம், மென்மை, பெண்மை. பொறுத்துப் போகும் பெண்களே பூமி ஆள்வார்கள் என்ற பசப்பு வசனம் பேசும் இந்த ஆண் சமூகம்.

**சதி பழக்கம் அதாவது உடன்கட்டை ஏறுதல் நடைமுறைப்படுத்த மிக முக்கிய காரணம் ஆண் இறந்த பிறகு அந்த பெண் வேறு சாதி ஆணைத் திருமணம் செய்ய நேரிடும் அப்படி செய்துவிட கூடாது என்பது தான் சதியின் சூழ்ச்சி.**

கடவுள் பெண்களை விபச்சாரிகளாக தான் படைத்தாராம். அதனால் தான் அவர்களை சுதந்திரமாக விடக் கூடாது. அப்படி விட்டால் அவர்கள் ஒழுக்கம் கெட்டு நடப்பார்கள். மேலும் பேதமையே பெண்ணிற்கு அழகு என்று தான் புராணங்கள் சொல்கின்றன. அறியாமையே பெண்களின் ஆபரணமாம். இந்த அசிங்கத்தைத் தான் புராணங்கள் பேசின. பெண் விடுதலை குறித்து பேசும் சில ஆண்கள் கூட இந்த இடத்தில் தன்னை சுயவிமர்சனம் செய்து கொள்ளவேண்டும். மேடையில், இன்றைய சூழலில் பெரியாரை ஆண்களை விட பெண்கள்தான் மிக சுலபமாக உள்வாங்கி கொண்டு அதை நடைமுறைப் படுத்துகிறார்கள் ஆண்களுக்கு அது சற்று கடினமாகவே உள்ளது, காரணம் அந்த ஆண்மை. ஆயிரம் இருந்தாலும் நான் ஆண் என்ற எண்ணம். இதிலிருந்து வெளி வருவது சற்று கடினம்தான். ஆனால் இது தான் பெண்களை குழந்தை பெறும் இயந்திரமாக மாற்றி உள்ளது. இதில் இரண்டு முக்கியமான பார்வை இருக் கிறது ஒன்று கணவனுக்குத் தந்தை என்ற அங்கீகாரம், பெண்ணுக்குத் தாய்மை என்ற புனிதம்; இதுதான் பெண்ணை முழுமை அடையச் செய்யும் என்று பெண்களை நம்ப வைக்கப் படுகிறது இந்த ஆண் சமூகத்தால். பெண்களே இந்த பெண்மையை முதலில் தூக்கி வீசுங்கள், நீங்கள் பிள்ளை பெற்று கொள்ளவில்லை என்றால் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விடாது, அப்படியே வந்தாலும் பரவாயில்லை, உங்கள் விடுதலை தான் முக்கியம் என்று அந்த காலத்தில் அறியாமையிலே வைக்கப் பட்டிருந்த சூழலில் மிக துணிச்சலாக பேசிய தலைவர் அதனால் தான் அவர் பெரியார். இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் அனைத்திற்கும் மூலதனமே அவரின் “பெண் ஏன் அடிமையானாள்” என்ற புத்தகம் தான்.

கற்பும், ஆண்மையும் உடன் பெண்மையும் ஒழிந்தால் மட்டுமே சமூகத்தில் பெண்கள் முழு சுதந்திரம் பெற முடியும். நமக்காக வாழ்நாள் முழுக்க போராடி நாம் சுயமரியாதை யோடு வாழ தன் இறுதி மூச்சு வரை பேசிய தந்தைக்கு நாம் நன்றி கடனாக ஒன்று செய் வோமேயானால் அது பெரி யாரை அடுத்த தலைமுறைக்கு நேர்மையாக கொண்டு செல்ல வேண்டும். நம் பிள்ளைகளுக்கு சொத்துக்கள் சேர்ப்பதைவிட மிகமுக்கியம் அவர்களுக்கு சுதந்திரத்தையும், சுயமரியதை உணர்வையும் கொடுப்பது தான்.

பெரியாரை வாசிப் போம்... பெரியாரைப் பரப்பு வோம்... பெரியாரியலை வாழ்வியலாகக் கொண்டு சமூக விடுதலை பெறுவோம்.

கட்டுரையாளர் : பெரியாரிஸ்ட்

# பெரியார் பார்வையில் சமயமும் பெண்ணும்

– முனைவர் இந்திரா

***அனைத்து சமயங்களுமே பெண்களுக்கு எக்காலத்திலும் எதிரானவையே என்பது தெளிவான ஒன்று. சமயங்கள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப் பட்டதோ அதைச் செய்யாமல் பெண்களை அடிமை செய்வதையும் அடக்குதலையுமே காலம் காலமாக செய்து கொண்டிருக்கின்றன.***

*பெண்களை மையமாகக் கொண்டே அனைத்து அடிமைச் சடங்கு களையும் சமயம் என்ற ஆணாதிக்க உணர்வு ஏற்படுத்தி இதன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டதோடு இன்றளவும் தொடர்ந்து கொண்டி ருக்கிறது. எனவேதான் பெரியார் சமயம் என்பது மிகப் பொய் கற்பனை என்றும், முழுப்பொய் என்றும் மக்களை குறிப்பாக பெண்களை ஏமாற்றுவதற்காவே ஏற்படுத்தப்பட்டதென்றும் கூறுகிறார்.*

*அன்றிலிருந்து இன்றுவரை பெண்கள் என்றாலே மென்மை யானவள் என்ற கருத்து நிலவுகின்றது. அவள் இயல்பாகவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களை உடையவள் என்று கூறப்படுகிறது.*

*‘அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்*
*நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப’ - (களவு 8)*

*என்று தொல்காப்பியார் கூறுகின்றார். இவ்வியல்புகளை உடையவராக பெண்கள் இருப்பதால்தான் தலைவி தன் காதலைத் தலைவனிடம் நேரடியாகக் கூற இயலாதவளாக இருக்கின்றாள் எனத் தெரிகிறது. ஆணுக்கு நிகராகப் பெண்கள் இருக்கவில்லை எனத் தெரிகிறது.*

**பெண் கொடுமையைப் பதிவு செய்யும் சமய இலக்கியங்கள்:**

இதிகாச காலகட்டத்திலேயே பெண்களின் பெருமை சிதைக்கபட்ட வரலாறும் தொடங்கி விட்டது. இந்திய நாட்டு சமய இலக்கியங்கள் அனைத்துமே பெண்களின் கண்ணீர் காவியங்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்தியாவின் மாபெரும் இதிகாசமான இராமாயணமும் மகா பாரதமும் கணவன் எவ்வளவு தான் தீங்கிழைத் தாலும் அதை பொறுமையுடன் சகிப்பதுதான் இறை பக்திக்கு நெருக்கம் என்று போதித்துள்ளன. இராவணன் கொல்லப்பட்டவுடன் சீதை தீக்குளித்து தனது தூய்மையை நிலைநாட்ட வேண்டியிருந்தது. அப்படியும் பின்னர் அவள் காட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள் என்று உத்தர இராமயணம் விவரிக்கிறது. இராமாயணத் தின் ஆரண்யகாண்டம் 13.5.6 இல் 'உலகம் தோன்றுவது முதல் பெண்கள் தாமரைஇலையில் தண்ணீர் போல் சலனப் புத்தியுடையவர்கள். வாள்போல் கூர்மையான கொடுமைத் தன்மையு டையவர்கள்' என்று பெண்மையை இழிவுபடுத் துவதை இராமனின் புகழ் பாடும் இராமாயணம் சமூகத்துக்குக் கற்றுக் கொடுத்ததை கண்கூடாகக் காணமுடிகிறது. பஞ்சபாண்டவர்களுக்கு மனைவியாக இருந்த திரெளபதியை ஈடாக வைத்து பகடையாடப்பட்டதால் அவள் தனது ஆடையை துச்சாதனன் பிடித்திழுக்க அவையோர் மத்தியில் அவமானப்படுத்தப்பட்டாள்.

இராமாயணமும் மகாபாரதமும் அக்காலங் களில் பல ஆண்கள் ஏராளமான பெண்களை மணந்தனர் என்று விவரிக்கின்றன. இதனால் தான் பெண்களின் பெருமை குறையத் தொடங்கியது. ஏமாற்றப்பட்டதால் தான் அகலிகை இந்திரனிடம் தன்னை இழந்தாள் என்ற உண்மையை உணர்ந் தும்கூட அவளது கணவன் கவுதம முனிவன் அவளைக் கல்லாகும்படிச் சபித்தார்.

பாகவத ஸ்கந்தம் 4-14-42-8-4.36 இல் 'ஒரு பெண்ணால் உண்மையாக நேசிக்கப்படுகிறவராக யாருமிருக்க முடியாது. ஒரு பெண் தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தனது கணவனையோ, குழந்தைகளையோ, சகோதரர் களையோ யாரை வேண்டுமானாலும் கொலை செய்யத் தயங்கமாட்டாள்' என்று அவலப் படுத்துவதிலிருந்து பெண்கள் மீதான வெறுப்பை உணரமுடிகிறது.

இத்துடன் மனுதர்மமும் பெண்களைப் பற்றிய மிகமோசமான கருத்துகளைக் கூறத் தயங்கவில்லை. மனு 2.213 இல் இவ்வுலகில் ஆண்களை மயக்குவதே பெண்களின் இயல்பு. எனவேதான் பெண்களிடம் பழகும்பொழுது விவேகிகள் எப்போதும் விழிப்புடனிருக்கிறார்கள் என்று கூறுவதிலிருந்து பெண் ஒரு போகப் பொருளாக இருந்த நிலையை அறிய முடிகிறது. படைப்பிலேயே கடவுள் பெண்களுக்கு அமைத்துள்ள இயல்பை அறிந்து ஒவ்வொரு மனிதனும் பெருமுயற்சி செய்து பெண்களைக் காத்துவரல் வேண்டும் (மனு 9:16) என்பதிலிருந்து அன்றைய நிலையில் பெண்கள் எந்தவித அளவிற்கு மோசமாக நடத்தப்பட்டுள்ளனர் என உணர இயலுகிறது. இப்படிப்பட்ட மனுதர்ம நூலை அம்பேத்கர் அவர்கள் வீதியிலிட்டு எரித்த செயல் மிகச் சரியான ஒன்றாகும்.

**அனைத்துச் சமயங்களிலும் பெண்களின் நிலை:**

இவ்வாறாக மகாபாரத காலம் தொடங்கி சிறுமைப் படுத்தப்படுவது பொறுக்க முடியாத அளவிற்குப் போனதால்தான் பல இந்துப் பெண்கள் பௌத்த மதத்திலோ சமண மதத்திலோ தங்களை இணைத்துக் கொண்டு பிக்குணி களாகவும் மாறத்தலைப்பட்டனர். அதனால் தான் புத்தரின் முக்கிய சீடர்களில் பெண்களும் இருந் தனர். அதேபோல் மகாவீரரின் சீடர்களாகவும் துறவிகளாகவும் பெண்கள் மாறினர்.

வேதகாலப் பெண்களுக்கு தங்கள் கணவர்களைத் தேடிக்கொள்ள கிடைத்த உரிமை பின்னர் வந்த பெண்களுக்கு கிடைக்கவில்லை என்பது தான் உண்மையாகும். அடுத்து வந்த காலக்கட்டங்களில் பெண்கள் தங்களது குடும் பத்தினருக்கும் சமுதாயத்திற்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்களாகவே இருந்தனர், இருக்கின்றனர். ஆண்கள் மட்டும் பல துணைவியரை மணந்துகொள்ள இந்திய சமூகம் அனுமதித்தது; அனுமதிக்கிறது. தன் மனைவியை யும் பக்திக்காக விட்டுக் கொடுத்த நிலையை இந்து தர்மத்தில்தான் காண இயலுகிறது. இயற்பகை நாயனாரிடம் ஒரு பக்தன் பெயரில் சிவபெருமான் அவரின் மனைவியைப் பிச்சையாகக் கேட்டாராம். உடனே மனைவியை அவர் விட்டுக் கொடுத்து விட்டாராம். பெண்ணின் பெற்றோர்கள் இதைத் தட்டிக் கேட்க தனது மனைவியை வெட்டிச் சாய்த்தார். உடனே பரமசிவன் இயற்பகை நாயனாரின் பக்தியை மெச்சி அவரை தன்னுடன் மோட்சத்துக்கு அழைத்துச் சென்ற புராணக் கதையில் பெண்ணின் நிலை எவ்வளவு இழிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஆழ்வார் வீட்டில் ஒரு வைணவ பக்தன் உணவருந்த சென்றான். உணவு சமைக்க பொருள்

இல்லாத நிலையில் கடையில் கடன் உதவி கேட்க, அவன்- இவன் மனைவியைக் கேட்டான். ஆழ்வாரும் தன் மனைவியை விட்டுக் கொடுத்து விருந்து வைத்த நிகழ்ச்சியில் பெண் எவ்வித முடிவு எடுக்கும் சுதந்திரமின்றி அடிமையாக இருந்த நிலை தெரிய வருகிறது.

வடஇந்தியாவில் நிகழ்ந்த இசுலாமியர் களின் ஆக்கிரமிப்பு காரணமாக முசுலீம் பெண்களைப் போலவே இந்துப் பெண்களும் பர்தா அணியத் தொடங்கினர். இன்றும் அந்த மரபு தொடர்கிறது. வீட்டை விட்டு வெளியே காலெடுத்து வைக்கும் ஒவ்வொரு பெண்ணும் நாட்டியக்காரிகளாகவும் வேசைகளாகவுமே கருதப்பட்ட காலகட்டமே முகலாயர்களின் ஆட்சிக்காலம். அவர்களால் தோற்கடிக்கப்பட்ட இராசபுதன மன்னர்களின் மனைவிகளெல்லாம் எங்கே மாட்டிக் கொண்டால் தாம் சீரழிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயத்தின் காரணமாகவே கணவனின் சிதையில் குதித்து உடன்கட்டை ஏறினராம். மீரா போன்ற பக்தைக்கு தான் விரும்பிய பகவான் கிருஷ்ணனை தொழக்கூட அனுமதி கிடைக்கவில்லை.

**பெரியார் பார்வையில் சமயமும் பெண்ணும்:**

இதுவரை நோக்கிய நிகழ்வுகளிலிருந்து சமயமானது எந்த அளவிற்கு பெண்களை அடிமைப்படுத்தியும் கற்பு என்ற போர்வையைத் திணித்தும் இருந்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. தந்தைபெரியார் அவர்களும் இதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் தொடர்புடையதல்ல என்பதும் ஆரியமொழியில் கற்பு என்ற சொல்லிற்கு அடிமை என்ற கருத்து நுழைக்கப் படுகிறது என்பதும் பெரியாரின் கருத்தாகும். இந்துசமயம் கற்பு என்பதற்கு பெண் என்பவள் பதியைக் கடவுளாகக் கொண்டவள். பதிக்கு அடிமையாக இருப்பதையே விரதமாகக் கொண்டவள். பதியைத் தவிர வேறு யாரையும் கருதாதவள் எனப் பொருள் கொடுத்திருப்பதுடன் பதி என்ற வார்த்தைக்கு அதிகாரம், எசமான், தலைவன் என்கின்ற பொருள் இருப்பதால் அடிமைத் தன்மையை புலப்படுத்துகின்றது.

ஆண்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது சமயங்கள் எந்த வொரு வார்த்தையையும் அடையாளத்தையும் குறிப்பிடவில்லை. இதற்கு ஆணாதிக்கமே காரணமாகும். அதனால் தான் பெரியார் கூறுகிறார், ‘ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்று வதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது ஓநாய்களால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர் களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பன ரல்லாதவர்களுக்கும் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும்” என்று.

இந்துமதத்தில் அறுபதாயிரம் பெண்கள் வரையிலும், இஸ்லாமிய மதத்தில் நான்கு பெண்கள் வரையிலும் கிறித்துவ மதத்தில் எவ்வளவு பெண்களை மணம் செய்து கொள்ள முடியுமோ அதுவரையிலும் மணம் செய்து கொள்ளலாம் என்று காணப்படும் நிலை அனைத்து சமயங்களுமே பெண்களை இழிவு படுத்துவதையே குறிக்கோளாகக் கொண் டுள்ளதைத் தெளிவாக அறிய முடிகிறது.

பொதுவாகவே சமயம் மனிதனின் முன்னேற்றத்தைப் பாதிக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. குறிப்பாக பெண்களின் முன்னேற்றத் திற்கு எதிராவுள்ளது. சமயத்தினால் உண்டாகின்ற சமுதாய இழிவுகளைப் போக்கப் பெரியார், மக்களுக்குப் பகுத்தறிவு விளக்கங்களைக் கொடுத்தார். சமயம் என்பது மக்களின் கூட்டு வாழ்க்கைக்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கும் பயன்பட வேண்டுமேயொழிய தடையான ஒன்றாக இருக்கிறது. எனவே அனைவரின் அமைதியான வாழ்க்கைக்குச் சமயத்தின் ஆதிக்கம் இல்லாத ஓர் உலகத்தை படைக்கவே பெரியார் விரும்பினார். பெரியாரின் பகுத்தறிவு ஒளியில் தாழ்ந்த தமிழகம் பெண்ணடிமையை ஒழித்த லிலும் பெண் முன்னேற்றத்திலும் தலை நிமிர்ந்து நின்றது, நிற்கின்றது.

**கட்டுரையாளர் : பூம்புகார் கல்லூரியில் பேராசிரியர்**

**பார்வை நூல்கள்:**


1. பெண் ஏன் அடிமையானாள்? தந்தைபெரியார் எதிர் வெளியீடு பொள்ளாச்சி.
2. பெரியார் ஈ.வெ.ரா- ஆறு அழகப்பன் சாகித்திய அகாதெமி சென்னை.
3. விடுதலை தந்தை பெரியார்
4. தமிழ்க் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம் - சே. இராசேந்திரன், பூமணி பதிப்பகம், சென்னை.
5. அம்பேத்கர் இன்றும் என்றும் - விடியல் பதிப்பகம், கோவை.

# சுற்றுச் சூழலில் ஜாதியம் - பார்ப்பனியம்

– நக்கீரன்

*பார்ப்பனியம் என்பது ஒரு சமூகக் கோட்பாடு. எப்படி முதலாளியம், மார்க்சியம், சூழலியம் போன்றவை ஒரு கோட்பாடோ, அதுபோன்றே இதுவும் ஒரு கோட்பாடு. சிலர் திரிப்பது போல இது இனவெறுப்பு சொல்லல்ல. பெரியார் திரும்பத் திரும்பச் சொன்னது போல எதிரி 'பார்ப்பனர்' அல்ல, 'பார்ப்பனியம்' என்கிற கோட்பாடு மட்டுமே. ஏனெனில் இந்தக் கோட்பாடுதான் 'சாதியம்' என்கிற அறமற்ற சிந்தனையை இம்மண்ணில் விதைத்தது. இந்தப் புரிதலோடு 'சூழலியலில் சாதியம்' என்கிற இக்கட்டுரைக்குள் நுழைய வேண்டுகிறேன்.*

இந்த கருத்தரங்கிற்கு முதலில் இடப்பட்டிருந்த பெயர் 'பெரியாரின் வேர்களைத் தேடி ' என்பதாகும். அதனை முகநூலில் பதிவிட்டவுடன் ஓர் இயற்கை அன்பர் என்னிடம், 'பெரியாருக்கும் சூழலியலுக்கும் என்ன தொடர்பு?'' என்று கேட்டார். பெரியாருக்கும் சூழலியலுக்கும் ஒரு தொடர்பும் இல்லைதான். ஏனெனில் அவருடைய காலத்தில் தற்காலத்தைப் போல சூழலியல் சீரழிவு எதுவும் ஏற்படவில்லை. அதனால் அதைப் பேசவேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை.

சூழலியல் குறித்து பெரியார் எதையும் சிறப்பாக பேசிவிடவில்லை என்றாலும் அதற்கான கருத்தியலை விட்டுச்சென்றுள்ளார். சூழலியலை விமர்சன முறையில் அணுகும்போது அது நன்கு புலப்படுகிறது. இந்தக் கட்டுரை முழுக்க பெரியாரியல் பார்வை தென்பட்டாலும் ஆங்காங்கே பொருத்தமான இடத்தில் அவருடைய சொந்த சொற்களையும் பொருத்தி அதைப் புரியவைக்க முயன்றுள்ளேன். இன்றைய சூழலியல் சீரழிவுக்கு காரணமான 'பார்ப்பன பனியாக் கூட்டணி'யை அன்றே அடையாளம் காட்டியவர் அவர்.

**காகம் – குருவிக் கதை**

சூழலியல் என்றால் அது காக்கா, குருவிகளைப் பற்றிப் பேசுவது என்பதே பொதுப் புரிதல். சாதியத்தை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளவும் ஒரு காக்கா-குருவி கதைதான் நமக்கு உதவுகிறது. சாதியம் குறித்த தன் ஆய்வில் இந்தக் கதையைதான் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த 'ஆலன் டண்டிஸ்' என்கிற நாட்டாரியல் ஆய்வாளர் தன் அடிப்படை அலகாகக் கொள்கிறார்.

ஓர் ஊரில் ஒரு காகமும், குருவியும் நண்பர்களாக இருந்தனர். ஒருநாள் இருவரும் சமைத்து சாப்பிட முடிவெடுத்தனர். அதன்படி குருவி அரிசி கொண்டு வர, காகம் பருப்பைக் கொண்டு வந்தது. சமையல் முடிந்ததும் காகம் தன் பங்கைக் கேட்டது. அப்போது குருவி காகத்திடம், "நீயொரு அழுக்குப் பிறவி. உன் அலகைக் கழுவி வந்தால்தான் உணவு" என்றது. காகமும் குளத்திடம் சென்று கழுவுவதற்குத் தண்ணீர் கேட்டது. காகம் கழுவினால் நீர் அழுக்காகிவிடும் என்று நினைத்த குளம் காகத்திடம், "நீ கரையோரமாக மான்கொம்பைக் கொண்டு துளையிட்டு ஊற்று நீரை எடுத்துக்கொள்" என்றது. காகம் மானிடம் சென்று கொம்பு கேட்க அது, "நீ மாட்டிடம் சென்று பால் வாங்கி வா. நான் அதைக் குடித்து ஊட்டமானதும் எனது கொம்பை ஒடித்துக் கொள்" என்றது. காகம் மாட்டிடம் சென்று பால் கேட்டது. மாடும், "நீ புல் கொண்டு வந்தால் பால் தருகிறேன்" என்றது. காகம் புல்லிடம் சென்று அதைப் பறித்துக் கொள்ள அனுமதி கேட்டது. புல், "மண்வெட்டி கொண்டு வந்து என்னைச் செதுக்கிக் கொள்" என்றது. காகம் கொல்லரிடம் சென்று மண்வெட்டி கேட்டது. அவரும் மண்வெட்டியைப் புதிதாகச் செய்ய உலையைப் பற்ற வைத்து, காகத்தைக் காற்று துருத்தியை அழுத்தச் சொன்னார். காகமும் துருத்தியை அழுத்துகையில் உலைநெருப்பில் விழுந்து இறந்துவிட்டது.

இந்த நாட்டார் கதை சிறு சிறு வேறுபாடுகளுடன் இந்திய ஒன்றியம் முழுக்க வழக்கில் உள்ளது. எளிய கதைதான், ஆனால் அதன் உள்ளடக்கம் இந்திய சாதி அமைப்பை அப்படியே திறந்து காட்டிவிடுகிறது. காகம் கருப்பு நிறம்; எனவே தாழ்த்தப்பட்ட சாதி. குருவி கருப்பு நிறமல்ல அல்லது வெண்மை நிறம் அதனால் உயர் சாதி. உணவு என்பது சமபந்தி; ஆனால் அது ஒரு சாரார்க்கு மறுக்கப்படுகிறது. இதில் பருப்பு என்பது உழைப்புச் சுரண்டல். குளம் என்பது அனைவருக்கும் பொதுவானதல்ல. நீர் என்பது ஒரு தூய்மைப்படுத்தும் பொருள். தீயில் விழுதல் என்றால் (நந்தன் முதலானோர்) சோதியில் அய்க்கியமாதல். இதனால் சொல்லப்படும் சுருக்கமான நீதி - பிறப்பிலேயே தீட்டானவருக்குச் சாவுதான் தீர்வு.

மேற்கண்ட காகம்-குருவி நாட்டார் கதையில் காகம் இழிவின் குறியீடாக விளங்குகிறது. ஆனால் தமிழ் இலக்கியங்களில் காகம் ஒரு நல்நிமித்த பறவை. அதன் கரைதல் விருந்தினரை அறிவிப்பதாகும் (குறுந்தொகை.210, ஐங்குறுநூறு. 391). இது இன்றைய சாதிய மனதுக்கும் அன்றைய சாதியமற்ற மனதுக்கும் உள்ள இடைவெளியைக் காட்டுகிறது. சாதியம் உருவானதற்குப் பல காரணிகள் இருப்பதாக அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். சாதியத்தின் அடிப்படை அலகான 'தீண்டாமை' குறித்து நுணுக்கமாக ஆய்வு செய்கையில் அது சூழலியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை உணரமுடிந்தது. அதைதான் இக்கட்டுரை விரிவாகப் பேசவிருக்கிறது.

தீண்டாமையை அம்பேத்கர், 'ஸ்தூல தீண்டாமை (Literal), சூட்சும தீண்டாமை (notional) என்று இரண்டு பிரிவாக வகைப்படுத்துவார். கண்ணுக்குப் புலனாகும் ஸ்தூல தீண்டாமை, காலம்-வெளி-சூழல் ஆகிய பின்னணியைக் கொண்டது. இது தனிநபர் சார்ந்து வெளிப்படுவதால் ஒத்தத் தன்மை கொண்டிருக்காது. அதேசமயம் சூட்சும தீண்டாமை என்பது நுண்மையான 'கருத்தியல் தீண்டாமை. ஒருவேளை ஸ்தூலமான தீண்டாமை அதாவது வெளிப்படையான தீண்டாமை அறவே அற்றுப் போனாலும், நுண் தீண்டாமை அதற்கான தார்மீகக் கருத்தியலை எங்கிருந்து பெறுகிறதோ, அது நிலைத்திருக்கும் வரை தீண்டாமை தொடரவே செய்யும் என்கிறார் அம்பேத்கர் (ராமாநுஜம், 2016).

அந்தத் தார்மீகக் கருத்தியல் தோன்றும் இடம் எது என்கிற கேள்விக்கு 'அசுத்தம்' என்பதில் தொடங்கி 'அகமணம்' என்பது முடிய பல பொருத்தமான காரணிகள் பேசப்படுகின்றன. வியப்பளிக்கும் விதமாக இவை ஒவ்வொன்றின் பின்னணியிலும் சூழலியல் தன்னைப் பொருத்திக் கொள்வதைக் காண்கிறேன். இவற்றை மேலும் துல்லியமாக அடையாளம் காண நம் பயணத்தை மத்திய ஆசியாவிலிருந்து தொடங்குவோம்.

* * *

## ஒளி X இருள் = வெள்ளை X கருப்பு

மத்திய ஆசியாவின் ஏதோவொரு சர்ச்சைக்குரிய பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களே ஆரியர்கள். குளிர்ப்பகுதி சார்ந்த அம்மக்களுக்கு அங்கிருந்த பருவநிலையே அவர்களின் மதக் கருத்தியலை வடிவமைத்துத் தந்தது. வெப்பமண்டலப் பகுதியைப் போல அல்லாது குளிர்ப்பகுதியில் ஞாயிறு அரிதாகவே தோன்றும். அது தோன்றும் காலம் மகிழ்ச்சியைத் தந்தது. எனவே சூரியன், மித்திரன், ஆதித்தன், சவிதா போன்ற அவர்களுடைய பல தெய்வங்கள் ஞாயிறோடு தொடர்புடையதாக இருந்தது. ஞாயிறைக் குறித்து ஏராளமான சுலோகங்கள் இயற்றப்பட்டிருந்தன. ஞாயிறு துதிக்கப் பட்டு 'சூரியபகவான்' ஆனார். காயத்ரி மந்திரமே ஞாயிறைத் துதிப்பதுதான்.

ஞாயிறு தோன்றாத நேரங்களில் குளிரையும் இருளையும் போக்க நெருப்பு மூட்டப்பட்டது. அந்நெருப்பு ஞாயிறைவிட எல்லாக் காலங்களிலும் உடனிருந்ததால் காலப் போக்கில் அதன் மதிப்பு உயர்த்தப்பட்டு 'அக்னி பகவான்' ஆனது. அதாவது இருளைப் போக்கிய ஒளி வணக்கத்துக்கு உரியதானது. வெளிச்சமற்ற காலம் இருளாக இருந்ததால் அது மகிழ்ச்சியற்றதாக இருந்திருக்க வேண்டும். ஒளி என்பது வெண்மையுடன் தொடர்புடையது. வெண்மைக்கு எதிர்மை கருப்பு. இருள், இரவு அனைத்தும் கருப்புதான். எனவே இயல்பாகவே கருப்பு என்கிற நிறத்தின் மீது வெறுப்பு உருவாக்கியிருக்க வேண்டும்.

வெள்ளை X கருப்பு என்கிற பாகுபாட்டில் இருந்தே வர்ணப் பிளவுகள் தோன்றின என்று "ஆரிஜின் அண்ட் குரோத் ஆஃப் இந்தியா" எனும் நூலில் நிருபேந்திரம் குமார் தத் கூறுவது கவனத்துக்குரியது. அதுபோல் இன இடப் பெயர்ச்சியுடன் மொழி, பண்பாடு ஆகியவை கடப்பது போல வர்ணப் பாகுபாடும் (வெள்ளை X கருப்பு என்கிற பிரிவினை) கடந்து வந்துள்ளது என்கிறார் ஓம்வெட். (தி.கு. இரவிச்சந்திரன், 2014).

'வெண்ணிறம், தாமிர வண்ண, மஞ்சள் நிறக் கூந்தல் ஆகியவை பார்ப்பனர் என்பதற்கான அடையாளங்கள்' என்று தனது 'மகாபாஷ்யம்' (2-2-6) நூலில் பதஞ்சலி பெருமைப் படுகிறார். இப்பெருமையை ரிக் வேதத்தின் பல சூத்திரங்களிலும், பரத்வாஜர், வசிஷ்டர் போன்ற முனிவர்களிடத்தும் காணமுடியும். இத்துடன் நீல நிற கண்களும் அவர்களின் பெருமைக்குரியதே. வெண்மையைக் குறித்து பெருமைப்படும் அதேநேரம் விஸ்வா மித்திரர் உள்ளிட்ட பலரது சுலோகங்களில் 'கருப்பு' நிறத்தின் மீதான வெறுப்பையும் காணமுடியும் (ராகுல, 2017). ஆனால், ஆரியர்களின் இந்த வெற்றுப் பெருமை முற்றிலும் அறிவியலுக்குப் புறம்பானது.

கிழக்கு ஆப்பிரிக்காவில் தோன்றிய மானுட இனத்தின் ஆதிநிறம் 'கருப்பு' என்கிறது அறிவியல். குளிர்ப்பகுதிக்கு இடம் பெயர்ந்தவர்கள் காலப் போக்கில் தம் உடலில் இயல்பாக அமைந்திருந்த 'மெலனின்' நிறமியை இழந்து வெளுத்துப் போயினர். மந்தாரமான வானத்தின் கீழ் நடமாடிய இனங்களுக்குக் கண்களைச் சார்ந்த நிறப்பசை குறைந்ததால் அவை நீலநிறம் அடைந்தன. வெயிலொளி மிகுந்த இடங்களில் வசித்த மக்களுக்குக் காப்புக்கு அவசியமான நிறப்பசை மேம்பட்டுக் கண்கள் கருப்பு அல்லது கபில நிறத்தில் இருந்தன. மயிரின் நிறத்துக்கும் இது பொருந்தும் என்பார் டாக்டர் வேட்டூ அவர்கள். (ஞானப்பிரகாசர், 2013).

இயற்கை குறைபாடு கொண்ட ஓரினம், இயற்கையின் இயல்போடு இருந்தவர்களைத் தாழ்மையாக எண்ணியது வேடிக்கையே. சிந்துவெளிப் பகுதிக்குள் நுழைந்த ஆரியர்களுக்கும் இந்த அறிவீனம் இருந்தது. அதன் காரணமாகவே அவர்கள் இங்கிருந்த கருநிற மக்களைத் தாழ்மையாக நோக்கினர். இத்தகைய அறிவற்ற மக்களை, 'கால்நடையை ஓட்டிக் கொண்டு கால்நடையாய் வந்த கால்நடைகள்' என்று பெரியார் வருணித்தது பொருத்தமாகவே உள்ளது.

தோல் நிறத்தை அடிப் படையாகக் கொண்டே, 'சதுர்வர்ணங்கள்' என்கிற நான்கு வர்ணம் உருவாக்கப் பட்டன. வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கருப்பு முதலிய நிறங்கள் முறையே பார்ப்பனர், சத்ரியர், வைசியர், சூத்திரர் ஆகிய வகுப்புகளைப் பிரதி பலித்தன. காலப்போக்கில் முதல் மூவர்ணங்களும் ஒன்றிணைந்து இறுதியில் வெள்ளை X கருப்பு என்கிற இருமையில் வந்து நின்றது. இந்த வேறுபாடு மனிதர்கள் மட்டுமன்றி இயற்கைசார் பொருட்கள், உயிரினங்கள் அனைத்திலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. வெண்ணிறப் பொருட்களும் உயிரினங்களும் உயர்வானதாக

மாற, கருநிற பொருட்கள் இழிவானதாக மாறியது.

குளிர்ப் பகுதியில் ஆரியர்களின் குளிரைப் போக்கிய ‘சூரிய பகவான்’ வெப்பமண்டலப் பகுதியின் இருள்நிற மனிதர்களால் ஏற்பட்ட தீட்டினைக் கழிக்கும் கருவியாகவும் விளங்கினார். மனுவின் காலத்தில் சண்டாளர் இரவில் நடமாடக் கூடாது (மனு.10:43). பகல் என்றால் அவர்களைப் பார்த்த தம் கண்களால் பார்ப்பனர்கள் சூரியனைப் பார்த்துத் தீட்டுக் கழித்துக் கொள்வர். இரவில் அதற்கு வழியில்லை (தி.கு. இரவிச்சந்திரன், 2014).

தேவர்கள் X அசுரர்கள் என்கிற இருமையே வெண்மை X கருப்பு என்பதின் எதிரொலி தான். நாட்டார் கதையில் வரும் காகம் என்கிற கருநிறப் பறவை யின் தேர்வு வடிவமைக்கப்பட்ட உளவியலே. காகம் என்பது அசுர வகை. அசுரர் நிறம் கருப்பு. மேலும் அசுரர்கள் தீமை செய்பவர்கள். தீமை செய்யும் தெய்வமான சனியின் வாகனம் இந்தக் கருநிற காகம்தான். அதே சமயம் படைப்புக் கடவுளான பிரம்மாவின் வாகனம் அன்னம். அது வெண்மை நிறம்.

வெண்ணிறத்தில் இருக்கும் பசு ‘காமதேனு’வாக மாற, கருநிற எருமை சாவுக் கடவுள் எமனின் வாகனமானது. அதிலும் ஆண் எருமை எதிர்த் தன்மை கொண்டது. தீமையைக் குறிப்பது. பறையர் களோடு இணைந்து நோக்கதக்கது (டோனி வெண்டிகர், 2016). எருமை இந்நிலத்தின் கடவுள். ‘மசோபா’ எனும் பெயரில் அது வணங்கப்பட்டது. அந்தத் தெய் வத்தை வணங்கியவர்களின் குலம் வெல்லப்பட்டதன் அடை யாளம்தான் ‘மகிஷாசுர மர்த்தினி’ (மகிஷம் - எருமை) கதையாகும் (டி.டி.கோசாம்பி, 2017). வெள்ளை X கருப்பு அரசியல் உயிரினங்களில் இருந்து தாவரப் பொருட் களுக்கும் தாவியிருந்தது. தமிழ கத்தில் சாதாரண உணவாக இருந்த ‘காரெள்’ (கருப்பு எள்) இன்றைக்குத் துக்கச் சடங்கு களில் இடம்பெறும் பொருள் (கு.வி.கிருஷ்ணமூர்த்தி, 2011).

புராணத்திலும் கூடச் சிவன் கருநிறக் காளியைக் கேலிச் செய்கிறான். அவளது கருத்த உடல் தன் சிவந்த உடலைத் தழுவியிருப்பது ஒரு கரும்பாம்பு சந்தனமரத்தைத் தழுவியிருப்பது போன் றுள்ளது என்கிறான். காளி நாட்டார்களின் கடவுளாக இருந்து பெருந்தெய்வ வழிபாட் டுக்குள் ஈர்க்கப்பட்டவள். பௌத்தப் புரட்சிக்குப் பின் கருப்பு நிறத்தை நேரடியாகத் தவிர்க்க முடியவில்லை. எனவே அதற்குச் சாயமடிக்கும் முயற்சிகள் தொடங்கின. இதற்காகப் புராணங்கள் கெட்டிக்காரத்தனமாக வடி வமைக்கப்பட்டன. தன் கருப்பு நிறம் பற்றிக் கவலைப்பட்ட காளிக்கு பிரம்மன் அவள் பொன்னிறம் பெறுவாள் என்று வரம் தருகிறான். அதன்படி காளி தன் தோலை உரித்து ஒரு கருநிறப் பெண்ணை உருவாக்கி ‘காளி’ எனும் பெயர் தந்து விந்தியமலைக்குச் செல்லுமாறு சொல்கிறாள். அங்கு அவள் ‘விந்தியவாசினி’ ஆகிறாள். பொன்னிறம் பெற்ற காளியோ ‘கௌரி’ ஆகிறாள் (டோனி வெண்டிகர், 2016).

அதேசமயம் நிறமிக் குறைப்பாடோடு தம் நிலத்தில் நுழைந்த ஆரியரைத் தமிழ் மக்கள் இனவெறுப்புடன் நோக்கவில்லை. அவர்களுக்குச் சூட்டப்பட்ட ‘பார்ப்பனர்’ என்கிற பெயரும் சூழலியல் அடிப்படையில்தான் சூட்டப்பட்டது. ஆரியர்கள் வெள்ளை நிறத்தில் இருந்ததால் அதற்குப் பொருத்தமான பெயராக ‘பார்ப்பனர்’ என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தனர். பார்ப்பு + அனர் = பார்ப்பனர். ‘பார்ப்பு’ என்றால் பறவை குஞ்சு. ‘அனர்’ என்றால் போன்றவர். எந்த நிறப் பறவையாக இருந்தாலும் அது குஞ்சாக இருக்கும்போது வெளுத்த நிறத்தில் தோற்றம் அளிக்கும். அந்த வெளுப்பான பறவை குஞ்சைப் போன்றவர் எனும் பொருளில்தான் ‘பார்ப் பனர்’ என்று பெயரிட்டனரே ஒழிய அதில் ‘சூத்திரர்’ என்கிற சொல்லைப் போலத் துளியும் வெறுப்புணர்வு கிடையாது.

மேலும் பார்ப்பனர்கள் தம்மை ‘இரு பிறப்பாளர்’ எனும் பொருளில் ‘த்விஜ’ என அழைத்துக் கொள்வர். இதற்கான விளக்கத்தில் ‘முட்டையில் இருந்து வெளிவரும் பறவையைப் போல இருமுறை பிறந்தவர்கள்’ எனப் பொருள் கூறுவர். இந்தப் பொருளில் பார்த்தாலும் ‘பார்ப்பனர்’ என்கிற சொல் மிகப் பொருத்தமான சொல் லாகவே அமைந்துள்ளது.

* * *

**திசைகள் தோறும் சாதியம்**

இந்திய ஒன்றியத்தில் பல நூற்றாண்டுகளாகச் சாதிய அமைப்பு எவ்வாறு நீடித்து வருகிறது என்கிற ஆய்வை சூழலியலாளர் மாதவ் காட்கில் அவர்களும், மானுடவியலாளர் கைலாஷ் மல்கோத்ராவும் ஆய்வு செய்தனர். ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுக்காலம் நடத்தப்பட்ட ஆய்வில்

இயற்கை வள பயன்பாடு எவ்வாறு சாதிய அமைப்புடன் நெருங்கியத் தொடர்புடையதாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்தனர். அவ்வகையில் சூழலியல் சாதியத் தொடர்பை வெளிக்கொணர்ந்தனர். ஒரு சூழல் வெளியும் (Ecological Space) அதன் மூலவளமும் (Natural Resources) ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்துள்ளது. அவர்களுக்கு நாம் பார்ப்பனர், சத்ரியர், வைசியர் என்று வெவ்வேறு பெயரிட்டு அழைத்தாலும் 'ஆரியர்' என்று அதைச் சுருக்க முடியும். இயற்கைவள துய்ப்பிலிருந்து அப்புறப் படுத்தப்பட்ட மண்ணின் மைந்தர்கள் சூத்திரர்களாகவும் சண்டாளர்களாகவும் சபிக்கப் பட்டதே வரலாறு.

கி.மு.1000-500-களில் வேத கால மக்கள் சிந்து-கங்கை ஆறுகளின் இடைப்பட்ட வண்டல் நிலத்தில் குடியேறியதில் இருந்து இது தொடங்குகிறது. அதற்கு முன்பு 'விரிஜனா' என்றழைக்கப்பட்ட மேய்ச்சல் வெளிகள் இலவச பயன்பாட்டில் இருந்தன. பின்னர் கங்கைச் சமவெளியில் இருந்த காட்டு மரங்களின் கனிகளும் வேர்களும் பார்ப்பனர்களின் சொத்தாக மாறின. அவற்றின் முதல் உரிமை பார்ப்பனர்களுக்கே என்று 'சாந்தி பர்வா' சட்டம் வகுத்தார். எதிரிகளிடமிருந்து பறிக்கப்பட்ட பசுக்களின் பாலைப் பார்ப்பனர்கள் குடிக்கலாம் என்பதால் அவற்றையும் அவர்களுக்கே உரிமையாக்கி சட்டம் இயற்றினார். சாணக்கியர் இன்னும் ஒருபடி மேலே சென்றார். சோமபான உற்பத்திக்காகப் பார்ப்பனர்களுக்குக் காடுகளை வழங்க வேண்டும் என்றார் (ஆர்.எஸ்.சர்மா, 2017).

எவ்வளவுதான் சோம பானம் குடித்துக் கொண்டிருக்க முடியும்? உண்ணுவதற்கு உணவு வேண்டாமா? வேளாண் நிலத்தை விரிவாக்க காடுகள் எரிக்கப்பட்டன. 'சதபதா பிராமணா' என்பவர் 'விதேக மாதவ' எவ்வாறு காடுகளை எரித்துக் கொண்டே முன்னேறி வடக்கு பீகாரிலுள்ள 'சடனிரா' வரை சென்றடைந்தனர் என்பதைக் குறிப்பிடுகிறார். தம் வாழ்விடமான காட்டிலேயே பல பழங்குடிகளும் பிற உயிரினங்களும் உயிரோடு எரிக்கப்பட்டனர். வாயு புராணமும் ஆரியர்கள் வன்முறையின் மூலம் ஆறுகள், நிலங்கள், குன்றுகள், மரங்கள், புதர்கள், தாவரங்களை அவர்கள் தம தாக்கிக் கொண்டனர் என்று ஒப்புக் கொள்கிறது (ஆர்.எஸ். சர்மா, 2017).

நிலம் கைவசமானதும் ஆரியரின் புவியியல் எல்லையைத் தீர்மானிக்கிறார் மனு. அதற்கு, 'ஆர்ய வர்த்தம்' என்று பெயரிடுகிறார். அது கிழக்கு கடலுக்கும் மேற்கு கடலுக்கும் இடையே வடக்கே இமயத்துக்கும் தெற்கே மால்வா மலைகளுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். கிருஷ்ண சாரம் எனும் கறுப்புக் கோடுகள் கொண்ட மான்கள் உலாவும் இந்த இடம்தான் வேள்விகள் செய்வதற்கு மிகச் சிறந்த இடமாகும். (ஏனெனில் இந்த மானின் தோல்தான் அன்றைக்குப் பார்ப்பனர்களின் மேலாடை) மற்றவை மிலேச்ச தேசம் எனப்படும் (மனு: 22-23).

உண்மையில் மத்திய ஆசியாவிலிருந்து தொடர்ந்து மாடு மேய்த்து வந்த இடங்கள் அனைத்தையும் உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்பது தான் ஆரியரின் 'அகண்ட பாரதம்' கனவு. அவர்களுடைய தொடக்க நூல்களும் அக் கனவையே தூண்டின. 'பிருது' என்கிற அரசனின் பெயருக்கே 'அகலமானது' என்பதுதான் பொருள். இச்சொல்லின் பெண்பால் வடிவம்தான் 'பிருத்வி', அதாவது 'நிலம்'. ஐரோப்பாவின் ஆரிய வெறியர் களான நாஜிகளும் 'லெபன்ஸ்ரோம்' (வாழுமிடம்) என்கிற பெயரில் தம் ஆக்கிரமிப்பை நியாயப் படுத்தி அகண்ட நிலம் தேடியதை இத்துடன் ஒப்பிட்டு நோக்கலாம் (டோனி வெண்டிகர், 2016).

இவ்வாறு சொத்து உருவானதும் வர்ணமுறை கெட்டிப் படுத்தப்பட்டது. 'புனித ஞானத் துக்குச் சொந்தமானவர்கள் 'பார்ப்பனர்' ஆயினர். வேட்டையாடுபவர்கள் மற்றும் அழிவை ஏற்படுத்துபவர்கள் 'சத்ரியர் கள்' ஆயினர். உழவர்கள் 'வைசியர்கள்' ஆனார்கள். துயரம் தாங்காது ஓடியவர்களும் உடல் உழைப்பாளிகளும் இழிவானவர்களும் பலவீனமானவர் களும் 'சூத்திரர்' என வகுக்கப் பட்டதாக வாயு புராணம் கூறுகிறது (ஆர்.எஸ்.சர்மா, 2017).

வண்டல் மண், இரும்புக் கலப்பை கூட்டணி ஆரிய வர்த்தத்தின் தானிய உற்பத்தியைப் பெருக்கியது. நாற்றுப் பிடுங்கி நடும் முறை உருவானதும் அவை இருமடங்காகி உபரி பெருகிற்று. இதனால் ஆடம்பரமான வேள்விகள் நடத்தி பார்ப் பனர்கள் 'பலி' பெற்றனர். பலி என்பது காணிக்கை. பார்ப் பனர்களோடு சத்ரியர்களும் இவ்வகை அன்பளிப்புகளைப் பெற்றனர். இதனால் உழைக்கும் மக்கள் பாதிப்படையத் தொடங்கினர். கி.பி. 3 மற்றும் 4 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்

சூத்திரர்களும் வைசியர்களும் தங்களுக்கு விதிக்கப் பட்ட கடமைகளைச் செய்ய மறுத்தனர். இதுவே சமஸ்கிருத அறிஞர் ஆர்.சி.ஹஸ்ரா என்பவரால் 'கலிகாலம்' என அழைக்கப்பட்டது (ஆர்.எஸ். சர்மா, 2017).

தொடக்க யுகமான கிருதயுகம் ஆரியர்களால் 'சத்ய யுகம்' எனப் புகழப்பட்டது. காரணம் அக்காலத்தில் அவர்கள் உழைக்கவில்லை, நூற்க வில்லை. நிலம் தானாகவே வேண்டியதை எல்லாம் வழங்கியது (டி.டி.கோசாம்பி, 2017). அடுத்தடுத்த யுகங்களான திரேத, துவாபர யுகத்தில் நிலைமை படிப்படியாக வீழ்ந்து கலவரமான கலியுகம் பிறந்து விட்டது. இதற்குமேல் விட்டு வைக்க முடியாது. சட்டங்களை இறுக்கி, 'தண்டநீதி' தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. வர்ணக் கடமையை மீறுபவர்களை அடக்கச் சத்திரியர்கள் அணியமாகினர். வாயு புராணத்தின்படி பிரம்மன் சத்திரியர்களுக்குப் போர் செய்வதைத் தொழிலாகப் பரிந்துரைத்தார் (ஆர்.எஸ்.சர்மா, 2017).

ஆரியவர்த்தம் முழுமையும் கட்டுக்குள் கொண்டுவர நால்வர்ணக் கொள்கைகள் நான்கு திசைகளுக்கும் விரிவடைந்தது. இதற்கு இராமாயணம், மகாபாரதக் கதைகள் உதவின. மகாபாரதத்தின் புவியியல் அச்சுக் கிழக்கு மேற்காகவும், இராமாயணத்தின் புவியியல் அச்சு வடக்கு தெற்காகவும் அமைந்திருந்தன. பஞ்சாப்பையும் வங்காளத்தையும் இணைத்த கிழக்கு மேற்காக அமைந்த 'உத்தரபாதா' வணிக வழியும், தெற்கு நோக்கி சென்ற தட்சிணபாதா வழியும்தான் இன்றைய தேசிய நெடுஞ்சாலைகளான சூழ 2 மற்றும் சூழ 7 ஆகியவை. இவை இரண்டும் சந்திக்கும் புள்ளியே காசி நகரம் (சஞ்சீவ் சன்யால், 2016). காசி என்ற பழங்குடியினர் வாழ்ந்த அந்நகரம், அவர்கள் விரட்டியடிக்கப்பட்டுச் சூத்திரர்கள் ஆக்கப்பட்ட பின்னர் 'வருணை ஆறும் அசி ஆறும் (இன்றைக்குச் சாக்கடையாக ஓடுவது) இணையும் 'வாரணாசி' ஆக்கப்பட்டது. காசி எனும் பழங்குடியினப் பெயர் மறக்கடிக்கப்பட்டது.

நால்வர்ணத்தாரின் பிணத்தைப் புதைக்கும் இடுகாட்டின் திசைகளும் தீர்மானிக்கப்பட்டது. சூத்திரர்களுக்குத் தென்திசை ஒதுக்கப்பட்டது (மனு5:92; அர்த்த சாஸ்திரம்.2:4). தெற்கே விந்தியமலை இருந்ததே காரணம். ஆரிய நாகரிகம் விந்தியத்துக்குத் தெற்கே நுழையாத மிகப்பழையக் காலத்தில் 'தக்கிணப் பாதம்' நாடு கடத்தப்பட்டோர்களின் இடமாகக் கருதப்பட்டது என்பது மெக்டொனால்ட் மற்றும் கெய்த் ஆகியோரின் கருத்தாகும். எனவே சதுர்வர்ணம் தென்னிந்தியாவில் எக்காலத்திலும் நடைமுறையில் இருந்ததில்லை (பி.டி.எஸ். அய்யங்கார், 1989).

விந்திய மலையைக் கடந்து ஊடுறுவாதபடி அங்கு வசித்த பழங்குடிகள் ஆரியர்களைத் தடுத்ததால் தெற்கு யமனின் திசையாகக் கருதப்பட்டது. அகஸ்தியரை விழுங்கிய வாதாபியின் கதை இதைதான் தெரிவிக்கிறது. இதனால் பழங்குடிகள் வசித்த அப்பகுதியில் (நிஷாட தேசத்தில்) புண்ணிய நதிகளும் இல்லாது போயிற்று. இதற்கு எதிர்நிலையில் தெற்கில் வசித்தவர்கள் வினையாற்றினர். தமிழ்நாட்டின் பெரும்பாலான நாட்டார் தாய் தெய்வங்கள் தொன்னூற்று ஒன்பது விழுக்காடு தம் நிலத்துக்கு ஆபத்தைக் கொண்டுவரும் திசையான வடக்கு நோக்கியே வீற்றிருந்து காத்து வந்தனர் என்கிறார் தொ.பரமசிவன் (தொ.ப. 2012).

தமிழர்களின் கூட்டு நனவிலி மனதில் இன்றைக்கும் வடக்கு ஆகாத திசைதான். 'வடக்கே தலைவைத்துப் படுக்காதே' என்கிற சொற்றொடரின் உளவியலும் இதுதான். இதை மறைப்பதற்காக இன்றைய இந்துத்துவா 'காந்தப்புலம்' போன்ற கதைகளை உருவாக்கி அளிக்கிறது. காற்றைப் பற்றிச் சங்க இலக்கியம் விரிவாகப் பேசியுள்ளது. அனைத்து திசையிலிருந்து வரும் காற்றை வரவேற்கும் அது வடக்கிலிருந்து வரும் 'வாடை' காற்றை மட்டும் பல இடங்களில், 'இரக்கமில்லாதது, கொடியது' என்று கடிகிறது. தமிழர்களுக்கு வடக்கிலிருந்து காற்று வந்தால்கூடப் பிடிக்கவில்லை; பின், காதல் மட்டும் எப்படி வரும்?

அனைத்தையும் மீறி பார்ப்பனியம் தமிழக எல்லைக்குள் நுழைந்ததும் அது உடன் அழைத்துவந்த சாதிய அழுக்கு தமிழகத்தின் திசைகளில் படிந்தது. தமிழக நில அமைப்பு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிவதாகும். மேற்கு மேடான பகுதி, கிழக்கு தாழ்வான பகுதி என்கிற இயற்கை அமைப்பையே அவர்கள் உயர்வு-தாழ்வு என்கிற சாதிய கருத்தியலாக மாற்றினர். இதனால் சேரியின் திசை கிழக்கு என்றானது. 'கீழத்தெரு, கீழ்குடி போன்ற சொற்கள் சாதியச் சொற்களாக மாறிவிட்டன. ●

# நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்...

**மனுஷ்யபுத்திரன்**

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்
நான் எப்போதும்
ஒரு வேட்டையாடப்படும் மிருகமாக இருக்கிறேன்

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்
இணக்கமாக வாழும் பொறுப்பு
எனக்குத்தான் முழுமையாக தரப்பட்டிருக்கிறது

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்
எப்போதும் நிபந்தனையற்று
விட்டுக்கொடுப்பவனாக இருந்திருக்கிறேன்

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்
நான் பேச வேண்டிய நேரத்தில் எல்லாம்
மௌனமாக இருக்க
நிர்பந்திக்கப்பட்டிருக்கிறேன்

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்
என் தேசபக்தியை நிரூபிக்க
எப்போதும் என் நெஞ்சைப்பிளந்து
காட்டி வந்திருக்கிறேன்

நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன் என்றால்
பயங்கரவாதிகளைத் தேடுபவர்களால்
முதலில் ஆடை கழற்றிப்பார்க்கப்படுபவனாக இருந்திருக்கிறேன்

ஆயினும் நான் ஒரு இஸ்லாமியனாகவே
இருக்க விரும்புகிறேன்
என் நெஞ்சில் நீங்கள்
கடைசியாகப் பாய்ச்சப்போகும்
ஈட்டியின் கூர்மையை
நான் காண விரும்புகிறேன்

உங்களை முகம் சுழிக்க வைக்கும்
அத்தரை உடலெங்கும் பூசிக்கொண்டு
ஒரு இஸ்லாமிய கதகதப்போடு
உங்களை அணைத்து
முகமன்கூற விரும்புகிறேன்

மேலும் ஒரு இஸ்லாமியனாக இருப்பது
தனியனாக இருப்பதல்ல
அது
ஒரு கூட்டு மனம்
ஒரு கூட்டுக் காயம்
ஒரு கூட்டுத்தண்டனை
ஒரு கூட்டுத் தனிமை
அதை இன்றுதான் அறிந்து கொண்டேன்.

(இராமர் கோயில் கட்ட அனுமதித்து உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன் எழுதியது.)

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN